கல்கி

KALKI 6·12·81 ரூ.1.20

ஜனநாயகம் இங்கு இறந்து விட்டதா?



தனித்தன்மை வாய்ந்த
இவரது தணியாத விருப்பம்
'ப்ளெயின்' ஷர்ட்டிங் மட்டும் அணிவதே



அதாவது மஃபத்லால் வழங்கும்
பாலியெஸ்டர் மற்றும் பாலியெஸ்டர்
ப்ளெண்டுகளின் ஷர்ட்டிங்.

அவருக்கென ஒரு தனி பாணி, தனி ரசனை.
பறைசாற்றமாட்டார், என்றும் பவ்வியமாக இருப்பார்.
தனக்கே உரிய தனித் தோற்றத்தை வலியுறுத்துவார்.

மஃபத்லால்
ஷர்ட்டிங்

MF-124-TAM



வரி விளம்பரங்கள்
யோகாசன ஆசிரியர்
அச்சம் கொள்ளாதே! நடப்பது நடந்தே தீரும். கடமையைச்செய். இந்த கீதை வாக்குப்படி வாழ, சேருங்கள் மொரார்ஜி தியான நிலையம்..
இந்திரா ஏர்வேஸ் - உள்ளூர்ப் பிரச்னைகளை மறந்து வெளிநாடுகளில் உல்லாசமாகப் பொழுதைக் கழிக்க... புறப்படுங்கள் இன்றே!
'அலை ஓய்ந்த பின் சமுத்திர ஸ்நானம்' -புதுமையான நாடகம். அஸ்ஸாம் மாணவர் குழு பங்கேற்பது. தயாரிப்பாளர்: ஜெயில்சிங்
மனோகர ஜோதிட நிலையம். அரசியல் கணிப்புகளைச் சரியாகத் தெரிவிக்கும் இடம். கணிப்புத் தவறினால் அதற்குப் பரிகாரமும் சொல்லப் படும்!
பஞ்சாங்கம்
சாதகம் பார்த்தப் படும்
மிக நீ..ண்...ட காலத் தவணையில் கடன்வசதி செய்து தர அணுகுங்கள் வெங்கட்ராமன் பைனான்ஸ்!
மோதிலால்
ஜவஹர்லால்
இந்திரா
சஞ்சய் ராஜீவ்
வாழ்க்கையில் முன்னேற வேண்டுமா? தைரியமாகப் பேசிப் பழக வேண்டுமா? தன்னம்பிக்கை பெறச் சேருங்கள்: ராஜீவ் இன்ஸ்டிடியூட் ஆஃப் பப்ளிக் ரிலேஷன்ஸ்!
—கற்பனை: ஈஸ்வர்குமார்

"அன்புடையீர்,
வணக்கம். வருகிற டிசம்பர் 8ந்தேதி கல்கி, ராஜாஜி சிறப்பிதழாக வெளி வருகிறது. இந்தச் சிறப்பிதழில் "ஜனநாயகம் இங்கு இறந்து விட்டதா?" என்ற தலைப்பில் பல்வேறு கட்சிகளைச்சார்ந்த, கட்சிச்சார்பற்ற, தேசிய, மாநிலத் தலைவர்களின் கருத்துக்களைப் பெற்று வெளியிட இருக்கிறோம். தாங்களும் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ள வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
ஜனநாயகம் உண்மையிலேயே மடிந்து விட்டதா, அல்லது மடிந்து கொண்டு இருக்கிறதா, இல்லை ஆரோக்கியமாகவே இருக்கிறதா என்று குறிப்பிடுகையில் அதற்குச் சரியான ஓரிரு எடுத்துக்காட்டுக்களைச் சொல்லிச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். நன்றி."

இந்தக் கடிதத்தைப் பல்வேறு தலைவர்களுக்கும் முக்கியஸ்தர்களுக்கும் அனுப்பியதில் கிடைத்த பதில்களை இங்கு பிரசுரிக்கிறோம்.
-ஆசிரியர்



ஜனநாயகம் இங்கு இறந்து விட்டதா?

குற்றவாளி இந்திரா காங்கிரஸ் மட்டுமல்ல!

ஜனநாயகம் இந்த நாட்டில் மடியுமானால் அதற்குக் காரணம் (இ) காங்கிரஸாக மட்டும் இராது. எதிர்க் கட்சியினரும் அந்தத் துயரகரமான நிகழ்ச்சிக்குத் தங்களாலான கைங்கரியத்தைச் செய்திருப்பார்கள்! இவ்விதம் நேரக் கூடாது எனில் எதிர்க் கட்சிகள் உடனடியாகச் சரியான பாதைக்குத் திரும்ப வேண்டும். ஃபாஸிஸத்துக்கு எதிராக ஒரு கூட்டணியை அமைக்க வேண்டும். மக்கள் தங்கள் ஜனநாயக உரிமைகளைத் தற்காத்துக்



ஜார்ஜ் பெர்னாண்டஸ்

கொள்ள அவர்களை ஒன்றுபடுத்திச் சீரமைக்க வேண்டும்.

நமது ஜனநாயக அரசியல் துருப்பிடித்து வருகிறது எனில் அதன் பின்னணியில் இந்தியாவின் மேன்மையாளர்கள் தங்கள் ஜாதியையும், வகுப்பையும் பாதுகாத்துக் கொள்ளத் தீவிரமாக முயன்று வருவதைக் கவனிக்க வேண்டும். சமுதாய ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் தாழ்த்தப்பட்டோர் இன்று பெற்று வரும் விழிப்புணர்ச்சி, செல்வத்தையும், அதிகாரத்தையும் இத்தனை காலமாக ஏகபோகமாக்கிக் கொண்டிருந்தவர்களை நடுநடுங்க வைத்துள்ளது. ஜனதா கட்சியின் தோல்வி பல்வேறு தலைவர்களின் போட்டா போட்டியையும் மாறுபட்ட கருத்துக்களையும் சமாளிக்க முடியாமல் சிதறியதில் மட்டுமல்ல. அன்றுவரை ஆண்டுகொண்டிருந்த கட்சிக்கு எதிரான மாற்றுக் கொள்கைகளையும் திட்டங்களையும் சரிவர வகுக்க முடியாமல் போனதிலும் ஜனதா பெரும் தோல்வி கண்டது.

உதாரணமாக நமது பொருளாதாரப் பிரச்னைகளுக்கு அடிப்படையான லஞ்ச ஊழல் எங்கு பார்த்தாலும் ஊடுருவி இருந்தது. இந்தப் பிரச்னையின் அடிப்படையில்தான் ஜெயப்பிரகாஷ் நாராயண் மக்களை — குறிப்பாக — இளைஞர்களை — ஒன்று திரட்டினர்.

காங்கிரஸ் கட்சிக்கு கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க் கட்சியாக இருக்கிறதே என்றால் அது போதாது. சோஷலிஸத்துக்குச் சரியான எதிர்ப்பு கம்யூனிஸம் அல்ல. கன்ஸர்வேடிஸம்தான். தராசின் இரு தட்டுக்களைப் போல் இந்த இரண்டு கட்சிகளையும் சம பலமுள்ள இரு தலைவர்கள் வழிநடத்திச் செல்ல வேண்டும். இந்தத் தலைவர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் பாடம் கற்கவும் தயாராக இருக்க வேண்டும்.

—ராஜாஜி



இருப்பினும் ஜனதா சர்க்கார் லஞ்ச ஊழலுக்கு எதிராகச் செயல்பட வேண்டும் என்ற எனது முயற்சிகள் அனைத்தும் தோற்றுப் போயின. நாங்கள் பதவிக்கு வருமுன்னர் யார் யாரையெல்லாம் லஞ்ச ஊழல் பேர்வழிகள் என்று கூறிப் போர்க்கொடி உயர்த்தியிருந்தோமோ அவர்களில் ஒருவர் மீதுகூட ஜனதாக் கட்சி சட்டரீதியாக நடவடிக்கை எடுத்துத் தண்டனை பெற்றுத் தரவில்லை.

ஜனங்களுக்காக ஜனதா என்ன புதிய மார்க்கங்களைத் திறந்து விட்டது? நமது ஆட்சி முறையில் என்னென்னவெல்லாம் கொடுமைகள் உள்ளன என்று எடுத்துக் காட்டிப் போராடியபோது மக்களுக்குத் தந்த வாக்குறுதிகளில் எதை நிறைவேற்றினோம்?

ஸ்ரீமதி காந்தி தமது எதேச்சாதிகாரப் போக்கினையும் வம்சாவழி ஆட்சியில் உள்ள ஆசையையும் ரகசியமாக வைத்துக்கொள்ளவில்லை. அவரும் அவரைச் சுற்றியுள்ள கும்பலும் ஜனநாயக விரோதிகள்தாம். ஆனால் ஜனநாயகத்தில் பற்றுள்ளவர்கள் — அதன் வெளி வடிவத்தில் அல்லாது ஒட்டு மொத்தமான அதன் தத்துவத்தில் பற்றுள்ளவர்கள்— ''இதோ என்னை எண்ணிக் கொள்ளுங்கள்'' என்று கூறி எழுந்து நிற்பார்களா?

ஒரு ஞானி கூறியதை எடுத்துச் சொல்லி முடிக்கிறேன்: ''ஜனநாயகம் ஒரு சர்வாதிகாரியின் கரங்களால் கொல்லப்படுமானால் அதற்கு முன்பாகவே ஜனநாயக வாதிகளின் இதயத்தில் அது இறந்து விட்டதாக அர்த்தம்!''

புதுடில்லி — -ஜார்ஜ் பெர்னாண்டஸ்

காலம் வரும்போது தலைவன் தோன்றுவான்!

● மனித சரித்திரத்தில் இன்று இந்தியாவில் உள்ளது போல் இவ்வளவு பெரிய ஜனநாயகம் வேறு இருந்ததில்லை. மனித சமுதாயத்தில் ஏழில் ஒரு பகுதியினர் பங்கேற்கும் ஜனநாயகம் இது. ஆனால் இந்த ஜனநாயகம் இன்று ஆட்டம் காண்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இப்படியே பல ஆண்டுகளுக்கு, பல தலைமுறைகளுக்கு நீடிக்கலாம்; அல்லது கட்டிடம் நாம் நினைப்பதை விடவும் சீக்கிரமாகவே தகர்ந்து விடலாம். இப்படி நேராதிருக்க வேண்டுமானால் சிந்தனை சக்தி படைத்த மக்கள் தன்னலமின்றி ஜனநாயகப் பணியாற்ற முன்வரவேண்டும்.

பெரும்பாலான மக்களின் சம்மதம் பெற்று ஆட்சிக்கு வருவதுதான் ஜனநாயகம் என்பது. ஆனால் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்தைச் சிறுபான்மையான மக்களின்மீது திணிப்பது கொடுமையாகுமே யன்றி ஜனநாயகமாகாது. —ராஜாஜி

தேசிய மறுமலர்ச்சி உருவாகச் சில அடிப்படை அம்சங்கள் தேவை. முக்கியமானது தார்மீகத் தலைமை. அரசியல் தலைமை போதாது. தார்மீகத் தலைமைதான் இன்று குவிந்துள்ள குப்பை கூளங்களை அகற்ற முடியும், வரலாறு காணாத அளவில் பெருகியுள்ள லஞ்ச ஊழலைப் பொது வாழ்விலிருந்தும் ஆட்சியிலிருந்தும் விரட்ட முடியும்.

இரண்டாவதாக அரசியலை மட்டுமே தொழிலாகக் கொண்டவர்களிடம் நமது நாட்டின் ஆட்சிப் பொறுப்பை இன்னும் விட்டு வைக்கக் கூடாது. இவர்களுக்கு அரசியல் சோறு மட்டும்தான் போடுகிறது என்றில்லை; வடை பாயசத்துடன் பெரு விருந்தையும் பெற்றுத் தருகிறது. எல்லா ஜனநாயக அமைப்புக்களிலும் திறமை, அறிவு, ஒழுக்கம் மிக்க உயர் மக்கள் இருப்பார்கள். இந்த உயர் மக்கள் பொதுவாழ்வு என்பது எவ்வளவு கசப்பாக இருந்தாலும், பொருட்படுத்தாமல் அதில் ஈடுபட முன்வர வேண்டும். முன்னேற்றம் என்பது மக்களிடமிருந்துதான் தோன்ற




✖ நானி ஏ. பால்கிவாலா

வேண்டும். அறிவாற்றலும் நேர்மையும் உடையவர்கள்தான் மக்களின் ஒத்துழைப்பை முழுமையாகப் பெற முடியும். மக்கள் ஒத்துழைப்புஇன்றி எந்தத் திட்டமும் பாழ்தான். அரசு நிர்வாகிகள் தங்களை வழிநடத்திச் செல்கிற தீர்க்கதரிசிகள் இன்றிச் செயலற்றுப் போயிருக்கிறார்கள்.

இதற்கு என்ன செய்ய வேண்டும் என்று யோசிப்போமானால் அரசியல் சாசனத்தில் அதன் அடிப்படை அம்சங்களைப் பாதிக்காதபடி ஆரோக்கியமான ஒரு மாற்றத்தைச் செய்யலாம் என்று தோன்றுகிறது..

மத்தியிலே பதவிக்கு வரும் ஓர் அமைச்சர், ஆறு மாதங்களுக்குள் நாடாளு மன்ற உறுப்பினராக வேண்டும் என்று நமது அரசியல் சாசனத்தின் 75வது ஷரத்து கூறுகிறது. இதிலே ஒரு மாற்றம் செய்யலாம். அதாவது, இந்த ஷரத்து பெரும்பான்மை அமைச்சர்களுக்குப் பொருந்தும் என்றாலும், குறைந்த பட்சமாகச் சிலரைப் பிரதமர் நாடாளு மன்



நத்துக்கு வெளியே இருந்து தேர்ந்தெடுத்து அவர்களை அமைச்சர்களாக்கலாம். அந்தச் சிலர் நாடாளு மன்றத்தின் உறுப்பினராகத் தேவையில்லை எனலாம். ஆனால் இப்படி நாடாளுமன்ற உறுப்பினராய் இல்லாத அமைச்சர்களும் நாடாளுமன்றத்துக்குப்பதில் கூறக் கடமைப்பட்டிருப்பார்கள் என விதிக்கலாம். எனவே மந்திரி சபையின் கூட்டுப் பொறுப்பு என்ற தத்துவம் பாதிக்கப்படாது. இவ்வாறு செய்தால் பிரதமர் நாட்டின் தலை சிறந்த அறிஞர்களை அமைச்சரவையில் இடம் பெறச் செய்து தேச முன்னேற்றத்துக்குப் பணியாற்ற முடியும். இதே போன்று மாநில அளவிலும் முதல்வர்கள் செயல்படத் தேவையான திருத்தத்தை அரசியல் சாசனத்தில் செய்யலாம்.

இதற்கு மறுபுறமாக இன்னொரு திருத்தத்தையும் யோசிக்கலாம். ஒரு எம். பி. அமைச்சரவையில் இடம் பெற்றதும் அவர் தமது நாடாளு மன்ற உறுப்பினர் பதவியை இழந்துவிடுகிறார் என்று திருத்தம் கொணரலாம். அவருக்குப் பதில் வேறு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட, இவர் தமது தொகுதி பற்றிய அரசியல் கவலைகளை மறந்து முழு கவனத்தையும் நாடு மொத்தத்தின் முன்னேற்றத்துக்கே தர முடியும் — அமைச்சர் என்ற முறையில்.

இறுதியாக ஒன்று: பொருளாதார முன்னேற்றம் இன்றி சோஷலிஸம் என்பது வெற்றுக் கோஷமாகத்தான் இருக்க முடியும். இதை உணர்ந்து முதலில் தொழில் வர்த்தக முன்னேற்றத்துக்கு ஆவன செய்ய வேண்டும். தனியார் துறையைப் பகைவன் போல் ஆட்சி நினைக்கிற நிலை மாற வேண்டும். லஞ்சத்தையும் கறுப்புப் பணத்தையும் கள்ளச் சந்தையையும் பெருக்கும் அர்த்தமற்ற கண்ட்ரோல்களை நீக்க வேண்டும்.

எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்தியா இப்படியே இருந்து விடாது. காலம் வரும் போது சிறந்த தலைவன் தோன்றுவான்.

பம்பாய் **நானி ஏ. பால்கிவாலா**

இரண்டு அடிப்படை அம்சங்கள்

● ஜனநாயகத்தில் இரண்டு அடிப்படை அம்சங்கள் (1) கட்சிகளுக்கு இடையே மட்டுமின்றிக் கட்சிக்குள்ளேயே நடக்கும் விவாதங்கள், (2) மாற்றுக் கருத்துக்களைக் கிரகித்துக்கொள்கிற ஆற்றல். இந்தியாவில் இந்த இரண்டுமே இல்லை என்பது தெளிவு. தலைவர்கள் தாங்களாகவே உருவாக வேண்டும். அதற்கு இடம் தராமல் தலைவர்களை நியமிப்பதே வழக்கமாகி விட்டது. எல்லா மட்டங்களிலும் தேர்தல்களுக்குப் பதில் மேலிடத்தின் அபிப்பிராயத்துக்கு வளைந்து கொடுப்பதே காரியமாகி விட்டது. வம்சாவழி ஆட்சியை ஸ்திரப்படுத்துவதற்காகத் தேசிய நலன்கள் அடிமைப்படுத்தப்படுகின்றன. சமுதாய — பொருளாதார ரீதியில் வழி தப்பித் தவறுகள் இழைக்கப்படுவதால் செல்வத்தைப் பகிர்ந்தளிக்கிற நீதி முறையைக்காவு கொடுத்தாகி விட்டது. ஜனநாயக அமைப்பில் ஏதேனும் கொஞ்ச நஞ்சம் பாக்கி யிருக்குமானால் அதையும்



ஹெச். என். பகுகுணா

அழித்துவிட இன்றைய ஆளும் கட்சி தீவிரமாக முனைந்து வருகிறது.

இப்போது, நீங்கள் கேட்டுள்ள கேள்விக்குப் பதிலை நீங்களே ஊகித்துக் கொள்ளலாம்!


ஹெச். என். பகுகுணா
தலைவர்,
ஜனநாயக சோஷலிஸ முன்னணி

இரும்புப் பிடி

● ஜனநாயகம் அதன் அமைப்புக்களின் மூலம் இயங்குகிறது. அரசியல் சாசனம், ஒரு குறிப்பிட்ட முறையில் ஆட்சி நடக்க வேண்டும் என்ற மக்களின் உறுதியை வெளிப்படுத்துகிறது. நல்ல நோக்கங்களை அறிவித்து, அந்த நோக்கங்கள் மகிழ்ச்சி மிக்க சமுதாயமாக எப்படி உருப்பெறலாம் என்பதற்கான வழிமுறைகளையும் வகுத்துள்ளது சாசனம்.

நமது மக்கள் தங்கள் ஒட்டுமொத்தமான ஞானத்தால் தங்களுக்குத் தாங்களே வகுத்

யோக்கியமாக நடப்பவர்களுக்கே தேர்தலில் ஆதரவு கொடுக்க வேண்டும். யாரையாவது கண்டு பயந்தோ, லஞ்சம் பெற்றுக் கொண்டோ அல்லது கண்ணை மூடிக் கொண்டு யோசனை இல்லாமலோ பெட்டியில் ஆதரவுச் சீட்டுப் போடுவ தென்பது ஊரைக் கெடுத்த பாவமாகும். தேர்தலுக்கு முன் விஷயங்களை ஆலோசித்து, தைரியமாகவும், நியாயமாகவும், ஆதரவுச் சீட்டுக்கள் போடும் பழக்கம் ஏற்பட்டால்தான் சரியான அரசாட்சி அடைவோம்.
—ராஜாஜி



துக்கொண்ட இச்சாசனப்படி சட்டங்கள் இயற்ற ஒரு நாடாளு மன்றத்தையும் நம்மிடையே எழும் சச்சரவுகளைத் தீர்க்க நீதித் துறையையும் தோற்றுவிக்குமாறு கோரினர். மேலும் தடங்கலின்றித் தகவல்கள் பெறவும், தங்களின் பிரதிநிதிகளாக யார் யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று நியாயமான முடிவுக்கு வரவும் உதவும் வகையில் பத்திரிகைச் சுதந்திரத்தை அளிக்குமாறு வேண்டினர். அரசின் கொள்கைகளை அமல் நடத்த ஒரு நிர்வாக இயந்திரத்தை ஏற்படுத்தக் கோரினர். பொதுவாக உள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்குப் பல்வேறு யோசனைகளையும் கொள்கைகளையும் செயல் திட்டங்களையும் எடுத்துக் கூற அரசியல் கட்சிகளைத் தோற்றுவிக்குமாறு கேட்டனர். அமைதி காக்கப் போலீஸையும், சட்டங்களை அமல்படுத்த இதர அமைப்புக்களையும் உருவாக்கச் சொல்லினர். நமது எல்லைகளைக் காக்கமுப்படைகள்;



✕ பீலு மோடி

மருத்துவமனைகள்; கல்வி நிலையங்களை நிர்வகிக்க சுயாட்சி அமைப்புக்கள் எல்லாம் ஏற்படுத்துமாறு கூறினர். இவையும் இதே போல் வேறு முக்கியமான பல காரியங்களில் ஈடுபட்டிருக்கும் பல அமைப்புக்களும் தடங்கலின்றியும் உறுதியாகவும் கடமையாற்றுவதன் மூலமே ஜனநாயகமும், அரசாங்கமும் மக்களின் மகிழ்ச்சியும் உறுதி கூறப்பட்டன.

ஆனால் இந்த அமைப்புக்களின் இன்றைய ஆரோக்கியத்தை ஆராய்ந்தால் இவை எல்லாவற்றையும் ஆட்சியாளரின் இரும்புப் பிடிக்குள் நழுவ விட்டு விட்டோம் என்பதையும் அந்த ஆட்சியாளரையும் ஒரு பிரதம மந்திரியின் இரும்புப் பிடிக்குள் நழுவ விட்டு விட்டோம் என்பதையும் உணரலாம். இந்தப் பிடிகள் தளர்கின்ற அளவுக்கு ஜனநாயகம் பிழைக்கும்.

என் அபிப்பிராயத்தில் இந்தப் பிடி அழுத்தமாகவே இருக்கிறது; ஆனால் சீக்கிரமே பலவீனமடையவும் போகிறது.

புது தில்லி

பீலு மோடி
நாடாளு மன்ற உறுப்பினர்


குழப்பக் காட்டில் ஒரு தெளிவான குரல்!

ஜனநாயகம் சிறிது சிறிதாக வேதனைப் பட்டுப் பட்டு இந்தியாவில் செத்துக் கொண்டிருக்கிறது. சோஷலிஸம் என்ற விஷக் கன்னிகை இந்தியாவின் உடல், மனம், ஆன்மா, அனைத்தையும் விஷமாக்கி விட்டாள். 'சோஷலிஸம்'', 'ஏழைமையை ஒழிப்போம்' போன்ற கோஷங்களை எழுப்பிக்கொண்டே நம்ப முடியாத அளவுக்கு அதிகாரங்களைத் தம்மிடத்தில் குவித்துக் கொண்டு இருக்கும் அரசியல்வாதிகள் தங்கள் கட்சிக்குள்ளேயே ஜனநாயகத்தை அழித்து ஒழித்து விட்டனர். நீதித் துறையை வெலவெலத்துப் போகச் செய்து விட்டனர். ஜனநாயகத்தின் பலம் வாய்ந்த பிரதான தூண் சுதந்திரமான நீதித் துறை. ஆனால் மக்களுக்கு நீதித் துறையிலேயே இன்று நம்பிக்கை குறைந்து வருகிறது. நீதித் துறை சுதந்திரம் இழந்துள்ளது என்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது. அந்துலேயின் ''இந்திரா காந்தி பிரதிபா பிரதிஷ்டான்'' அறக்கட்டளைபற்றி இத்தனை சர்ச்சைகள் எழுந்த பின்னரும் பம்பாய் உயர்நீதி மன்றத்தில் இன்று பதவியில் இருக்கும் இரு நீதிபதிகள் அதில் அறங்காவலர்களாக இன்னமும் இருந்து வருகிறார்களே, இந்நிலையை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் யாரேனும் கற்பனை செய்துகூடப் பார்த்திருக்க முடியுமா? இதனை சுப்ரீம் கோர்ட் வக்கீல்கள் சங்கம் உட்பட இந்தியாவில் உள்ள நூற்றுக் கணக்கான வக்கீல்கள் சங்கங்கள் ஆட்சேபித்த பின்னரும் அவர்கள் டிரஸ்டிகளாக நீடிக்கிறார்களே!

ஜனநாயகத்தின் இன்னொரு தூணைய பத்திரிகைகளை எடுத்துக் கொள்ளுங்கள். ஆளும் கட்சி அரசியல்வாதிகள் தங்கள் இஷ்டப்படிதான் பத்திரிகைகள் நடந்து கொள்ள வேண்டும் என்று கிடுக்கிப் பிடி போட்டு அழுத்தம் தருவதில் கணிசமான அளவு வெற்றி கண்டு விட்டனர். ஆயினும்

''நான் சொல்வது விநோதமாகத் தோன்றலாம்; ஆனால் இறை உணர்வை வளர்த்தாலன்றி ஜனநாயகத்துக்கு எதிர்காலமில்லை. ஜனநாயகம் ஸ்திரப்பட சட்டத்தின் ஆட்சி மட்டும் போதாது. தார்மீக நெறிகள் தழைக்க வேண்டும். தர்மத்தைப் போதிப்பது மதங்களே. ஆட்சி, மதச் சார்பற்றதாய் இருக்கட்டும்; ஆனால் இறையுணர்வைப் புறக்கணிப்பதாய் இருக்கலாகாது. எம்மதமும் சம்மதம் என்று இறையுணர்வை வளர்க்க வேண்டும். இவ்விதமாக தார்மீக உணர்வுகள் பலப்படுத்தப்பட்டாலன்றி ஜனநாயகம் தோல்வியே அடையும்.

—ராஜாஜி



பத்திரிகைகள் இன்னமும் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள வீரத்துடன் போரிட்டு வருகின்றன.

அரசியல்வாதிகள் இப்போது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஊடுருவி தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி வருவதால் பொதுவாக இந்தியாவில் நற்குணங்களுக்கும் மானுட தர்மங்களுக்கும் நெருக்கடி தோன்றியிருக்கிறது. ராஜாஜி சொன்னது சரியாகி விட்டது. ''தர்மத்தை ஒதுக்கி வைத்து விட்ட அரசியல் ஜனநாயகத்தை அழித்து விடும். இந்தியாவைப் பாழ்படுத்திவிடும்''



✕ மது மேத்தா

என்றார். ராஜாஜியின் குரல்-இங்கே நிலவிய குழப்பக் காட்டில் தெளிவான குரலாக ஒலித்தது. இன்று நாம் நமது அரசியல்வாதிகளின் பைத்தியக்காரத்தனமானசெயல்களின் பின் விளைவுகளை மௌனமாகவும் நம்பிக்கை இழந்தும் அனுபவிக்கிறோம். இப்போதுதான் தர்மத்தை மீண்டும் நிலை நாட்ட நாம் முழு மூச்சுடன் உழைக்க வேண்டும். இப்போது இதில் தவறினால் பிறகு எப்போதுமே முடியாமல் போகும்.

பம்பாய் — **மது மேத்தா**
தேசியத் தலைமையகம்,
இந்தியாவின் சேவையில் இந்தியர்கள்

பர்மிட் லைசென்ஸ் ஆட்சியில், அதிகாரத்தில் இருக்கும் கட்சி ஏராளமான பணம் திரட்ட முடிகிறது. அதனால் அதுவே திரும்பத் திரும்பப் பதவிக்கு வரவும் முடிகிறது. ஜனநாயகம் என்ற பெயரில் ஒரு கட்சியே திரும்பத் திரும்பப் பதவிக்கு வரமுடியுமானால் ஜனநாயகம் அர்த்த மற்றதாகி விடுகிறது. இந்நிலையைச் சர்வாதிகாரம் என்றுதான் கூற வேண்டும். ஆண்டுகள் செல்லச் செல்ல சர்வாதிகாரப் போக்கே அதிகரிக்கும். சுதந்திர ஆர்வமுள்ள எல்லாத் தலைவர்களும் இதைப் பார்த்துக் கொண்டு சும்மா இராமல் செயல்பட வேண்டும். இது தான் நமது பிரச்னைகளில் தலையாயது.

- ராஜாஜி

பேராபத்து, மக்களின் மனநிலையே!

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

● அடுத்த ஜனாதிபதி தேர்தல் இன்னும் சில மாதங்களில் வரப்போகிறது. அரசியல் நிர்ணயச் சட்டத்தையே கிழித்துப் போட்டாலும் கூட அதற்குக் கையெழுத்திடத் தயாராக இருப்பவர்தான் அடுத்த ஜனாதிபதியாக வருவார், பல ஹைகோர்ட்களிலும், சுப்ரீம் கோர்ட்டிலும், ஆளும் கட்சிக்கு வேண்டியவர்களே நீதிபதிகளாக நியமிக்கப் படுவார்கள். அதற்குப் பிறகு, இந்த அரசின் ஜனநாயக விரோதச் சட்டங்களை எதிர்த்து, நீதிமன்றங்களை அணுகிப் பயனில்லை என்ற நிலை ஏற்படும்.

அப்படிப்பட்ட ஒரு நேரத்தில், பாராளுமன்ற ஜனநாயக முறைக்கு 'டாடா' சொல்லி விட்டு, ஜனாதிபதி ஆட்சி முறை என்று பெயர் வைத்து, தங்கள் பரம்பரை சர்வாதிகாரத்திற்கு ஏற்பாடு செய்து கொள்வது இந்திராவுக்கு எளிதான காரியமாகிவிடும். ஜனாதிபதி ஆட்சி முறை பற்றிப் பேச்சு இருக்கிறதே தவிர, 'எந்த விதமான ஜனாதிபதி ஆட்சி' என்பது பற்றி இன்னமும் ஆளும் கட்சியினர் எதுவுமே சொல்லவில்லை. என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.


இப்படியெல்லாம் நடக்கும்வரை, இந்த அரசின்எதேச்சாதிகாரச்சட்டங்களை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்காடி, மக்களின் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள வாய்ப்பு



✕ சோ

இருக்கும். ஆளும் கட்சியினரே நீதிமன்றங்களை அலங்கரிக்கும் நிலை வந்துவிட்டால் இந்த வாய்ப்பும் போய்விடும்.

இவை எல்லாவற்றையும் விடப் பெரிய ஆபத்து ஒன்று இருக்கிறது. மக்களின் மனநிலைதான் அது. 'எல்லாமே மோசம். ஏதோ நடக்கட்டும்' என்ற மனப்போக்கு மக்களிடையே நீடித்தால் சர்வாதிகார சக்திகளுக்கு நாட்டைப்பட்டயம் எழுதிக்கொடுத்த மாதிரிதான்.



இந்தச் சூழ்நிலையில் ஜனநாயகம் எப்படி இருக்கிறது என்று கேட்டால் என்ன சொல்வது? இறந்துவிடவில்லை. மூச்சு இருக்கிறது. ஆனால் படுத்த படுக்கையாகக் கிடக்கிறது. ஹார்ட் ட்ரபிள். சர்வ ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

சென்னை ''சோ''

ஆட்டுவித்தபடி ஆடும் பொம்மைகள்!

● ஜனநாயக ஆட்சி முறை நிலைபெற ஜனநாயக ரீதியில் இயங்கும் கட்சிகள் இன்றியமையாதனவாகும். கட்சிகளே இல்லாத நாட்டில் சர்வாதிகாரம் சுலபமாக அரியணையில் அமரும்.

இன்று இந்தியாவில் திட்டமிட்டுக் கட்சி அமைப்புக்களைச் சாகடிக்கும் வேலை நடைபெற்று வருகிறது. திருமதி இந்திரா காந்தி அவர்கள் 1969ம் ஆண்டிலும், அடுத்து 1978ம் ஆண்டிலும் திட்டமிட்டுத் தனது சொந்தக் கட்சியைப் பிளவுபடுத்தி காங்கிரசுக்குள் ஜனநாயகத்தினைச் சாகடித்தார். ஜனநாயக ரீதியில் அக்கட்சி இயங்காதபடி தடுத்து விட்டார். மேலிருந்து கீழ்வரை கட்சியின் சகல மட்டங்களிலும் திருமதி இந்திராவினால் நியமிக்கப்பட்டவர்களே கட்சிப் பதவிகளில் உள்ளனர். கட்சி உறுப்பினர்களால் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தப் பதவிகளுக்கு இவர்கள் வரவில்லை. இந்திராவினால் நியமிக்கப்பட்டு இப் பதவிகளில் வந்தவர்களாதலால் இந்திராவுக்குக் கட்டுப்பட்டவர்களாக நடந்து கொள்கின்றனர்.

ஆட்சி முறையிலும் இதே உபாயத்தை இந்திரா கையாள்கிறார். மாநில முதல்வர்கள் அந்தந்த மாநிலங்களில் சட்டமன்ற கட்சிகளினால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. நேரடியாக இந்திராவினாலேயே மாநில முதல்வர்கள் நியமிக்கப்படுகிறார்கள். எனவே இவர்கள் இந்திராவுக்கு விசுவாசமாக இருக்கிறார்களே தவிர சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பதில்லை. மாநில முதலமைச்சர்கள் எதைச் செய்வதானாலும் மாநில மக்களின் நலன்,



✖ ப. நெடுமாறன்

சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் இவற்றை அடிப்படையாகக்கொண்டு செயல்படாமல் இந்திராவின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பச் செயல்படும் நிலைமை நீடிக்கிறது. இதன் விளைவாக சட்ட மன்றங்களின் தரம் தாழ்ந்து விட்டது. செய்ய வேண்டிய கடமைகளைச் சட்ட மன்றங்கள் செய்ய முடியவில்லை. அந்துலே விவகாரத்தில் மகாராஷ்டிர சட்ட மன்றம் தனது கடமையை ஆற்ற முடியாது தடுக்கப்பட்டது சரியான உதாரணமாகும்.

மாநில மக்களின் நலன்கள் காற்றில் பறக்க விடப்படுகின்றன. இந்திரா ஆட்டுவித்தபடி ஆடுகின்ற பொம்மைகளாக முதல்வர்கள் ஆக்கப்பட்டு விட்டார்கள்.

இவ்வாறு கட்சியிலும், ஆட்சியிலும் ஜனநாயக வழிமுறைகளுக்குத் துளிக்கூட இடமில்லாது ஒழித்துவிட்ட இந்திரா, திட்டமிட்டுச் சர்வாதிகாரப் பாதையில் சென்று கொண்டிருக்கிறார் என்பதிலும், பாரத நாட்டின் ஜனநாயக அமைப்புகள் கொஞ்சம் கொஞ்சமாகச் சாகடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதிலும் ஐயமில்லை.


மதுரை **ப. நெடுமாறன்**
எம். எல். ஏ.

ஒரு கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டதான மற்ற பிரச்னைகளைப் பற்றி கட்சிக்குள் தாராளமாக விவாதிக்க சுதந்திரம் இருக்க வேண்டும். இதுதான் மெய்யான ஜனநாயகம். உண்மையில் பெரும்பான்மை ஆட்சி என்பது இதுதான். கட்சிக்குள் விமர்சன விவாதங்களை அடக்கி ஒடுக்கி விட்டால் அது ஒரு பெரும்பான்மைக் கட்சிக்குள் சிறுபான்மையினர் ஆதிக்கம் செலுத்துவதாகி விடுகிறது. நாட்டை ஆள்வதே அந்தச் சிறுபான்மையினர்தான் என்றாகி விடுகிறது. இது ஜனநாயகமே அல்ல. சர்வாதிகாரம் தான்.

★

ஆட்சிக்கு வந்துள்ள அரசியல் கட்சியே அரசாங்கமல்ல. மக்களின் நம்பிக்கையைப் பெற்ற தற்காலிக தர்மகர்த்தாவைப் போலத்தான். ஆகவே கட்சி அடக்கத்தோடும் நாணயத்தோடும், எல்லா மக்களுக்கும் நன்மையை விளைவிக்கும் பணிகளைச் செய்ய வேண்டும். மக்கள் வைத்த நம்பிக்கையைக் கட்சிநலத்துக்குப்பயன்படுத்தக்கூடாது.

—ராஜாஜி





⁜ குமரி அனந்தன்

சிறு பொறி பெருந் தீயாகட்டும்

● ஜனநாயகம் சாகவில்லை!

சாகாது!

உடலை, உயிரை இழந்து பெற்ற விடுதலை ஜனநாயகத்தை நிலைநாட்டத்தானே!

ஜனநாயகத்தைச் சாகடிக்க நினைத்து, 'கொன்றுவிட்டோம்' என்று ஆர்ப்பரித்தவர்கள் அதிர்ச்சி அடையும் வண்ணம் 'வென்றுவிட்டோம்' என்று வெற்றிக் கொடியை ஏற்றிக் காட்டினார்கள் மக்கள்!

பின்னர்,

தத்துவத்துக்காகவே தனிமனிதர்கள் என்பதை மறந்து தனி மனிதர்களுக்காகத் தத்துவத்தைப் பயன்படுத்தியபோது மீண்டும் ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உருவாயிற்று!

நல்லவர் என்று போற்றப்பட்ட ராஜீவ் காந்தியும், ''ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே தொடர்ந்து ஆள்வதில் தவறில்லை'' என்று கூறத் தொடங்கி விட்டார்.

தமிழ் நாட்டிலோ,

சாட்சிக் கூண்டில் நிற்பவர் அன்று தி.மு.க. தலைவர் முத்துசாமி.

குற்றவாளிக் கூண்டில் காட்சி அளிப்பவர் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி—

பாதிக்கப்பட்டவர் என்று கூறப்பட்டிருப்பவரோ மாட்சிமை தங்கிய இந்திரா காந்தி—

நீதிமன்றக் கூண்டிலே மாறி மாறிக் குற்றஞ் சாட்டி நிற்பவர்கள்—

திருப்பத்தூரில் ஒன்றாக இணைந்து நிற்கிறார்கள்!

கூண்டிலே நின்றவர்கள் கூட்டிலே நிற்கிறார்கள்!

இதுவும் ஜனநாயகத்துக்கு உகந்தது அல்ல!

எத்தனை எதிர்ப்புக்கள் தடைகள் இருந்தாலும் ஜனநாயகத் தீபத்தை ஏந்தி நிற்கும் அரசியல் தலைவர்களும் பத்திரிகைகளும் இல்லாமல் இல்லை.

ஆனால் சிறு பொறி பெருந்தீயாக வேண்டும்!

பாரதி சொல்வதைப் போல் சிறிய தீயைக் காற்றுத் தேவன் அணைத்து விடுகிறான். பெருந் தீயை வளர்த்து விடுகிறான்!

அக்கினிக் குஞ்சாக இன்று இருக்கும் ஜனநாயகப் பொறியை விரைவில் வளர்த்துப் பெரிதுபடுத்த வேண்டியது நம் கடமை!

ஆம்; ஜனநாயகம் உயிரோடிருக்கிறது என்பது உண்மை!

அது நடமாடும் நிலையில் — ஓடி ஆடி மகிழும் நிலையில் பேணிப் பாதுகாத்து வளர்க்கப்பட வேண்டும்! வளர்ப்போம்!

சென்னை குமரி அனந்தன்

''மக்களே விழிப்பாக இருங்கள்!''

● ஆட்சி முறையில் இரண்டு விதங்கள் இருக்கின்றன. ஒன்று மக்களாட்சி; மற்றொன்று முடியாட்சி. முடியாட்சி முறை கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலும் ஒழிந்து விட்டது. அது இருக்கின்ற சிலநாடுகளிலும் மன்னர்கள் மக்களைக் கலந்தே முடிவெடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

ஜனநாயக முறையில் ஆட்சி இருக்கும் நாடுகளில் ஆள்வது மக்கள்தான். அவர்களின் பிரதிநிதிகள்தான் ஆட்சி செலுத்துகிறார்கள். ''நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்'' என்று பாரதி குறிப்பிட்டது முற்றிலும் சரியே.


அந்தந்த நாட்டின் அரசியல் சாசனம் தான் மக்களாட்சியை ஜனநாயக முறையில் வழிநடத்திச் செல்கிறது. நம்முடைய அரசியல் சாசனம் பிரிட்டிஷ் நாட்டு முறையைப் பின்பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

⁜ எம். பக்தவத்சலம்



அரசாங்கப் பொறுப்பில் இருப்பவர்கள் கொள்கை வெறியர்களாக இருக்கக் கூடாது. பிரத்யட்ச நிலைகளை உணர முயல வேண்டும். எது சரி, எது தப்பு என்பதனை நாட்டு மக்களின் நன்மையின் அடிப்படையிலும், தர்மத்தின் நோக்கோடும் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்பட வேண்டும். கொள்கை வெறியர்களாக இருப்பது சுலபம். நாட்டு நிர்வாகத்தை நடத்துவது கஷ்டம்.

—ராஜாஜி



இந்த அரசியல் சாசனப்படி, நாட்டைச் சரியானபடி நடத்திச் செல்ல, சில கட்டுப்பாடுகள் தேவை. அவசரகால நிலை அமுல் படுத்தப்பட்ட காரணங்களும் அதுவாகக் கூட இருக்கலாம். சரியான கட்டுப்பாடுகள் இல்லையெனில் ஜனநாயக ஆட்சி எளிதில் ஒழிந்துவிடும். இந்தக் கட்டுப்பாடுகளைக் கொண்டு வர நமது அரசியல் சாசனம் வழி செய்திருக்கிறது. மேலும் மக்களுக்காக நடத்தப்படும் சில முக்கியமான துறைகளில் வேலை நிறுத்தம் போன்றவைகளை அனுமதித்தால் அதனால் பாதிக்கப்படுவது மக்களே! மக்களின் நலனுக்காகச் செயல்படும் ஒரு ஜனநாயக ஆட்சி இதையெல்லாம் அனுமதிக்காது.

ஜனநாயக ஆட்சியை நடத்திச் செல்லுபவர்கள் தவறே செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. சில ஏற்றத் தாழ்வுகள் இருக்கலாம். ஆனால் முடிவில் ஜனநாயக தத்துவமே மேலோங்கி நிற்கும். மக்கள் விழிப்பாக இருக்க வேண்டியது ஜனநாயக ஆட்சி முறையில் இன்னொரு முக்கியமான விஷயம்.

தேசிய உள்ளம், மதச் சார்பற்ற தன்மை, ஜனநாயகப் பற்று இவை இருந்தால்தான் ஜனநாயக ஆட்சி நல்லபடி நடக்கும்.

இப்போதிருக்கும் சூழ்நிலைகளில், ஜனநாயகம் மடிந்து போய்விட்டது என்று என்னால் சொல்ல முடியாது. ஏனென்றால், அது மடிந்து விட்டது என்றால் நமது சுதந்திரம் பறிபோய்விட்டிருக்கும்.

சென்னை-4 எம். பக்தவச்சலம்

காசேதான் கடவுளா?

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

● ஜனநாயகம் இங்கு நீண்ட காலமாகவே மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகி வந்திருக்கிறது. நெருக்கடி நிலைப் பிரகடனம் அதற்கு ஒரு பலத்த அடி கொடுத்து அதனை ஊனமாக்கியது. அதிலிருந்து ஜனநாயகம் ஓரளவே குணமடைந்திருக்கிறது. சர்வாதிகாரப் போக்கு என்பது இந்தியாவில் மட்டும் காணப்படுகிற விஷயமல்ல. புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகள் பலவற்றில் ஒவ்வொரு நாளும் தோற்றுவிக்கப்பட்டு வளர்ந்து வருகிற ஒன்றுதான். பொருளாதாரத் தேக்க நிலை, பெட்ரோலியம் விலை உயர்வு, ஜனத்தொகைப் பெருக்கம், சமூக ஏற்றத் தாழ்வுகளால் ஏற்படும் பூசல்கள் இவை காரணமாகவும், இவையெல்லாவற்றையும் விட முக்கியமாக ஆட்சியில் இருப்போர் வெட்கமின்றிப் பகிரங்கமாகச் சுயநலனைப் பேணுவதாலும் எதேச்சாதிகாரம் வளர்கிறது. தனிநபர் ஆட்சியில் அவர் அதிகாரத்துக்கு அபரிமிதமாக ஆசைப்படுவதாலும், அதே நேரத்தில் தமக்கும் தமது பதவிக்கும் பாதுகாப்பு இல்லை என்று எண்ணுவதாலும், வம்சாவழி ஆட்சியில் அவருக்கு உள்ள பற்றுதலாலும் சர்வாதிகாரப் போக்கு என்ற நோய் தீவிரமடைகிறது.

ஸ்ரீமதி இந்திரா காந்தியின் சர்வாதிகாரம் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது என்று சமாதானம்கூடச் சொல்ல முடியாத அளவுக்குப் படுமோசமானது. அது பண பலத்தைக் கோயிலில் வைத்துக் கும்பிடுகிறது. அவரது முதல்வர்களில் பலரும் அமைச்சரவையைச் சேர்ந்த பலரும் லஞ்ச ஊழலில் தாங்கள் புரள்வது மட்டுமின்றி எத்தனையோ தொழில் வர்த்தகப் புள்ளிகள், அரசு அதிகாரிகள், நீதிபதிகள், இலக்கிய கர்த்தாக்கள், கலைஞர்கள், அறிஞர்கள் ஆகியோரையும் அந்தச் சேற்றிலே இழுத்து விட்டிருக்கிறார்கள். லஞ்ச ஊழல் என்பது ஒரு தார்மீகப் பிரச்னை மட்டுமல்ல; அது பொருளாதார முன்னேற்றத்துக்குத் தடையாக நிற்கிறது; அதன் மூலம் ஜனநாயகத்துக்கு ஆபத்தையும் விளைவிக்கிறது. இந்தப் பிரச்னைக்கு முதலில் தீர்வு கண்டாலன்றி — பொது வாழ்க்கை தூய்மை அடைந்தாலன்றி — ஜனநாயக மறுமலர்ச்சி சாத்தியமே இல்லை.

புது தில்லி மது லிமாயி


⌘ மது லிமாயி



அதிகமாக அதிகாரங்களைப் பிரயோகிப்பது மிதமிஞ்சிச் சாப்பிடுவது போல் முதலில் இன்பமாகத்தான் இருக்கும். பொறுப்பற்ற தன்மையும் சுகமாகத்தான் இருக்கிறது. இப்படிச் சிந்திக்காமல் இன்பங்களில் ஈடுபடுவது நோய் நொடியிலும், மரணத்திலும் கொண்டு விடும். அதே போல் அளவு கடந்த அரசாங்க அதிகாரத்தில் ஜனநாயகம் நிச்சயமாக அழிந்து விடும்.

★

பாரத ஜனநாயகத்தை ஒரு காடாக்குவதோ அல்லது அழகிய நந்தவனமாக்குவதோ நம் சக்தியில்தான் இருக்கிறது. ஒரு நந்தவனமாக்குவதென்றால் நம்மிடையே தியாக உணர்ச்சி இருத்தல் வேண்டும். எதிர்க் கட்சிகள் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொண்டிருந்தால் ஒரு பயங்கரக் காட்டைத்தான் சிருஷ்டிப்போமேயன்றி, நந்தவனத்தை யல்ல. —ராஜாஜி



நாய் இருக்கற பக்கம் போகாம எம்மேலே பாயறீங்களே!
பால் கமிஷன் அறிக்கை
திருச்செந்தூர் சம்பவத்தில் குற்றவாளிகள்
நான் ஒண்ணும் அவுட் இல்லே!
ரயில்வே நிர்வாகம்
ரயில் தொழிலாளர்கள்

மறுக்கப்படும் மனித உரிமைகள்

மனித உரிமைகள் தினம் உலக நாடுகள் அனைத்திலும் ஐ. நா. சபை ஆதரவுடன் கொண்டாடப்படுவது டிசம்பர் 10ம் தேதி. ராஜாஜியின் பிறந்த நாளன்றே மனித உரிமைகள் தினம் கொண்டாடுவதென்ற தீர்மானம் திட்டமிடப்படாமலே எதிர்பாராமல் அமைந்த பொருத்தம். மனித உரிமைகளுக்காகப் போராடிய உலகத் தலைவர்களின் பட்டியலில் சிறப்பிடம் பெறத் தக்கவரல்லவா ராஜாஜி! முடிவில்லாப் போராட்டத்தின் மூக்கிய தளபதி!

இன்றும் நம்மைச் சுற்றிப் பாருங்கள். மனித உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்படுவதைத்தானே காண்கிறோம்? இறைவன் அளித்த உலகில் சர்வதேச மக்களும் அச்சமின்றி வாழும் உரிமையைக் கூட அல்லவா இழந்துவிட்டு நிற்கிறார்கள்! பாவம், அணு ஆயுதப் போர் என்று தொடங்குமோ என்று சதா சர்வகாலமும் பயந்து நடுங்கிக் கொண்டேயிருக்கிறார்கள். அணு ஆயுதங்களைக் குறைக்க ரேகனின் சமீபத்திய யோசனையை பிரஷ்னேவ் நிராகரித்து விட்டார்! இப்படியே இவர் யோசனையை அவர் நிராகரிக்க அவர் யோசனையை இவர் நிராகரிக்க ஆண்டுகள் பல உருண்டோடுகின்றனவே யன்றி விடிந்த பாடில்லை. என்றைக்கு ராஜாஜி கூறியதுபோல ஒரு தரப்பு அதிபர் சந்தேகத்தை விட்டொழித்து, எதிர் தரப்பினை முற்றிலும் நம்பி, தாமாகவே முன்வந்து தமது நாட்டின் அணு ஆயுதங்களை ஒழித்துக்கட்டத் தொடங்குகிறாரோ அன்றைக்குத்தான் உலக மக்களுக்கு விமோசனம்.

கருத்தரங்கு

உலக அரங்கிலிருந்து பார்வையை நமது நாட்டுக்குத் திருப்பினோமானால் தேசிய பாதுகாப்புச் சட்டம், வேலை நிறுத்தத் தடைச்சட்டம், சர்வதேச நிதி நிறுவனத்தில் பெறப்பட்ட பெருங் கடன், அவசரச் சட்டம் மூலம் மாருதி அரசு உடைமையானது, 'வம்சாவழி ஆட்சியில் தவறென்ன?' என்று ராஜீவ் கேட்டிருப்பது போன்ற பல அம்சங்கள் மக்களின் உரிமைகளைச் சிறிது சிறிதாகப் பறித்து அவர்களை அடிமைப்படுத்துகிற காரியங்களாகவே உள்ளன. ராஜாஜியின் பிறந்த தினத்தின் போது அவர் புகழ் பாடுவதைவிட தேசத்தின் நிலைமையில் மக்களுடைய கவனத்தைத் திருப்புவதைத்தான் ராஜாஜியே இன்றிருந்தால் விரும்புவார் என்பதால் ஒரு கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்தோம், இந்த இதழில். இதில் பல கட்சிகளைச் சேர்ந்த, கட்சி சார்பற்ற, தேசிய, மாநிலத் தலைவர்கள் பலரும் தங்கள் எண்ணங்களை வெளியிட்டுள்ளனர். கருத்தரங்கில் இந்திரா காங்கிரஸ் பிரமுகர்களுக்கு அதிகமான பிரதிநிதித்துவம் தரப்படவில்லையே என யாரேனும் கருதினால் தவறு எங்களுடையதல்ல என்று உணர்த்த விரும்புகிறோம். நமது ஜனநாயகம் ஆரோக்கியமாகவே இருக்கிறது அதற்கு ஆபத்து ஏதுமில்லை என்று வாதாடும் விதமாய்க் கருத்துரை வழங்க அவர்களில் பலருக்கு கல்கி வாய்ப்பளித்தது. ஆனால் அவர்களில் மிகப் பெரும்பாலோர் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவேயில்லை. ஒருவேளை ஜனநாயகம் ஆரோக்கியமாகவே இருப்பதாகக் கூற அவர்கள் தயங்குவது காரணமாயிருக்கலாம், அல்லது நேரமின்மையும் காரணமாயிருக்கலாம்.

பிரதமரை வாழ்த்துகிறோம்!

ராஜாஜி இன்று இருந்தால் அவர் மனம் மகிழும்படியான ஒரு காரியத்தையும் ஸ்ரீமதி இந்திரா காந்தி அண்மையில் செய்திருப்பதை வாழ்த்தத்தானே வேண்டும்! பாகிஸ்தானின் போர் மறுப்பு ஒப்பந்த யோசனையை ஆரம்பத்தில் அலட்சியத்துடன் நிராகரித்த பிரதமர் இப்போது மனம் மாறிப் போர் மறுப்பு ஒப்பந்தம் குறித்து நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்தத் தயாராய் இருப்பதாய்க் கூறியுள்ளார். தேசத்தின் பாதுகாப்பில் எப்படித் தீவிர கவனம் செலுத்த

1981 டிசம்பர் 6

துன்மதி கார்த்திகை 21

மலர்: 40 இதழ்: 19



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

வேண்டுமோ அதே அளவு அண்டை நாடுகளுடன் நட்பை வளர்த்துக்கொள்வதிலும் பிரதமர் ஆர்வம் காட்டத்தான் வேண்டும். போரின்றி அமைதியாக வாழும் உரிமை மக்களுக்கு மறுக்கப்படக் கூடாதாகையால் பிரதமரின் மனமாற்றத்தை வரவேற்கிறோம்.

அதிமேதாவித்தனம்!

பாரததேசத்தில் கொலை கொள்ளை போன்றவை நடக்காமல் அரசாங்கத்திடம் பாதுகாப்புப் பெறுகின்ற உரிமையை மக்கள் இழந்து வருகிறார்கள். உத்தரப் பிரதேசத்தில் தியோலி என்னுமிடத்தில் இருபத்தி நான்கு ஹரிஜனங்கள் நிலப் பிரபுக்களான மேல் ஜாதியினரால் கொல்லப்பட்டனர். இதைக் கேட்டு நாடே துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் போது மத்திய அமைச்சர் ஜெயில் சிங் நாடாளு மன்றத்தில் பேசியது மேலும் நம்மைத் துயரத்தில் ஆழ்த்துவதாக உள்ளது. திருட்டு அதிகமாகிவிட்டதே என்றால் 'திருட்டுக் கொடுத்தவர்களும் திருடலாமே' என்று பதில் சொல்வார்கள்? இத்தகைய ஓர் அதிமேதாவித்தனமான யோசனையைத்தான் வெளியிட்டார் ஜெயில் சிங். 'ஹரிஜனங்களுக்கும் தாராளமாகத் துப்பாக்கி லைசென்ஸுகள் வழங்க உத்தேசித்திருக்கிறோம்' என்றார்! இருக்கிற லைசென்ஸ்களைப் பறிமுதல்செய்யவும் லைசென்ஸ் இல்லாத துப்பாக்கிகளைக் கைப்பற்றவும் அல்லவா அவர் முயல வேண்டும்? உள்துறை அமைச்சரிடம் பொறுப்பான பதிலை எதிர்பார்க்கும் உரிமையை இழந்து நிற்கிறார்கள் மக்கள்!



ஃ சேகர்

ரயில் கொள்ளைகள்

உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் கொள்ளைக் கூட்டத்தினரின் அட்டூழியங்கள் நீண்ட காலமாகவே உண்டு. ரயில் பயணங்களும் கொள்ளையர்களால் ஆபத்து நிரம்பியவை ஆகிவிட்டன. ''ரயில்வே அமைச்சரும், ரயில்வே போர்டு அதிகாரிகளும் கூட காரில் போவதையே விரும்புகிறார்கள்'' என்று இந்திரா காங்கிரஸ் எம்.பி.யே நாடாளு மன்றத்தில் கூறியிருக்கிறார். ரயிலிலே நடக்கும் கொலைகளும் கொள்ளைகளும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதைப் புள்ளி விவரங்கள் தந்து ரயில்வே அமைச்சரே ஒப்புக் கொண்டிருக்கிறார் நாடாளு மன்றத்தில்.

வீர சொர்க்கம்

ரயில் பயணிகளின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புத் தருகிற பொறுப்பில் அரசு படுதோல்வி அடைந்திருப்பதற்கு நிதர்சனமான ஓர் எடுத்துக்காட்டு விமானப் படை அதிகாரி சேகரின் துயரமான முடிவு.

இளைஞர் சேகர் உத்தரப் பிரதேச ரயில் கொள்ளைக்காரர்களின் துப்பாக்கித் தோட்டாவுக்கு இரையானார் என்பதோடு சகபயணி ஒருவரைக் கொள்ளைக்காரரிடமிருந்து காக்கும் முயற்சியில் உயிர் துறந்தார் என்பது இதயத்தை நெகிழ்விக்கும்போதே பெருமிதம் கொள்ளவும் வைக்கிறது.

என்றுமே பிறருக்குத் துன்பம் என்றால் பாய்ந்து வந்து உதவும் சேகர், ஆகாயத்தில் திசை தப்பிப்போன ஒரு பெண் விமானியுடன் ரேடியோ தொடர்பு கொண்டு அவரைப் பத்திரமாக விமான நிலையத்தில் இறங்கச் செய்த சாகசத்துக்காக வீரப் பதக்கம் பெற இருந்தவர். அதற்குள் அவருக்கே இப்படி ஒரு முடிவு! அவர் மனைவியோ நிறை மாத கர்ப்பிணி!

இத்தகைய ஒரு சந்தர்ப்பச் சூழலில் சேகருக்கு நேர்ந்தமுடிவு அவர் தகப்பனார் சங்கரன் அவர்களை வெகுவாகக் கலக்கிவிட்டதில் வியப்பென்ன? ''அவன் யுத்தத்திலோ அல்லது ஒரு விமான விபத்திலோ இறந்திருந்தால் கூட பாதகமில்லை. இப்படியா சாக வேண்டும்?'' என்று புலம்பியிருக்கிறார் சங்கரன். யுத்தத்தில் எதிரிகளைக் கொன்று வீர சொர்க்கம் புகுவதை விடத் தனது தேசப் பிரஜை ஒருவரின் உயிர் காக்கும்முயற்சியில் மடிவது இன்னும் உயர்வானதல்லவா? வீர சொர்க்கத்துக்கும் மேலான ஒரு பதவியையல்லவா அது பெற்றுத் தரவேண்டும்!

வாயிருக்குமா?

தமிழகத் தலைநகரிலும் வீர தீர பராக் கிரமங்களுக்குப் பஞ்சமில்லை! சட்டக் கல்லூரி மாணவர்கள் காப்பி அடிக்கும் உரிமை கோரி அசாதாரண வீரம் காட்டியுள்ளனர்! அவர்கள் கோரிக்கை மறுக்கப்பட்டபோது பரீட்சை நடந்த கல்லூரியின் விளக்குகள் மேஜை நாற்காலிகளை உடைப்பதில் தங்கள் திறமையைக் காட்டியுள்ளனர். சட்டம் படிப்பவர்களா இப்படி அதர்மமாகச் செயல்படுவது என்றால் இச் செய்தி வெளியாகியுள்ள அதே பக்கத்தில் இதைவிடப் பெரிய தலைப்புச் செய்தியாக இடம் பெற்றிருப்பது, அந்துலே பதவியில் நீடிப்பார் என்று பிரதமர் திட்டவட்டமாக அறிவித்துள்ளதுதான். அந்துலே மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களுக்கு ஆதாரமில்லை என்று அவர் முடிவு செய்து விட்டாராம். தார்மீக நெறிகளைத் தலைவர்கள் கடைப்பிடிக்காதபோது மற்றவர்களைத் தட்டிக் கேட்க அவர்களுக்கு எப்படி வாயிருக்கும்?

தண்ணீர்! கண்ணீர்!

தண்ணீர் தண்ணீர் திரைப் படத்தைப் பற்றி மாநில அரசும் தமிழக இந்திரா காங்கிரஸும் ரொம்பத்தான் பயந்து போய் மறு தணிக்கை கோரியிருக்கின்றன. ஏன் இந்தப் பயம்? உங்கள் ஆட்சியில் கிராம


மங்கல மதிமுகத்தில் மெருகூட்ட
ஐடெக்ஸ்
டீலக்ஸ் குங்குமம்
matt finish
ஐடெக்ஸ்
சென்னை 600 033
Imageads M-AL-1427Tam

நாடக விமரிசனம்



அந்த சில நாட்கள்!

மூன் கோபமும் - ஆனால் கூடவே அரவணைத்துக் கொள்ளும் நல்ல குணமும் கொண்ட கோபிதான் மூத்தபிள்ளை. பக்கத்து வீட்டுக்குக் குடிவந்த பெண் கங்கா தன்னைக் காதலிப்பதாய் நினைத்துக் கொண்டு, நண்பன் ஆண்டனி கொடுக்கிற தைரியத்தில் அவளிடம் தன் எண்ணத்தை வெளியிடப் போக, அவள், அது ஒரு கை ஓசைதான் என்று கட்டிக்காட்டி, அவனுக்கு மூளைக் கோளாறு ஏற்படக் காரணமாகிறாள். (இளைஞர்களே, ஜாக்கிரதையாகக் காதலிக்கவும். காதல்பாதை கல்யாண மண்டபத்துக்குமட்டு மல்ல, பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கும் அழைத்துச் சென்றுவிடும்!) முப்பது நாட்கள் சிகிச்சைக்குப் பிறகு வீடு திரும்பும் அவனை எல்லோரும் அந்தச் சில நாட்களைச் சுட்டிக் காட்டியே பேசுகிறார்கள். ஆபீசில் உத்தியோகம் போகிறது.

ஆங்கில வார்த்தைகளைச் சிலேடை பண்ணிச் சில வசனங்கள்;

ஆத்துக்கு, நேக்கு, நோக்கு என்று இந்நாளைய பிராமண வீடுகளில் கூட வழங்காத வார்த்தைகள்;

சில வசனங்களைச் சொல்வதற்கென்றே சில நிகழ்ச்சிகளைப் புகுத்துதல் (மன நிம்மதிக்காக கோபியைச் சர்ச்சுக்குப் போக வைத்து அவன் மதம் மாறப்போவதில்லை என்று பிரகடனம் செய்து, ''இது அபிராமபுரம்தான்; மீனாட்சி புரமில்லை!'' என்று சொல்லுவது—)

இவை இன்றித் தமிழ் நாடகம் அமையாது போலும்! என்றாலும் பிரியதரிசினி நாடகக் குழு பற்றி முக்கியமாக இரண்டு விஷயங்களைக் குறிப்பிட வேண்டும். ஒன்று அத்தனை நடிகர்களும், குறிப்பாக கோபியாக நடித்த சேகர், தங்கள் பாத்திரங்களை உணர்ந்து நடித்தது; இரண்டு: பதினைந்து இடங்களில் சபையினரின் கைத்தட்டலைப் பெற்ற வெங்கட்டின் வசனங்கள்.

—சாருகேசி

மக்கள் மனநிறைவுடன் இருக்கிறார்கள் என்றால் இந்தப் படத்தினால் அவர்கள் பாதிக்கப் படப்போவதில்லை. படத்தில் கூறப்படுவன உண்மையெனில் அதனை வெளியிடாமல் நசுக்கப் பார்ப்பது கருத்துச் சுதந்திரத்தைப் பாதிக்கிற சர்வாதிகாரப் போக்காகும். நக்ஸலைட் பிரசாரம் படத்தில் இருப்பதாக நீங்கள் சொல்வது நொண்டிச் சமாதானமே. மக்களுடைய எதிர்பார்ப்புக்கள் கவனிக்கப்படாமலே இருந்தால் என்ன நடக்கும் என்று கூறி எச்சரிப்பதே படத்தின் நோக்கம். நக்ஸலைட் ஆதரவுப் படம் அல்ல அது. ஆனால் நீங்கள் இதைத் தடை செய்தால் நாளை அப்பட்டமான நக்ஸலைட் ஆதரவுப் படங்களே வரும். அப்போது அதை உங்களால் நசுக்க முடியாது போகும்! திரைப் படங்களுக்கு மறு தணிக்கை கோரும் வேலையற்ற வேலைகளை விட்டுவிட்டு நல்லாட்சி வழங்கி மக்களின் குறை தீர்க்கப் பாடுபடுங்கள். வறுமையும் பிணியும் நீங்கினால் இங்கே நக்ஸலைட்டுக்கு என்ன வேலை?

பால் கமிஷன் அறிக்கை அம்பலம்!

● இந்திரா அம்மையாருடன் கூட்டுச் சேர்ந்ததன் விளைவோ என்னவோ, தமிழக அரசிலும் எதேச்சாதிகாரப் போக்கு தலையெடுக்க ஆரம்பித்திருக்கிறது.

'பால் கமிஷன் அறிக்கையை மூடி மறைக்கப் பார்க்கவில்லை சட்ட மன்றத்தில் சமர்ப்பிக்க இருந்தோம். அதற்குள் கருணாநிதிக்கு அதன் நகல் கிடைத்து வெளியிட்டுவிட்டார்' என்று சொன்னதோடு நிறுத்திக் கொண்டிருந்தால் கௌரவமாயிருந்திருக்கும்.

அதை விட்டு எதிர்க் கட்சித் தலைவர் இல்லங்களையும், காரியாலயங்களையும் சோதனையிடப் போனது அநாகரிகம். ஒரு சான்றும் அகப்படாமல் அவமானப்பட்டதுதான் மிச்சம்.

அந்த அறிக்கை கருணாநிதிக்கு எப்படிக் கிடைத்தது, அரசு அதிகாரிகளில்—யார் அரசு ரகசியங்களை இப்படி வெளியிடுகிறார்கள் என்று பார்ப்பதற்காகச் சோதனையிட்டோம் என்ற வாதம் ஏற்கத் தக்கதல்ல. அரசு அதிகாரிகளின் நம்பிக்கையையும் பூரண ஒத்துழைப்பையும் நீங்கள் பெறவில்லையெனில் அது உங்களிடம் உள்ள குறைபாடே யன்றி எதிர்க் கட்சித் தலைவரின் குற்றமல்ல.

மற்றொரு விஷயம், எவ்வளவுக்கெவ்வளவு நீங்கள் அதிகாரிகளுக்கு வாய்ப்பூட்டு போட்டு விஷயங்களை ரகசியமாகக் காக்க முயல்கிறீர்களோ அவ்வளவுக்கு ரகசியங்களை அம்பலமாக்கும் முயற்சியும் நடந்து கொண்டேதான் இருக்கும். ஜனநாயகத்தில் மக்களிடமிருந்து எதையும் மறைத்து வைக்க ஆட்சியாளருக்கு உரிமை ஏது?

''கமிஷன் அறிக்கை வெளிவந்து மாதக் கணக்காகியும் நடைபெற்ற கொலைக்காக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையே? பால் கமிஷனின் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள அறங்காவலர் குழுத் தலைவரையும் உறுப்பினரையும் நீடித்துக் கொண்டிருப்பது நேர்மைதானா?'' என்ற கருணாநிதியின் கேள்விகளுக்கு ஆட்சிப் பொறுப்பில் உள்ளோரிடமிருந்து ஏற்கத்தக்க பதில் ஏதும் இல்லை.





● இந்த வியாதிக்கு மருந்தே இல்லையா?'' என்ற கட்டுரை படித்தேன். உடனே எனக்கு நவம்பர் 11ந் தேதி நாளிதழில் படித்த செய்தி நினைவுக்கு வந்தது.

நியூயார்க்குக்கு விஜயம் செய்த தாய்லாந்து மகாராணி ஸிரிகிட் ஒரு நிகழ்ச்சிக்குத் தாமதமாக வந்து சேர்ந்தார். காரணம் ஒரு ''டிராஃபிக் ஜாமி''ல் அவர் சிக்கிக் கொண்டதுதான். தவறு அவருடையதல்ல.

ஆயினும் நகரின் நிறவுகோலை மேயரிடம் பெறுகிற அந்த நிகழ்ச்சியில் அவர் குரல் கம்மிப் போகக் கூறினார்: ''இந்தப் பெரும் கௌரவத்தை நான் பெறத் தகுதி அற்றவளாகிவிட்டேன். உங்களிடமிருந்து என்ன தண்டனையும் ஏற்கத் தயாரா யிருக்கிறேன். என்னை'' மன்னியுங்கள்!''

மேயர் எட்வர்ட் காச் பதிலளிக்கையில், ''மன்னிப்புக் கோர வேண்டியவன் நான்தான்! நியூயார்க் நகரின் ''டிராஃபிக் ஜாம்''களுக்குப் பொறுப்பேற்க வேண்டியவர் மேயர் தானே! எனவே எனக்குத்தான் தண்டனை தரவேண்டும்'' என்றார்.

நீங்கள் குறிப்பிட்டு எழுதிய நிகழ்ச்சியில் அமைச்சர் தாமதத்துக்குத் தாம் வருந்துவதாகக் கூடச் சொல்லாததை என்னென்பது!

சென்னை — விஜயலக்ஷ்மி

● ''வெள்ளிப் பனிமலையில் ஒரு வெற்றி''— கட்டுரை (15—11—81 இதழ்) படித்து மகிழ்ந்தோம். ஒரு மலை ஏறும் முயற்சியில் உச்சிக்குச் செல்பவர் ஓரிருவரே எனினும் அந்தக் குழுவில் உள்ள அனைவரது பூரண ஒத்துழைப்பும் இன்றி இதனைச் சாதிக்க முடியாது. எங்கள் குழுவில் பதினொரு பேர்கள் இருந்தார்கள்: பாளையம் (தலைவர்), நாகின் (துணைத் தலைவர்), ராமகிருஷ்ணன், ஸ்ரீனிவாச குமார், பிரபாகர், ரங்கநாதன், ஜயம் பெருமாள், தவே, கோபாலகிருஷ்ணன், பத்மநாபன், முரளி கிருஷ்ணன் ஆகிய ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட பணி இருந்தது. அதனை அவர்கள் செம்மையாக நிறைவேற்றியதாலேயே அவர்களில் ஒருசிலர் உச்சியை அடைந்து சாதனை புரிய முடிந்தது. குழுவில் பழுத்த அனுபவஸ்தர்களும் உண்டு, புதியவர்களும் உண்டு. எல்லோருமே காட்டிய வீரமும் உற்சாகமும் சொல்லி மாளாது.

சென்னை-3 — எஸ். சீனிவாச குமார், கிரி விஹாரி மண்டல்

● முதல் பக்கத்திலேயே ''இதயத்தில் இருப்பவர் எதிரேயும் இருக்கிறார்'' என்ற வாசகத்தைக் கண்டதும், எங்கேயும் இருப்பார் என்று மனமும் சேர்ந்து ஆர்ப்பரித்தது.

பெருங்களத்தூர் — கோபாலன்

● பொன் ஏட்டில் பொறிக்கப்பட வேண்டிய முதல் தரமான பாபாவின் அருள்மொழிகளை ஒவ்வொரு பக்கத்தின் கடைசிக்கும் தள்ளிவிட்டீர்களே! இது சரியா?

நயினாரகரம் — முத்து

● பாபா சிறப்பிதழைப் படித்து முடித்தவுடன் மனத் தெளிவு ஏற்பட்டது. என்னிடமிருந்த சுமையை யாரிடமோ கொடுத்து விட்டு ஃப்ரீயாக இருப்பதைப் போன்று உணர்கிறேன்.

பட்டினப்பாக்கம் — எல். ஆர். விஜயகுமார்

● பகவான் சத்ய சாயி பாபாவின் மீது களங்கம் ஏற்படுத்தி வரும் நபர்களுக்கு, அந்த அவதார புருஷரின் மகிமையைச் செம்மையாக எடுத்துக் காட்டும் சம்பவங்களைத் தொகுத்தளித்துசாட்டையடிகொடுத்து விட்டீர்கள். இனியாவது அந்த தெய்விக புருஷரை அவமதியாது இருப்பார்களாக!

மதுரை — ஆர். வி. பிரசாத்

● மணியோசை அமர்க்களமாய்க் கேட்டு விட்டது. பாரதியின் கம்பீரமான வண்ணப் படத்தைச் சொல்கிறேன். பிரமாதம், போங்கள்!' பாரதி சிறப்பிதழ்' என்னும் 'யானை'யின் நல்வரவை ஆவலோடு எதிர் பார்க்கிறேன்.

ஸ்ரீரங்கம் — கிருஷ்ணசாமி

● ''ரயில் பயணங்களில்'' கதையைப் போட்டுவிட்டு ஏதோ சிரிப்பு உலகில் சாதனை செய்து விட்டதாக நினைப்பா?... மகா தண்டம், சிரிப்பும் வரலே ஒண்ணும் வரலே!''


கும்பகோணம் — கை. இராமமதி

● ''சரணாகதி படலம்'' ஆரம்பமானதில் வியப்பில்லை என்று இறுதியில் சொல்வதற்கு தலையங்கம் எழுத வேண்டுமா? திராவிடப் பாரம்பரியமே சரணாகதி அடைவதில்தான் வாழ்கிறது. பெரியார் எப்போதுமே ஆளும் கட்சிக்குத் துதி பாடித்தான் நாட்களைக் கழித்தார் சுதந்திரத்துக்கு முன்னும் பின்னும். எனவே கருணாநிதி, எம். ஜி. ஆர். இருவரை மட்டும் குறை கூறிப் பயனில்லை.

சென்னை-28 — எல்..ஆர். சுந்தரராஜன்

● ''குமரிப்பெண்ணே குயிலாளே'' தொடர் கதைக்கு உமாபதியின் சித்திரங்கள் தேனோடு பால் கலந்த மாதிரி அற்புதமாய் இருக்கிறது. தொடர்கதையும் அப்படியே...

திருவாரூர் — இரா. கரியப்பா




கருகு பதில்கள்

⌘ ஓ. ராஜேந்தர், நாகப்பட்டினம்
கே: மனிதன் எப்போது விரக்தி அடைகிறான்?
ப: ஒவ்வொரு மனிதனின் மனத் திண்மையைப் பொறுத்திருக்கிறது. சினிமா டிக்கெட் கிடைக்காதபோது சிலர் விரக்தி அடைகிறார்கள். வேறு சிலர் காதல் தோல்வியின்போது. இப்படி தோல்வி ஏமாற்றம், நஷ்டம், இல்லாமை, இயலாமை ஆகிய பல காரணங்களால் விரக்தி ஏற்படுகிறது. விரக்தியை வென்றவனுக்கு வாழ்க்கையில் வெற்றிகள் ஏற்படும். விரக்தி என்பது நம் காலில் நாமே கட்டிக் கொள்ளும் முட்டுக்கட்டை.

⌘ பிரதாப்சிங், அரகண்டநல்லூர்
கே: பல மருத்துவமனைகளில் நோயாளிகளைச் சரியாகக் கவனிப்பதில்லையே ஏன்?
ப: சேவை மனப்பான்மையுடன் டாக்டர் படிப்பில் ஈடுபடுபவர்கள் எத்தனை பேர்? ஐம்பதாயிரம் அறுபதாயிரம் என்று பணம் கொடுத்து மருத்துவக் கல்லூரியில் இடம் பிடித்து டாக்டரானவர்கள் குறிக்கோள் சேவையாகவா இருக்கும்? போட்ட பணத்தை எப்படி எடுப்பது என்பதாகத் தான் இருக்கும்.

⌘ சித்ரா சுப்பராமன், மாம்பலம்
கே. கடுகைப் பிரபலப்படுத்தலாம் என்று இருக்கிறேன். வழி சொல்லுங்களேன்.
ப: 'கடுகு உலக மகா மேதை' என்று ஒரு கார்டில் எழுதி ஒன்பது பேருக்கு அனுப்பி ஒவ்வொருவரும் ஒன்பது பேருக்கு இதே மாதிரி எழுதி அனுப்பச் சொல்லுங்கள். எழுதியவர்களுக்கு லாட்டரிப் பரிசு கிடைத்தது என்றும் எழுதாதவர்களுக்கு லட்ச ரூபாய் கோடி ரூபாய் நஷ்டம் என்றும் எழுதுங்கள். கடுகின் பெயர் பிரபலமாகிவிடும்.

⌘ கிரிஜா ராமசாமி, கான்பூர்
கே: அக்டோபர் 31'ம் தேதி நிகழ்ந்த உலக சிக்கன தினத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன?
ப: அப்படி நடந்ததா என்ன? நான் பேப்பர் பார்த்து நாளாயிற்று. பக்கத்து வீட்டுக்காரப் பாவி மனுஷன் சிக்கனம் பண்ணுகிறேன் பேர்வழி என்று பேப்பர் வாங்குவதை நிறுத்தி விட்டார்!





⌘ எம். பீட்டர், கிருஷ்ணகிரி
கே: மனிதனுக்கு ஏழு ஜன்மம் என்கிறார்களே, அப்படியானால் இது எத்தனையாவது ஜன்மம்?
ப: பிறப்பு எழுவகையாகும். தாவரம், பறவை, ஊர்வன, விலங்கு, நீர்வாழ்வன, மனிதர், தேவர். பொதுவாக உயிர் வகைகளுக்கு ஏழு பிறப்புக்கள் என்று கூறுகிறார்கள்.

⌘ ஆனைகூத்தன், பழவந்தாங்கல்
கே: 25 சிறு கதைகள், 50 ஜோக்குகள், 20 துணுக்குகள், 100 கேள்விகள், 15 வாசகர் கடிதங்கள், இத்தனை எழுதியும் வரவில்லை என்றால் அவனுடைய மனநிலை எப்படி இருக்கும்?
ப: பழவந்தாங்கல் ஆனைக்கூத்தன் மனநிலையைப் போல இருக்கும்.

⌘ ஆர். செவராஜ், லால்குடி
கே: லாட்டரியில் 55 லட்சம் விழுந்தால் என்ன செய்வீர்கள்?
ப: பணத்தைப் பெற்றதும் சில்லறை மாற்றி ஐந்து பைசாவைப் பிள்ளையார் கோவில் உண்டியலில் போடுவேன். பணம் வந்து விட்டால் பலர் ஆண்டவனை மறந்து விடுவார்கள். நான் அப்படி இல்லை.

⌘ எஸ். சுப்ரமணியன், திருமருகல்
கே: விரும்பிப் படித்த நாவல் எது என்று கேட்டால் ஆங்கில நாவல்களையே குறிப்பிடுகிறார்களே. தமிழில் நல்ல நாவலே இல்லையா?
ப: ஆங்கில நாவல் பெயரைச் சொல்வது ஒரு ஃபாஷன். அவ்வளவுதான். தமிழ் வாசகர்களில் பலர் ஆசிரியருக்குக் கடிதத்தை ஆங்கிலத்தில் எழுதுகிறார்களே, ஏன்? '....கதை வெரி எக்சலண்ட்' என்று (தப்பு) இங்கிலீஷில் எழுதுவது ஏன்?

பரிசு பெறுபவர் :

எஸ். சுப்ரமணியன்
1/69 தெற்கு வீதி,
திருமருகல் - 609 702



இது இன்றைய நிலை. தங்கள் டிவி களில் ஏற்படும் தடங்கல்களையும், தெளிவில்லாத படக் காட்சிகளையும் சகித்துக் கொள்ள இயலாமல் பலர் தங்களது பழைய டிவிக்கு பதிலாக புதியதோர் சாலிடெர் வாங்குகின்றனர்.

அடிக்கடி பழுதடையாத அமைப்பு :

சாலிடெர் அடிக்கடி பழுதடைவதில்லை என்ற காரணத்தினல் தங்களது பழைய தொரு டிவிக்கு பதிலாக சாலிடெர் வாங்குகின்றனர். இதில் தரமுள்ள உபகரணங்கள் மட்டுமே உபயோகிக்கப்படுவதால் வெகு துல்லியமான, தெளிவான படத்தோற்றம் உள்ளது. சாலிடெர், உற்பத்தியில் ஒவ்வொரு கட்டத்திலும் கடும் பரிசோதனைக்குட் படுவதால், அடிக்கடி பழுதடைவ தில்லை.

இந்திய தட்பவெப்பநிலைக் கேற்ற, பிரத்யேக சர்க்யூட் அமைப்பு கொண்டது சாலிடெர். மழைக் காலத்தில் ஸ்பார்க் வராமலிருக்க வழி வகுக்கிறது இதில் கையாளப்பட்டுள்ள நவீன முறை.

நிகரற்ற படத்தோற்றம் :

விஷன் இன்டர்மீடியட் ஃப்ரிகுவென் ஸியில் (VIF) கண்டுள்ள அதி அற்புத முன்னேற்றத்தினல், தெளிவான, துல்லியமானப் படத் தோற்றத்தை சாலிடெரில் காணலாம். இதில் உள்ள ஆட்டோமேடிக் சாதனம், தேவை யில்லாத சப்தத்தை நீக்கி, படம் மேலும் கீழுமாக ஓடாமலிருக்கச் செய்கிறது.

ஒப்பற்ற ஒலி

ஜனதா மாடல் உள்பட எல்லா சாலிடெர் மாடல்களிலும் 'பிக்-அப்' வசதி அமைக்கப்பட்டுள்ளது. இதனல், டிவியில் நிகழ்ச்சிகள் இல்லாத நேரங் களிலும், உங்களது டேப் ரெக்கார்டர் அல்லது ரெக்கார்டு பிளேயர் முதலிய வற்றை இணைத்து உங்களுக்கு இசை வான இசையைக் கேட்டு ரசிக்கலாம். இதில் உள்ள தரமுள்ள ஆம்ப்ளி ஃபையர்கள் சிறந்த ஹைஃபை ஒலியை அளிக்க வல்லவை.

வாரந்தோறும் சிறந்த சர்வீஸ் :

பழுது வர வாய்ப்பில்லை, வந்தாலும் வார 7 நாட்களிலும் சிறந்த பராமரிப்பு உண்டு. சர்வீஸ் என்ஜினியர்கள் மிகவும் சுமுகமானவர்கள். திறம்பட வேலை செய்பவர்கள்.

மாடல் வகைகள் :

TS 32

'பிக்-அப்' அமைப்பு, டோன் கண்ட்ரோல், மல்டிசானல், எல்.இ.டி. போன்ற டீலக்ஸ் அம்சங்கள் அடங்கிய நிகரற்ற ஜனதா டிவி.

TS 52

இந்த 'ஹை-பை' டிவி இரண்டு ஸ்பீக்கர்கள் கொண்டது. மற்றும் பிரத்யேக 'பாஸ்', 'டிரபிள்' கண்ட்ரோல்கள், சிறந்த 4 வாட் ஆம்ப்ளிஃபையர், இரண்டு ஷட்டர்கள் கொண்டது.

TS 62

இந்தியாவிலேயே 10 வாட் ஹைஃபை ஆம்ப்ளிஃபையரும், 20 செ.மீ. டியூயல் கோன் ஸ்பீக்கரும் கொண்டு சிறந்த ஹைஃபை ஒலியை அளிக்கவல்ல ஒரே டிவி. பிரத்யேக 'பாஸ்' மற்றும் 'டிரபிள்' கண்ட்ரோல்கள், இரண்டு ஷட்டர்கள் அடங்கியது.

TS 72 மற்றும் TS 82

பெரிய படத்திரை (61 செ.மீ.) கொண்ட டீலக்ஸ் மாடல்கள் TS 82 இரண்டு ஷட்டர்கள் கொண்டது.

TAS 101

இந்தியாவிலேயே 60 வாட் ஆம்ப்ளிஃபையர் கொண்ட ஒரே ஸ்டீரியோ-டிவி. சிறந்த ஸ்டீரியோ ஆம்ப்ளிஃபையரும், டீலக்ஸ் டிவியும் ஒருங்கே இணைந்தது. இதை வாங்குவதன் மூலம் ரூ. 2000/- மிச்சப்படுத்தி பயனடையலாம்.



சாலிடர்

HE-3798

ரூபா

அன்பிற்கினியவள்

1

காலிங் பெல் அழுத்தப்படும் ஓசை கேட்டது. கதவில் பொருத்தியிருந்த சதுரக் கண்ணாடி மூலமாய் வெளியிலிருந்து ஓர் ஆண் முகம் எட்டிப் பார்ப்பது தெரிந்தது.

உள்ளே—

அன்றைய தினத் தாளைக் கவனித்துக் கொண்டிருந்த அவன் 'வரலாம்' என்பதாய்த் தன் தலையை அசைத்தான்.

உள்ளே வந்தார் அவர். சற்று வயதானவர். மாநிறம். பணச் செழிப்பு உடலெங்கும் பரவியிருந்தது. முன்னால் வந்திருந்த தொந்தி. இடக் கைவிரல் இரண்டில் மோதிரங்கள், எலெக்ட்ரானிக் கடிகாரம். விரைந்து வந்திருக்கிறார் போலும்! வியர்வைத் துளிகள் முகத்தில்!

''உட்காருங்கள்!'' என்றான் தினசரியை மடித்தவாறே.

உட்கார்ந்தார். மேலே சுழன்ற மின் விசிறி காற்றில் சிலிர்த்து நிதானித்தார்.

''முகேஷ் டிடெக்டிவ் அலுவலகம் இது தானே?''

''ஆமாம்! வந்த அவசரத்தில் வெளியே உள்ள போர்டைப் பார்க்கவில்லையோ?''

''முகேஷைப் பார்க்க வேண்டும்.''

''நீங்கள் யார்?''

''தயவு செய்து கேள்வி வேண்டாம். நடுவில் யாரிடமும் நான் பேச விரும்பவில்லை. முகேஷை வரச் சொல்லுங்கள். அல்லது அவர் வரும்வரை நான் காத்திருக்கிறேன்!''

''அவசியமில்லை. நான்தான் முகேஷ்!'' என்றான் புன்னகைத்தவாறு.

''எக்ஸ்யூஸ் மீ...''. வருத்தம் தெரிவித்துக் கொண்டார், வந்தவர். ''ஒரு முக்கியமான விஷயமாக உங்களைப் பார்க்க வந்தேன்.''

''முக்கியமான விஷயமாக இருந்தால்தான் என்னை யாருமே பார்க்க வருவார்கள்.''

''நான் பீதாம்பரம். இங்குள்ள ரூபா திரைப்படத் தியேட்டரின் அதிபர். என் இளைய மகளைக் காணோம் சில நாட்களாய்!''

''உங்கள் இளைய மகள்? அவளைப் பற்றி விவரமாகச் சொல்லுங்கள்!''

''வயது இருபத்தைந்து. சிகப்பு நிறம். அழகாக இருப்பாள்'' என்று சொல்லிக் கொண்டிருந்த பீதாம்பரம் தமது பையிலிருந்து ஒரு புகைப்படத்தை வெளியே எடுத்தார். ஓர் இளம் பெண்ணின் படம்.

''இதோ இவள்தான் ரூபா!''

படம் கைமாறியது. முகேஷ் அவளைக் கவனித்தான். அழகிதான். மயக்கியே கொன்று விடும் அழகு! சிரித்துக் கொண்டிருக்கிறாள். இவளையா காணவில்லை? அட கடவுளே!

''ரூபாவுக்குப் பெங்களூரில் ஒரு பெரிய கம்பெனியில் வேலை. எனக்கு ஒவ்வொரு மாதமும் 25 முதல் 28 ஆம் தேதிக்குள் நிச்சயம் கடிதம் எழுதுவாள் — விஷயமே எதுவும் இல்லாவிட்டாலும் கூட. இன்று என்ன தேதி?'' கடிகாரத்தைப் பார்த்தார்.

''ஜனவரி 30. இன்றுவரை யாதொரு கடிதமும் இல்லை அவளிடமிருந்து!''

''அதற்காக அவள் காணாமல் போய்விட்டாள் என்று முடிவு செய்து விட்டீர்களாக்கும்?''

''அப்படியில்லை. அவள் எந்த ஊருக்குக் கேம்ப்போ, பிக்னிக்கோ போயிருந்தாலும் அந்தத் தேதிக்குள் எனக்குக் கடிதம் எழுதி விடும் பழக்கமுடையவள். தவிர....''

''சொல்லுங்கள்!'' அவர் முகத்தைக் கூர்ந்து கவனித்தான் முகேஷ். மின் விசிறியின் சுழற்சியில் அவரது முகத்திலிருந்து வியர்வை விடைபெற்றிருந்தது.

''இதோ — இதைப் பாருங்கள்!'' ஒரு கடிதத்தை எடுத்து அவனிடம் நீட்டினார்.

விரித்துப் படித்தான்.

'ரூபா! உன் பெற்றோரிடம் போய்விட்டால் என்னையெல்லாம் மறந்து விடுவதா? எனக்குக் கடிதம்கூடவா எழுதக் கூடாது? உன் லீவு முடிந்தும்கூட நீ இன்னும் வேலைக்கு வரவில்லையே? — உமா'

''யார் இந்த உமா?''

''ரூபாவின் அலுவலகத் தோழி. பெங்களூரில் இருவரும் ஒரே அறையில்தான் இருக்கிறார்கள். ரூபா பெங்களூரில் அலுவலகத்





துக்குப் போய் வந்து கொண்டிருந்தால் இவள் ஏன் இந்தமாதிரி கடிதம் எழுதப்போகிறாள்?''

''ஓகோ!''

''அதனால்உங்களிடம் நான் வேண்டிக் கொள்வது: என் மகள் இப்போது எங்கே இருக்கிறாள் அல்லது என்ன ஆனாள்? கண்டு பிடியுங்கள். எனக்கு நிம்மதி இல்லை. உமாவின் கடிதத்தைக் கண்ட பிறகு. ரூபா அங்கே இருப்பாள் என்று நான் நினைக்க, அவள் இங்கேதான் இருப்பாள் என்று உமா நினைக்க....''

''புரிகிறது!''

''போலீசுக்கு நான் போக விரும்பவில்லை. ஏகப்பட்ட பரபரப்பையும் அனாவசிய விளம்பரத்தையும் உண்டு பண்ணி விடுவார்கள்.''


எழுந்து நின்றார். செக் புத்தகத்திலிருந்து ஒரு செக்கைக் கிழித்தார். ஒரு தொகை எழுதிக் கையெழுத்திட்டார். ''இப்போதைக்கு இது உங்களுக்கு அட்வான்ஸ் பீஸ் தயங்காமல் பணமாக மாற்றிக் காரியத்தில் இறங்குங்கள்...''

அதைப் பெற்றுக் கொண்டு அவரை வாசற் கதவு வரை சென்று வழியனுப்பினான் முகேஷ்.

பெங்களூர்.

நெடிதுயர்ந்த அந்த 'ஆனந்த்' கட்டிடத்தினுள் நுழைந்து ஐந்தாவது ஃப்ளோருக்கு லிப்டில் சென்று, அங்கு இயங்கிக் கொண்டிருந்த அலுவலகத்து விசாரணைக் கவுண்டரை அடைந்தான் முகேஷ்.

''ஜி. செக்ஷன் மிஸ் உமாவைப் பார்க்க வேண்டும்!''



''ப்ளீஸ் பி சீட்டட்''என்றான் கவுன்அழகி.

சற்று நேரத்தில் ஒரு ஐந்தடியில் வெளிர்ப் பச்சைச் சேலையில் ஒரு பெண் பார்வை யாளர் அறைக்குள் வந்தாள். யாரையோ கண்களால் தேடினாள். இவனன்றி வேறு யாரும் அப்போதைக்கு அங்கு இல்லை.

இவனே ஆரம்பித்தான். ''மன்னிக்க வேண்டும். மிஸ் உமா நீங்கள்தானே?''

அவள் விழிகள் விரிந்தன. ''ஆமாம். நீங்கள் யார்?''

''நான் முகேஷ். மதுரையிலிருந்து வரு கிறேன். பீதாம்பரம் என் நண்பர். ஒரு விஷயமாகப் பெங்களூர் வந்தேன். ரூபாவை யும் பார்த்துவிட்டு வரச் சொன்னார் அவர்!''

''அப்படியா?'' அவளது அழகிய விழிகள் நெற்றிக்கு ஏறின. ''அப்படியானால்... ரூபா அவளது பெற்றோரிடம் இல்லையா? கடிதம் கூடப் போட்டேனே?''

''அப்படியா? எனக்குத் தெரியாது.'' வேண்டுமென்றே பொய் சொன்னான். ''நான் மதுரையை விட்டுக் கிளம்பி 15 தினங்கள் ஆகின்றன.''

''இன் பாக்ட்'' உமா சொன்னாள்: ''இரண்டு மாதங்களுக்கு முன்னாலேயே அவள் இங்கே வேலையில் ஜாயின் ஆகியிருக்க வேண்டும். ஆனால் வரவேயில்லை.''

''அப்படியா?'' முகேஷுக்கு மனத்துக் குள் குழப்பம்.

''ஆமாம். சென்ற அக்டோபரில் ரெண்டு மாதம் விடுமுறை எடுத்துக் கொண்டு மதுரை சென்றாள். டிசம்பர் 5ந் தேதி வேலை யில் சேர வேண்டும். ஆனால் டிசம்பரிலும் அவள் வரவில்லை, ஜனவரியிலும் .வரவில்லை இன்று பிப்ரவரி 3.... வரவில்லையே!''

''உங்கள் மானேஜரை நான் சந்திக்க ஏற் பாடு.செய்ய முடியுமா?''

''ஓ, நிச்சயமாய்! வாருங்கள் உள்ளே!'' அவள் ஒசிந்து ஒசிந்து முன்னே செல்ல—



விளையாட்டுக்களைப் பற்றி...

1. கிரிக்கெட் ஆட்டம் இங்கிலாந்தில் தோன்றியது எப்போது?
(அ) 14ம் நூற்றாண்டில் (ஆ) 19ம் நூற்றாண்டில் (இ) 15ம் நூற்றாண்டில் (ஈ) 17ம் நூற்றாண்டில்.

2. டார்ஜான் படங்களில் நடித்த ஜானி வீஸ் முல்லர் எந்த விளையாட்டில் சாம் பியன்?
(அ) போலோ (ஆ) நீச்சல் (இ) கால் பந்து (ஈ) குத்துச் சண்டை.

3. ஒலிம்பிக் கொடியில் எத்தனை வளை யங்கள் உள்ளன?
(அ) ஏழு (ஆ) நான்கு (இ) ஒன்பது (ஈ) ஐந்து.

4. ஜெயலட்சுமி கோப்பை எந்த விளை யாட்டுக்காக வழங்கப்படுகிறது?
(அ) ஹாக்கி. (ஆ) பாட்மிண்டன் (இ) டேபிள் டென்னிஸ் (ஈ) நீச்சல்.

5. விம்பிள்டன் சாம்பியன்ஷிப் தொடங் கப்பட்டது எந்த ஆண்டில்?
(அ) 1910 (ஆ) 1877 (இ) 1923 (ஈ) 1815.

6. எடை தூக்கும் போட்டியில் உலகச் சாதனை ஏற்படுத்திய பால் ஆண்டர் சன் தூக்கிய எடை எவ்வளவு?
(அ) 6930 பவுண்டு (ஆ) 3700 பவுண்டு. (இ) 6270 பவுண்டு (ஈ) 8060 பவுண்டு.

7. இந்த 1981ம் ஆண்டில் இந்தக் கிரிக் கெட் மைதானத்துக்கு 200 வயது ஆகிறது.
(அ) ப்ரபோர்ன் (ஆ) ஈடன் கார் டன் (இ) லார்ட்ஸ் (ஈ) அடிலெய்ட் ஓவல்.

8. ஹாக்கி விளையாட்டின் தாயகம் எது?
(அ) இந்தியா (ஆ) ஹாலந்து. (இ) ஆஸ்திரேலியா (ஈ) நியூஸிலந்து.

9. விம்பிள்டன் டென்னிஸில் மிகக் குறைந்த வயதில் வெற்றி பெற்றவர் யார்?
(அ) சார்லோட்டே டாட் (ஆ) வில் பிரட் பாட்டர்லி (இ) ரிச்சர்ட் டென்னிஸ் ரால்ஸ்டன் (ஈ) பில்லி ஜீன் கிங்.

10. சீட்டாட்டம் எங்கு தொடங்கியது?
(அ) சீனா (ஆ) அரேபியா (இ) எகிப்து (ஈ) நிச்சயமாய்ச் சொல்ல முடிய வில்லை.

விடை 61 பக்கம் பார்க்க.

போர்ஹென்ஸ்—பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்




உங்கள் பற்களை சுத்தம் செய்யும் போதே ஈறுகளையும் வலுப்படுத்த உதவுகிறது

267F-303 TAM

ஈறு உபாதையால் ஆரோக்கியமான பற்களைக்கூட இழக்க நேரிடும்



பல் டாக்டர்கள் கூறுகிறார்கள், உங்கள் பற்களை சரிவர சுத்தம் செய்யவில்லையெனில் பற்களையும் ஈறுகளையும் சுற்றி, மெல்லிய கிருமிகளின் படிவமாகிய ஊத்தை (Plaque) தோன்றுகிறது. இதுவே காலடையில் பற்காறையாக மாறி, ஈறுகளை பலவீனப்படுத்தி, அவற்றைத் தள்ளுவதால் ஆரோக்கியமான பற்களும் விழுந்து விடக்கூடும். ஈறுகெட்டால் உடல் நலமே கெடும்.



ஈறுகளுக்கு போர்ஹென்ஸ் பாதுகாப்பு



டாக்டர் போர்ஹென்ஸினுடைய ஃபார்முலாவின் விசேட (அஸ்ட்ரின்ஜென்ட்) சேர்க்கைப் பொருள் உங்கள் ஈறுகளை வலுப் படுத்தி ஈறு உபாதைகளைத் தடுக்க உதவுகிறது. ஆகவே, போர்ஹென்ஸ் டூத் பேஸ்ட், போர்ஹென்ஸ் டபிள் ஆக்ஷன் டூத்பிரஷ் கொண்டு பற்களைத் துலக்குங்கள் ஈறுகளைத் தேய்த்துக் கொடுங்கள்.

போர்ஹென்ஸ் — ஈறுகளுக்கெனவே

Regd. T.M. Geoffrey Manners & Co. Ltd.

இவனும் பின்னாலேயே சென்றான்.

இவனை மேனேஜரிடம் அறிமுகப்படுத்தி விட்டு, தன் வேலைகளைக் கவனிக்கச் சென்று விட்டாள் உமா.

அவன் மானேஜரைப்பார்த்துப் பேசிவிட்டு வருவதற்குள் அலுவலக நேரம் முடிந்து விட்டது.

'ஆனந்த்,' பில்டிங்கிலிருந்து ஒவ்வொருவராக வேலை முடிந்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள். முகேஷ் கவனித்து கொண்டிருந்தான்.

அதோ வந்து விட்டாள் உமா!

அவளை நெருங்கினான். ''மிஸ் உமா!''

திரும்பினாள். இவனைக் கண்டதும் ஆச்சரியத்தால் புருவங்கள் நெரிந்தன.

''ஒரு விஷயம் உங்களைக் கேட்க வேண்டும். ரூபா இங்கே தங்கியிருக்கும் முகவரி தெரியுமா?''

''உங்களுக்கு அது எதற்கு?''

''தேவைப்படுகிறது.''

அவளை ஏற இறங்கப் பார்த்தாள் அவள். அவனது பேச்சும், உடையும் அவளை நம்பிக்கை கொள்ள வைத்தன.

''வாருங்கள் என்னோடு. நானும் அவளும் ஒரே வீட்டில் தனித் தனி அறைதான்!''

டவுன் பஸ் வந்தது. அதில் ஏறித் தொங்கினார்கள்.

மல்லேஸ்வரத்தில் அவள் இறங்க, பின்னாலேயே அவனும் இறங்கினான். இரு அறைகள் கொண்ட அவளது சிறிய வீடு வந்ததும்—

''ஒரு உண்மையை நான் உங்களிடம் சொல்ல வேண்டும்'' என்றான்.

''எந்த உண்மையை?''

''நான் யார் என்பதை!''

''அதைத்தான் நமது அறிமுகச் சந்திப்பிலேயே சொல்லி விட்டீர்களே!''

''அதல்ல உண்மை.'' தன் பாண்ட் பாக்கெட்டில் கையை விட்டுத் தனது ஐடென்டிபிகேஷன் கார்டை அவளிடம் நீட்டினான்.

விரித்துப் பார்த்தாள் உமா. திடுக்கிட்டாள்.

(தொடரும்)





கல்கியும் கவிஞரும்

பேராசிரியர் கல்கி அவர்கள் காலமான போது (1954 டிசம்பர் 5) தென்றல் இதழில், 'கனிந்த தமிழ்நடைக் கல்கி' என்று தலைப்பிட்டு, 'மாற்றான் தோட்டத்து மலரெனினும் மணம் தந்த மலரே' என்று துணைத் தலைப்பிட்டுக் கட்டுரை எழுதி அந்த மேதையைப் பாராட்டினார் கண்ணதாசன். அதுமட்டுமல்ல 'கல்கி'யின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் தலையங்கப் பகுதியைக் காலி இடமாக விட்டு மரியாதை செலுத்தினார்.

● நேஷனல் பிக்சர் உரிமையாளரான பெருமாள் முதலியார் அவர்களின் இரண்டாவது திருமணம். அன்று காலைதான் எதிர்பாராத விதமாகக் கல்கி இறந்து விட்டார். கண்ணதாசன் மனம் வருந்தினார். பெருமாள் அவர்களின் திருமண விழாவில் கலந்து கொள்வதற்கு அவரது மனம் சங்கடப்பட்டது. என்றாலும் மனத்தைத் தேற்றிக் கொண்டு திருமணத்துக்குச் சென்றார். ஆனால் அங்கு உரையாற்றவில்லை. எத்தனையோ பேர் வலியுறுத்தியும் மறுத்துவிட்டார். கல்கி அவர்களின் மறைவு கவிஞரை மௌன விரதத்துக்கு ஆளாக்கி விட்டது. சக எழுத்தாளரிடம் — அதிலும் மாற்று முகாமைச் சேர்ந்த எழுத்தாளரிடம் அவர் வைத்திருந்த பாசத்தையும் மரியாதையையும் இந்த நிகழ்ச்சி எடுத்துரைத்தது.

— தமிழ்ப் பித்தன்

கையில் காப்பிக் கோப்பையுடன் செய்திப் பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தான் நடராஜன். ஆகாசவாணியின் செய்திகள் கரகரத்த புருஷக் குரலில் காதுகளைக் குடைந்தன. பத்திரிகையில் பாண்டிச்சேரி லாட்டரிச் சீட்டு ரிசல்ட்டைப் பார்த்ததும் தானும் ஒரு சீட்டு வாங்கியிருப்பது நினைவுக்கு வந்தது. ஒருவேளை பரிசு விழுந்திருக்குமோ?

''அபிராமி...''

பரபரப்புடன் மனைவியைக் கூப்பிட்டான்.

குளித்துவிட்டு நெற்றியிலும், வகிட்டிலும் குங்குமம் மின்னப் பிரகாசமாய் வந்து நின்றாள். சாந்தம் தவழப் புன்னகைத்தாள்.

''என் பிரீஃப் கேஸிலே ஒரு லாட்டரி டிக்கட் வச்சிருக்கேன். கொண்டா சீக்கிரம். பேப்பரில் ரிசல்ட் வந்திருக்கு. நமக்கு விழுந்திருக்கா பார்க்கலாம்.''

''தடுக்கி விழுந்தாத்தான்.'' சொல்லிக் கொண்டே உள்ளே போனாள் அபிராமி.

பத்திரிகையைப் புரட்டலானான் நடராஜன்.

விலைவாசிகள் கட்டுக்கடங்காமல் இருப்பதாக ஓர் எதிர்க் கட்சித் தலைவர் கண்டு பிடித்ததை, ஆளும் கட்சித் தலைவர் மறுத்தார். பிளேடு விளம்பரத்தில் ஒரு பெண் வித்தியாசமாய் வளைந்து நெளிந்தாள்.

பதினைந்து நிமிஷம் ஓடிப்போயிருந்தது.

சட்டென்று செய்திகளிலிருந்து வெளி வந்த நடராஜன் இன்னமும் அபிராமி பரிசுச் சீட்டைக் கொண்டு வராதது கண்டு சினந்தான் எத்தனை நாழி?... வெறும் 'மசமச' என்றுமனத்துக்குள் இட்டியவாறே உள்ளே போனான் நடராஜன்.

அபிராமி 'அவன் ஆபீஸ் பெட்டியைத் திறந்து ஏதேதோ கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். பரிசுச் சீட்டு தரையில் மிதந்தது.

''லாட்டரி டிக்கட்டைக் கொண்டுவான்னா என்ன கடிதாசியைப் படிக்கிறே?'' – எரிச்சலுடன் கத்திக் கொண்டே அருகே போனவனுக்கு, அபிராமி கையிலிருந்த கடிதத்தைப் பார்த்ததும் பகீரென்றது. அப்படியே வெலவெலத்துப் போனான்.


கல்யாணி அவனுக்கு எழுதியிருந்த கடிதம்!

நேற்றுத் தபாலில் வழக்கம்போல் அலுவலக விலாசத்துக்கு வந்த கடிதம்!

கல்யாணி அபிராமிக்குத் தெரியாத அவன் சிநேகிதி. அவனோடு இரண்டறக் கலந்து போய்விட்ட சட்டத்துக்குப் புறம்பான நாயகி.

வழக்கமாய் வரும் காதல் கடிதம்தான். அலுவலகத்திலேயே வைத்து விடுவது வழக்கம். அவசரத்தில் நேற்று மறந்து விட்டு பிரீஃப் கேஸிலேயே தங்கிப் போய்விட்டிருக்கிறது.

முழுவதுமாய்ப் படித்து முடித்த அபிராமி கடிதத்தை மடித்துப் பெட்டியில் வைத்தாள். தன் கண்களைப் பூரணமாய் விரித்து அவனைப் பார்த்தாள். எக்ஸ்ரே கதிர்கள் மாதிரி பார்வை அவனைத் துளைத்துச்



கல்யாணி எழுதிய காதல் கடிதம்

ஜெயரதன்

திகைத்தது. பின் விருட்டென்று சமையலறைக்குள் போனான்.

உறைந்து போய் விட்டான் நடராஜன்.

எவ்வளவு நேரம் போயிற்று என்று கணிக்கும் பிரக்ஞையைக்கூட மறந்திருந்தான்.

சரசரவென்று பாண்டையும் சட்டையையும் அணிந்தான். தலையை வாரிக் கொண்டு கையில் பிரீஃப் கேஸுடன் விருவிருவென்று புறப்பட்டான். சமையலறையைத் திரும்பிப் பார்க்கவும் தோன்றாமல் ''எனக்கு அர்ஜண்டா வேலையிருக்கு. நான் கெளம்பறேன்'' என்று சொல்லிக் கொண்டே வேகமாய் வெளியேறினான் நடராஜன்.

''ஏம்மா அப்பா சாப்பிடாமெயே போறு?'' என்று முரளி — மூன்றும் வகுப்புப் படிக்கிற அவன் பிள்ளை — கேட்டது காதில் விழுந்தது. லாவண்யா இன்னும் படுக்கையை விட்டு எழுந்தபாடில்லை.

யாரோ பின்னாலிருந்து கத்துகிறமாதிரி விறுவிறுவென்று பஸ் ஸ்டாப்பை அடைந்தான் நடராஜன்.

'சே! என்ன மடத்தனம் செய்துவிட்டோம்! இந்தக் கடிதத்தை இப்படி ப்ரீஃப் கேஸில் வைக்கலாமோ? வீட்டுக்குக் கொண்டு வரலாமோ? ஆபீஸ் மேஜை டிராயரிலேயே வைத்துப் பூட்டியிருந்தால் ஒரு பிரச்னையும் இருந்திருக்காது!'

அபிராமி விழிகளை விரித்துப் பார்த்தது நினைவுக்கு வந்தது. அவனையறியாமல் உடல் சிலிர்த்தது.

ஏதோ பஸ் வரவும் விருட்டென்று ஏறினான். உட்கார இடம் இருந்தும் உட்காரத் தோன்றாமல் நின்று கொண்டிருந்தான்.

அபிராமி என்ன செய்வாள் இப்போது? அவளிடம் என்ன சொல்வது? எப்படிச் சமாளிப்பது? காலையில் ஓடி வந்தாகி விட்டது. மாலையில் வீட்டுக்குப் போகத்தானே வேண்டும்? போனால் என்ன ஏது என்று கேட்பாளே! என்ன பதில் சொல்வது?

மனத்துக்குள் கேள்விகள் கோடை வெய்யிலாய்த் தகித்தன.

படிக்கிற நாளிலும் சரி, திருமணத்துக்கு முன்னும் சரி, பெண்களைத் திரும்பிப் பார்த்தவன் இல்லை. அழகான பெண்களைப் பார்த்தால் மனத்தில் ஏதோ வக்ரமாய்த் தோன்றுவதோடு சரி. மற்றபடி யோக்கியன்தான். அப்புறம் எப்படிக் கல்யாணி மனத்துக்குள் புகுந்தாள்? எப்படியோ தொடர்பு ஏற்பட்டு விட்டது. பக்கத்து சீட்டில் வேலை பார்த்தாள். புத்திசாலிப் பெண். பாரதியைப் பற்றிப் பேசுவாள். கிரிக்கெட் பற்றிக் கேட்பாள். அரசியலில் அபிப்பிராயம் சொல்வாள். இவனும் பதில் சொல்ல, அவளும் கேள்வி கேட்க, எப்படியோ 'குப்' பென்று பற்றிக் கொண்டு விட்டது. அவன் திருமணமானவன் என்று அறிந்தும் அவள் மனம் மாறவில்லை. அவனாலும் அவளை மறக்க முடியவில்லை. மறுக்க முடியவில்லை. பிரிக்க முடியாமல் இணைந்து போனார்கள். அலுவலகத்தில் திடுமென்று கல்யாணியை வேறு ஊருக்கு மாற்றி விட்டார்கள். வேண்டுமென்றுதான் செய்திருக்கிறார்கள் என்று இரண்டு பேரும் உணர்ந்தபோது, நெருக்கம் மேலும் இறுகிற்று. கடிதங்கள் தூது போயின. 'இன்ஸ்பெக்ஷன் அது இது' என்று அபிராமியிடம் சொல்லிவிட்டு மாதத்துக்கு ஒரு முறையாவது கல்யாணியைப் பார்க்கப் போய்விடுவான் நடராஜன். இதுநாள்வரை சுலபமாய்ச் சென்று கொண்டிருந்த ரயில் இன்று காலை தடம்புரண்டு விட்டது. அபிராமி தெரிந்து கொண்டு விட்டாள்!

அலுவலகத்தில் நுழைந்து தன் இருக்கையில் அமர்ந்து கொண்டான். சீக்கிரம் வந்துவிட்டபடியால் அலுவலகம் வெறிச்சோடிக் கிடந்தது. பைலை எடுத்துப் படித்துப் பார்க்க முயன்றான். மனம் லயிக்கவில்லை. அபிராமிதான் முன் நின்றாள். என்ன செய்வாள்?

ஒருவேளை தன் அப்பா அம்மாவுக்குக் கடிதம் எழுதி அவர்களை அழைத்து வந்து நியா



யம் கேட்பானோ? 'இவரை நம்பி என்னை ஒப் படைத்தீர்களே, இப்படி மோசம்செய்கிறாரே? என்று முறையிடுவானோ?

தன் மனைவியின் உறவினர்கள் எல்லோரும் சூழ்ந்து கொண்டு அவனை உற்றுப் பார்ப்பது போலிருந்தது. 'நீயா இப்படி, நீயா இப்படி?' என்று எல்லோரும் கேட்பது மாதிரி இருந்தது.

'நோ...நோ...' என்று தலையைக் குலுக்கிக்கொண்டு இருக்கையை விட்டு எழுந்தான் நடராஜன்.

மனத்துக்குள் வேதனை துருவிக் குடைந்தது.

அலுவலகத்துக்கு ஒவ்வொருவராய் வரத் தொடங்க இயக்கம் களை கட்டியது. மற்றவர்களைப் பார்க்க மனத்துக்குச் சற்றுச் சமாதானமாக இருந்தது.

''என்ன நடராஜ்! ஆச்சரியமா இருக்கு இவ்வளவு சீக்கிரம் வந்துட்டே?'' என்று கேட்டவாறே வந்தான் எதிர் சீட் ஜோஸப்.

ஏதோ முனகலாய்ப் பதில் சொல்லிக் கொண்டே, அவன் பையிலிருந்த செய்திப் பத்திரிகையை வாங்கிப் புரட்டினான் நடராஜன். விளம்பரங்களுக்கு நடுவில் கொஞ்சம் செய்திகளும் வெளியாகி யிருந்தன. மூன்றாம் பக்கத்தைப் புரட்டியதும் அதில் காணப்பட்ட செய்தி வயிற்றைக் கலக்கியது. கணவன்மீது வெறுப்புக் கொண்டு மூன்று குழந்தைகளுடன் தற்கொலை செய்து கொண்ட ஒரு பெண்ணின் படத்தை வெளியிட்டு மூன்று பத்திச் செய்தி வெளியிட்டிருந்தார்கள்.

சொரேலென்றது நடராஜனுக்கு.

ஒருவேளை அபிராமி ஏதாவது மனம் உடைந்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு விடுவாளோ? மேலே மண்ணெண்ணெயைக் கொட்டிக் கொண்டு, புடவைத் தலைப்பில் கழுத்தைச் சுருக்கிக் கொண்டு, கொல்லைக் கிணற்றில் மிதந்து கொண்டு....

'ஓ!... முடியாது. கூடாது....'

கழுத்துச் சுளுக்கிக் கொள்கிற மாதிரித் தலையை ஆட்டிக் கொண்டான் நடராஜன். வயிற்றைப் பிசைந்தது. நெஞ்சைக் குடைந்தது.

''என்னப்பா நடராஜா!... என்னாச்சு?'' என்று பதறிய வண்ணம் ஓடிவந்தான்ஜோசப்.

''ஒண்ணுமில்லே... கழுத்துலே சுளுக்கு மாதிரி இருந்தது. அதான் ஆட்டிப் பார்த்தேன். சரியாயிடிச்சு...'' கழுத்தைத் தடவிக் கொண்டே இடத்தை விட்டு எழுந்து போனான்.

மனத்தின் படபடப்பு அடங்க வெகு நேரமாயிற்று.

அலுவலக வேலையில் மனத்தைச் செலுத்த முயன்றான். மனம் லயிக்க மறுத்தது. பத்து நிமிடங்களுக்குப் பின் மீண்டும் அபிராமியிடம் போய் நின்றது.

மாலை வீட்டுக்குப் போனதும் என்ன கேட்பாள்? மெதுவாய்க் கேட்பாளா இல்லை,

அறிஞர் வாக்கு



நற்பெயர் பெற விரும்பினால் நல்லவர்களை நாடிச் செல்லுங்கள். மோசமானவரோடு தோழமை கொள்வதைவிடத் தனித்து இருப்பதே மேல்!

—ஜார்ஜ் வாஷிங்டன்

ஒருவன் குகையிலோ, வீட்டிலோ, வெளியிலோ, காட்டிலோ, மலை உச்சியிலோ, நீரிலோ வசிக்கட்டும். ஆங்காங்கே வசித்தால் யாது பயன்? சொல் சம்புவே! எவனது உள்ளம் எப்போதும் உனது சரணங்களில் நிலைபெறுமோ அவனே மேலான யோகி; அவனே பேரின்பம் காண்பவன்.

—சிவானந்தலஹரி

நம்முடைய துயரத்தை மிகைப்படுத்தி எண்ணி உழலும்போது அநாவசியமான கஷ்டத்தை நாமே வரவழைத்துக் கொள்கிறோம். துன்பத்தின் மூலம் தூய்மையடைவதென்பது மாந்தர் யாவருக்கும் பொது விதியாக இருக்கும்பொழுது நாம் மட்டும் ஏன் அதற்கு விதி விலக்குக் கோர வேண்டும்.?

—ஹெலன் கெல்லர்

முருகா என்று கூறக் கூடாது. ஓதவேண்டும். கூறுவது வேறு; ஓதுவது வேறு. கூறுவது வாக்கு மட்டும் தொழில்படுவது. ஓதுவது உணர்வுடன் காதலாகி உள்ளம் கசிந்து கண்ணீர் மல்குவதாகும்.


—கிருபானந்த வாரியார்

இருள் அகன்றுவிட்டால் அந்த இருட்டினால் ஏற்பட்ட கஷ்டங்களும் அகன்று போகும். அப்படி அகன்று போவதற்கு வெளிச்சம் தேவை. ஒரு விளக்கை ஏற்றி வைத்த மாத்திரத்தில் இருள் தானாகவே அகன்று விடுகிறது.

சம்சாரமென்னும் அந்தகாரச் சூழலில் சிக்கிக் கொண்டிருக்கிற நமக்கு வெளிச்சத்தை, விளக்கை, அருளக்கூடியவன் ஒருவன் இருக்கிறான். அவன்தான் சர்வேசுவரன்.

—ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்


லக்மே அறிமுகப்படைப்பு: பரதநாட்டின் முதன்முதல்:
புரதச்சத்துக் கண்டிஷனர் அடங்கிய ஷாம்பூ.
அழகுத் தூய்மையளிக்கும்,
உமது கூந்தலின் குறைதிருத்தும்,
பளபள புதுவளக் கட்டமைப்
பண்படுத்தும்.
ப்யூட்டி & எக்
60 மிலி & 120 மிலி
Lakme
SHAMPOO & CONDITIONER
Beauty
Lakme
SHAMPOO & CONDITIONER
Egg
Lakme
மயிரிழைகளைத் தாக்கித் துவண்டு
போக வைக்கும் சாதா ஷாம்பூக்கள்
இனி எதற்கு ? உமது கூந்தலைப்
பண்படுத்த இதோ விஞ்ஞான
முறைப்படி வளரூட்டிய லக்மே
விசேஷ ஷாம்பூ.
வாடி நொடித்த மயிரிழைக்கு
உயிரூட்டும் புரதச் சத்து, லக்மே
ஷாம்பூவிலுள்ள கண்டிஷனர்.
இது மயிரிழைகளின் குறை
திருத்துகிறது.
சரிவிகிதப் பொருத்த
முடைய அதன் உள்ள
மைப்பு கேச நலம்
ஓங்கவைத்திடும் :
ஷாம்பூவின் காரப்பங்கும் அமிலப்
பங்கும் சரிக்குச்சரி பொருந்தியிருப்
பது (pH சரிவிகிதநிலை) ஒரு
சிறப்பாகும்.
இயல்பான சரிவிகித
குணநிறைவு பெற்ற
ஷாம்பூ:
சாதா ஷாம்பூக்கள் பெரும்பாலும்
காரகுணம் மிகுந்தவை. ஆதலால்
மயிரிழை பிளந்து வாடிவிடும்.
மாறாக அதிக காரம், அதிக
அமிலம் இல்லாத நல்லுசித
நிலையில் உள்ளது லக்மே ஷாம்பூ.
எனவே கூந்தலுக்கு அதிக வலிமை,
நெகிழ்வுத்தன்மை....சிக்கல்
விழாக சீர்நிலை, நீடித்த நறுமணம்.
இனியும் உமக்கேன் சிகைச் சேதம்?
உபயோகிப்பீர் வேறேதுவுமல்ல
லக்மே ஷாம்பூ.



Gold Star®
Suitings
tomorrow is here
A SHREE RAM SILK PRODUCT
message

''பையன் ஆங்கிலம் கத்துக்கணும்னு சொன்னான். அதற்கென்ன ஆங்கிலம் தெரிந்த ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துக்கோ என்றேன்.''

''அதற்கென்ன?''

''இப்போ மலையாளம், தெலுங்கு பாஷையெல்லாம் கத்துக்கணும்கிறான்.''

– கீழை அ. கதிர்வேல்



கண்ணகி மாதிரி கண்களை விரித்துக்கொண்டு கத்துவாளா? 'சரிதான் போடி! நான் ஆண் பிள்ளை. அப்படித்தான் இருப்பேன். இஷ்டம் இருந்தால் இரு இல்லாவிட்டால் போ...' என்று பதிலுக்குக் கத்திவிடலாமா? என்ன செய்வான்? பணிந்து போவாளா இல்லை வெளியே போய்விடுவாளா? வெளியே போய் விட்டாளானால் குழந்தைகளின் கதி? ஒரு வேளை கோர்ட், டைவர்ஸ் என்று ஏதாவது பயமுறுத்துவாளோ?

மாலையில் ஏதோ ஹோட்டலில் டிபன் சாப்பிட்டான். கடைத் தெருவில் வீணாக அலைந்தான். புத்தகக் கடையில் நின்று எதுவுமே மனத்தில் பதியாமல் பிரித்துப் புரட்டிக் கொண்டிருந்தான். யாரோ இரண்டு பேர் சிரித்துக் கொண்டு போனதைப் பார்க்க எரிச்சலாய் வந்தது. அவர்கள் கால் தடுக்கிக் கீழே விழுகிற மாதிரி கற்பனை செய்து பார்த்தான். மனத்துக்கு இதமாய் இருந்தது. சாலையில் சென்று கொண்டிருந்த வாகனங்களைப் பார்க்கப் பார்க்க ஆத்திரமாய் வந்தது. 'எல்லாம் நாசமாய்ப் போக எல்லாரும் ஒழிக' என்று மனத்துக்குள் சாபமிட்டான்.

இருள் சூழ்ந்தது.

அங்கும் இங்கும் அலைந்துவிட்டு இரவு பத்து மணிக்கு வீடு திரும்பினான் நடராஜன். அபிராமி தூங்கிப் போயிருப்பாள். தானும் சட்டென்று படுத்துத் தூங்கிப் போய் விடலாமென்று நினைத்துக் கொண்டே வீட்டுக்குத் திரும்பினான்.

குழந்தைகள் இருவரும் தூங்கிப் போயிருந்தார்கள்.

படுக்கை அறையில் அவன் படுக்கை துப்புரவாக விரிக்கப்பட்டிருந்தது.

எதுவும் பேசாமல் ஆடை மாற்றிக்கொண்டான். ஹிந்துப் பேப்பரை எடுத்துக்கொண்டு படிக்கிற மாதிரி முகத்தை மூடிக் கொண்டு நாற்காலியில் அமர்ந்தான். நேரம் வளர்ந்தது. அபிராமி எதுவும் பேசவில்லை.

''நான் சாப்பிடல்லே. எனக்குப்பசியில்லே'' என்று சுவரைப் பார்த்துச்சொல்லிக்கொண்டு விருட்டென்று போர்வையை எடுத்துத் தலையோடு காலாய்ப் போர்த்திக் கொண்டு படுத்தான்.

நேரம் வளர்ந்தது. சற்று நேரம் போயிற்று.

கழுத்தில் உஷ்ணக் காற்று வீசுகிற மாதிரி உணர்ந்ததும் விருட்டென்று தலையை உயர்த்திப் பார்த்தான்.

அபிராமி!

அவனை அணைத்தவாறு அவன்மீது சரிந்து அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வையை நேருக்கு நேர் பார்க்கமுடியாமல் தன் பார்வையை விலக்கிக் கொண்டான் நடராஜன்.

அவனை இறுக ஆலிங்கனம் செய்து கொண்டாள் அபிராமி.

''ஏன் எப்படியோ இருக்கிறீர்கள்? உடம்பு சரியாகத்தானே இருக்கு?''

பூவின் நெருடலாய்க் குரல் அவன் காதுகளில் படர்ந்தது. அவள் விரல்கள் அவன் முகத்தை வருடிக் கொடுத்தன.

''உங்கள் தவிப்பு எனக்குப் புரியறது. உங்களை எனக்கு நன்றாகத் தெரியும். மனசும் புரியும். அந்தக் கடிதாசியையும் அதை எழுதின கலியாணியையும் நான் மறந்துட்டேன். எங்கிட்ட என்ன குறை இருக்குன்னு சொல்லுங்கோ. சரிபண்ணிக்கிறேன். என்கிட்ட இல்லாத என்ன கெட்டிக்காரத்தனம் அவகிட்ட இருக்குன்னு சொல்லுங்கோ. நான் அதையெல்லாம் எப்படியாவது கத்துக்கறேன்.... இதுக்காக மனசைப் போட்டு அலட்டிக்கலாமா? சாயம்பரவும் சாப்பிடலே ராத்திரியும் சாப்பிடலேன்னா உடம்பு என்னத்துக்கு ஆகும்? கொஞ்சம் காம்ப்ளான் போட்டுப் பால் கொண்டு வரட்டுமா? சாப்பிடுகிறீர்களா?....''

பரிவு, இனிமை, கனிவு ஆகிய மூன்றையும் சம விகிதத்தில் குழைத்த குரலில் அவள் சொல்லச் சொல்ல, வானைக் கிழித்துப் பூமியைப் பிளந்து, திசைகளைக் கடந்து அபிராமி விஸ்வரூபமெடுத்து வளர்ந்துகொண்டே போனான்.

மனம் நான்கு புறங்களிலும் உடைத்துக் கொண்டு இளகி, உருகி ஓட, ''அபிராமி... அபிராமி....'' என்று வாமனனாய்க் குறுகி விம்மி வெடிக்கலானான் நடராஜன்.



1



2



3



௬




7

வாழ்த்துகிறோம்!



8



௯







1. ரவிசாஸ்திரி
2. வெங்சர்க்கார்
3. சந்தீப் பட்டீல்
4. தோஷி
5. ஸ்ரீகாந்த்
6. ஷிவ்லால் யாதவ்
7. கவாஸ்கர் (காப்டன்)
8. கபில்தேவ்
9. விசுவநாத்
10. கிர்மானி
11. கீர்த்தி ஆஸாத்
12. மதன்லால்

படங்கள்: பாலஜீ







நீலகிரி எக்ஸ்பிரஸ் கோவையை நோக்கித் தத்திக் கொண்டிருந்தது.

தூரத்தே தெரிந்த சி. ஐ. டி., பாலிடெக்னிக் ஹாஸ்டல்கள் வெட்டிய கேக்குண்டங்களாய் நின்றிருக்க, பீளமேடுபஞ்சாலைகள் புகையைக் கக்கிக் கொண்டிருந்தன. கோவைக்கே உரித்தான ஐஸ் காற்று அந்த விடியற்காலை வேளையில் கம்பார்ட்மெண்டில் புகுந்து, பெர்த்துகளில் படுத்திருக்கும் பலருடைய தூக்கத்தை ஹதம் செய்ய ஆரம்பித்தது.

''இன்னும் பத்தே நிமிஷங்களில் ஸ்டேஷன் வந்துவிடும். லக்கேஜை எடுத்துக் கதவுப் பக்கமா வெச்சுக்கலாமா விஜயகீதா?'' — நான் எழுந்தபடி கேட்டேன்.

விஜயகீதா தலையை அழகாக அசைத்தாள்.

விஜயகீதா என் மனைவி. புத்தம் புது மனைவி. அவளுடைய கழுத்தில் தாலி கட்டிச் சரியாய் இருபத்தி நாலு மணி நேரம்தான் ஆகிறது. மேள தாளம் இல்லாமல், ஐயர் இல்லாமல், விருந்து இல்லாமல், வாழ்த்துவதற்கு ஒரு நண்பன் இல்லாமல் ஒரு கோயிலில் தெய்வத்தைச் சாட்சியாக வைத்து மாலை மாற்றிக் கல்யாணத்தை முடித்துக் கொண்டேன். அவசரக் கல்யாணம்.

விஜயகீதாவும் நானும் லக்கேஜை நகர்த்திக்கொண்டு கதவருகே வந்தோம். இருட்டு விலகிக் கொண்டிருந்த அந்த இனிமையான காலை வேளையில் பச்சைப் பசேலென்ற வயல் வரப்புக்கள் — ஜன்னலின் வழியே தரிசனம் தந்து கண்களைக் குளுமைப்படுத்தியது.

''இதுக்கு முன்னாடி நீ கோயமுத்தூருக்கு வந்திருக்கியா விஜயகீதா?'' நான் உள்ளங்கைகளைச் சூடு பறக்கத் தேய்த்துக்கொண்டே விஜய கீதாவைக் கேட்டேன்.

''உம்... வந்திருக்கேன்... ஒரே ஒரு தடவை!''

''எதுக்கு?''

சாட்டை அடி பட்டாற்போல் அவள் என்னை ஏறிட்டாள். அப்போதுதான் அந்தக் கேள்வியின் வக்ரம் எனக்குத் தெரிந்தது.

''ஸாரி விஜயகீதா... யதார்த்தமா கேட்டுட்டேன்...''

விஜயகீதா ஒன்றும் பேசாமல் தலை குனிந்தபடி ஜன்னல் கதவைக் கீறிக் கொண்டிருந்தாள். கல்யாணமான இந்த இருபத்தி நாலு மணி நேரத்தில் இந்த நிமிஷம் முதல் முறையாய் அவளுடைய இதயத்தைக் கீறியிருக்கிறேன். இனி வரப்போகும் நாட்கள், மாதங்கள், வருஷங்களில் அவளுடைய இதயத்தை எத்தனை தடவை இப்படிக் கீறப் போகிறேனோ?

முதல் தடவையாய்ப் பயந்தேன்.

கண்ணாடிப் பாத்திரத்தைக்கையில் எடுத்துக்கொண்டு — எண்ணெய் கொட்டிவிட்ட தரையில் நடப்பதைப் போல் — இவளை ஜாக்கிரதையாய்க் கையாள வேண்டும்.

இரண்டு நாட்களுக்கு முன்னால்...

ஹோட்டல் 'சொர்க்கா'வில் சின்னதாய் இரண்டு பெக் விஸ்கியை வயிற்றில் வார்த்துக்கொண்டு சில்லி சிக்கனைச் சாவகாசமாய்க் கொறித்துவிட்டு இரவு பதினொரு மணி வாக்கில் புறப்பட எழுந்து வெளியே வந்தேன்.

ஹோட்டல் போர்ட்டிகோவின் முன்புறம் நின்றிருந்த ஏகப்பட்ட கார்களின் மத்தியில் என் 'பஜாஜ்' ஸ்கூட்டர் தெரிய — அதை நோக்கி நடந்தேன்.

ஸ்கூட்டரை ஸ்டாண்டிலிருந்து விடுதலை செய்து கிக்கரின் மேல் காலை வைத்து உதைக்கப் போனேன்.

அப்போதுதான் அந்தப் பெண் என் கண்ணில் பட்டாள். ஓர் அம்பாஸிடர் காருக்கும், பத்மினி பிரீமியருக்கும் இடையில் இருந்த இடைவெளியில் — யாருக்கோ பயந்துகொண்டு உடலைக் குறுக்கிக்கொண்டு



உட்கார்ந்திருந்தாள். கண்கள் நாலா பக்கமும் சுழன்றன.

நான் ஸ்கூட்டரை மறுபடியும் 'ஸ்டாண்ட்' செய்துவிட்டு, அவளை நோக்கி மெதுவாய்ப் போனேன். என் காலடிச் சத்தம் கேட்டு விருக்கென்று திரும்பினாள் அவள்.

''ஏய்...என்ன பண்றே இங்க உட்கார்ந்துண்டு?''— நான் அதட்டுகிற குரலில் கேட்க அவள் உடம்பு முழுதும் பதறினாள்.

''ப்ளீஸ் சத்தம் போட்டுப் பேசாதீங்க... போலீஸ் இங்கே வந்துடும்.''

''போலீஸா....?'' — நான் திகைத்தேன்.

''ஆமாங்க!... ஹோட்டல்ல ரெய்ட் நடத்துட்டிருக்கு!... போலீஸ் வர்றதைப் பார்த்துட்டுச் சுவரேறிக் குதிச்சு வந்துட்டேன்.... போலீஸ் இன்னமும் உள்ளாரத்தான் இருக்கு....''

''ஓ! நீ அந்தக் கேஸா?''

அவள் ஆமாம் என்கிற மாதிரி தலையை அசைத்துவிட்டு, மருண்ட விழிகளோடு நாலா பக்கமும் பார்த்தாள். இந்தத் 'தொழிலுக்கு' அவள் புதியவளாய்த்தான் இருக்க வேண்டும்.

''நீ எங்கே போகணும்?'' — நான் கேட்டேன்.

''பூக்கடை'' என்றாள் அவள்.

''சரி... என்கூட வா... அந்த வழியில் தான் நான் போறேன். உன்னைப் பூக்கடையில் இறக்கிவிட்டுட்டு நான் போறேன்.''

அவள் ஆச்சரியமாய் என்னை ஏறிட்டாள்.

விழிகளில் வியப்பு ஊர்வலம் போனது.

''என்ன பாக்கறே? நிஜமாத்தான் சொல்றேன்.... ம்... எந்திரிச்சு தைரியமா என் கூட வா....''

அவள் தயங்கித் தயங்கி எழுந்தாள்.

நான் ஸ்கூட்டரை நோக்கி நடந்தேன்.

அவள் சுற்றுமுற்றும் பதப் பார்வை பார்த்துக் கொண்டே என் பின்னால் வந்தாள்.

ஸ்கூட்டரை உதைத்து உயிரூட்டினேன்.

''ம்... பின்னால் ஏறி உட்கார்....''

அவள் சங்கோஜப்படாமல் ஏறி உட்கார்ந்தாள். என் முதுகில் பூப்பந்துகள் செல்லமாய் மோதின. அவளுடைய இடுப்பின் கதகதப்பு என் இடுப்பில் ஒட்டிக் கொண்டது.

ஸ்கூட்டரைக் கிளப்பிக் கொண்டு சாலையில் பாய்ந்தேன். விரைந்தேன்.

''உம் பேர் என்ன?''

''ஒவ்வொரு கேள்வியாக் கேட்டு நேரத்தை வேஸ்ட் பண்ணாதீங்க... என்னைப் பத்தின விவரம்தானே உங்களுக்கு வேணும்? சொல்றேன் கேட்டுக்குங்க. என்னோட முழுப் பெயர் விஜய கீதா. அப்பா, அம்மா சின்ன வயசா நான் இருக்கிறப்பவே காலமாயிட்டாங்க! அண்ணன், தங்கச்சி, அக்கா...கூடப் பிறந்தவங்க யாருமேயில்லே. ஒரு குஜராத் சேட்டோட வீட்டு வேலை பண்ணிக்கிட்டே படிச்சேன். அப்பா அம்மா இல்லாத அனாதைப் பொண்ணுதானேங்கிற தைரியத்திலே முதல்ல சேட்டும், அப்புறமா எங்க ஸ்கூல் டிராயிங் மாஸ்டரும் என்னை வலுக்கட்டாயமாகக் களங்கப்படுத்தினாங்க. இந்த விஷயத்தை அரசல் புரசலாத் தெரிஞ்சுக்கிட்ட. சில ஆண் மிருகங்களும் என்னை நெருங்க — நான் எதிர்க்க முடியாம—தோத்துப் போய் — இந்தச் சகதியில் விழுந்தேன். பூக்கடையில் இப்ப சின்னதா ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அதில தங்கியிருக்கேன். இனியும் உங்களுக்குஎன்னவிவரம் வேணும்?''

மூச்சு விடாமல் படபடவென்று பேசினாள் விஜயகீதா.

''போதும்....போதும்.... இந்த விவரம் போதும்...''

ஆள் அரவம் இல்லாத அண்ணா சாலையில் அறுபதில் போனேன்.

''என்னைப் பத்தி எவ்வளவு அக்கறையா கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டீங்க! அதே மாதிரி உங்களைப் பற்றித் தெரிஞ்சுக்க எனக்கு ஆசை இருக்காதா என்ன?''

நான் லேசாய்ச் சிரித்துக் கொண்டே, ஸ்கூட்டரைப் பூக்கடை போகும் பாதையில் ஓடித்தேன். ''ஏறக்



குறைய உன் கதை மாதிரிதான். என்கதையும். ஸ்கூல் ஃபைனலை முடிக்கிறப்போ அம்மா காலமானா. டிகிரி முடிக்கிறப்போ அப்பா காலமானார். சொந்த பந்தம், கூடப் பிறந்தது எதுவுமே இல்லே. இன்னிக்கு நான் ஒரு கம்பெனியில் அதிகாரி. வயசு முப்பத்தி நாலாகிறது. இன்னமும் கல்யாணமாகவில்லே.''

''ஏன் கல்யாணம் பண்ணிக்க இஷ்டமில்லையா?''

''இஷ்டந்தான்... ஆனா எந்தப் பொண்ணையுமே என்னால நம்ப முடியல்ல. சரஸ்வதின்னு ஒரு பொண்ணை உயிருக்கு உயிராக் காதலிச்சேன். அவளும் என் மேலே உயிரா இருந்தாள். அவளையே கல்யாணம் பண்ணிக்கவும் ஆர்வமா யிருந்தேன். ஒரு நாள் புதன் கிழமை ராத்திரி ரேஸ் கோர்ஸ் ரோட்டில் ஒரு நண்பனைப் பார்க்கப் போனப்ப இருட்டில் ஆள் அரவம் இல்லாத ரோட்டில சரஸ்வதி ஏகப்பட்ட சிரிப்போடு ஒருத்தனோட அணைப்பில மெல்ல நடந்து வந்திண்டிருந்தா... என்னைப் பார்த்ததும் அவள் முகம் போன போக்கும் விட்ட வியர்வையும் பார்க்கச் சகிக்கல்லே. அந்த நிமிஷத்திலிருந்து எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் இவளும் அப்படிப்பட்டவள்தானோ என்கிற மனப்பான்மை என்னையறியாமலே எனக்கு வந்துடுத்து...''

விஜயகீதா பட்டென்று கேட்டாள். ''அப்படீன்னா எப்பவுமே கல்யாணம் பண்ணிக்க மாட்டீங்களா?''

''பண்ணிக்கத்தான் போறேன்!''

''எப்போ?''

நான் சட்டென்று ஸ்கூட்டரின் வேகத்தைக் குறைத்து, சாலையின் ஓரத்துக்குக் கொண்டு வந்து நிறுத்தினேன். அவளைத் திரும்பிப் பார்த்துச் சொன்னேன். ''நீ சம்மதம் கொடுத்த பின்னாடி!''

அவள் சரேலென ஸ்கூட்டரின் பில்லியனிலிருந்து அதிர்ச்சியோடு கீழே குதித்தாள்.

அவள் கண்கள் இடுங்க என்னைப் பார்த்தாள். ''என்ன விளையாடறீங்களா? இந்த விஜயகீதாவோட உடம்பை ஏகப்பட்ட பேர் தொட்டாச்சு...''

''அது கடந்த காலம். இப்ப உன்னோட வாழ்க்கையை நீயே ரினிவூவல் பண்ணிக்கப் போறே... இனிமேல் எனக்கு மட்டும் உன்னோட மனசையும் உடம்பையும் தர்றதுக்கு நீ தயாரானால் உன்னை நான் மனைவியா ஏத்துக்கத் தயார்.... என்ன சொல்றே?''

விஜயகீதா உணர்ச்சியில் தத்தளித்தாள். ''எனக்குக் குழப்பமா இருக்கு.''

''ஒண்ணும் அவசரப்பட வேண்டாம். இந்தா என்னோட விசிட்டிங் கார்டு! நாளைக்கு சாயந்தரம் வரைக்கும் யோசனை பண்ணு. உனக்குச் சம்மதம்னா இந்த அட்ரஸுக்கு வா. சம்மதம் இல்லேன்னா வராதே! ஒரு விஷயம். இன்னும் ரெண்டு நாள்லே நான் பிரமோஷனிலே கோயமுத்தூர் போறேன். மறுபடியும் மெட்ராஸ் வரமாட்டேன்...''

சொல்லிவிட்டு ஸ்கூட்டரை உதைத்தான்.

அவள் அயர்ந்து போய் நின்றிருந்தாள்.

மறுநாள் மாலை, ஆறு மணிக்கு என்னைத் தேடி விஜயகீதா வந்தாள்.

விடிந்து கொண்டிருந்த அந்தக் காலை நேரத்தில் கோவை ரயில்வே ஸ்டேஷன் ஒரு விடலைப் பையனைப் போல் சுறுசுறுவென்று இருந்தது.

நானும் விஜயகீதாவுமாய் ஆளுக்கொரு சூட்கேஸைத் தூக்கிக் கொண்டு நடந்தோம்.

''ஹோட்டல் 'குரு'வில் தங்கப் போறோம். ஒரு டபுள் ரூம் ஏற்கனவே புக் பண்ணியாகிவிட்டது...''

''ஆபீஸ் குவார்ட்டர்ஸ் கிடைக்க இன்னும் எத்தனை நாளாகுமாம்?'' விஜயகீதா உண்மையான கவலையோடு கேட்டாள்.

''எப்படியும் பதினைஞ்சு நாளாகும். அதுவரைக்கும் ஓட்டல் வாசம்தான்!''

நான் சொல்லிக் கொண்டிருந்தபோதே இரண்டாவது பிளாட்பாரத்தில் வந்து நின்ற வெஸ்ட் கோஸ்ட் எக்ஸ்பிரஸைப் பிடிப்பதற்காக வெள்ளமாய் ஒரு கும்பல் மோத விஜயகீதா பின்னால் தேங்கினாள். ஒரு அழகான வாலிபன் அவள் எதிரே வியந்து நின்றான்.

அவன் ஏதோ கேட்க – விஜயகீதா ஏதோ பதில்சொல்ல இரண்டு நிமிடம் கழிந்தது. அவன் என்னைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே ஒரு கேலிப் புன்னகையோடு எதிர்ப் பக்கமாய்ப் போனான்.

விஜயகீதா என்னை நெருங்கினாள். ''என்னோட பேசின அந்த இளைஞன் யாருன்னு கேக்க மாட்டீங்களா?''

நான் அவளைப் பார்த்துப்புன்னகைத்தேன். விஜயகீதா தயங்கினாள். பிறகு சொன்னாள். ''அவன் என்னோட பழைய கஸ்டமர்.''

''நினைச்சேன்!''

''அவன்கிட்ட எனக்குக் கல்யாணம் ஆயிட்ட விஷயத்தைச் சொன்னேன். சிரிச்சான்.''

''சிரிக்கட்டும் போறான். விடு...''

ஸ்டேஷனுக்கு வெளியே ஆட்டோக்கள் அணிவகுத்து நிற்க – வரிசைக் கிரமமாய் வந்த ஆட்டோ ஒன்றில் ஐக்கியமானோம்.


அடுத்த ஐந்தாவது நிமிடம்...

அவள்: ''உன் பிள்ளை ரகு என்ன படிக்கிறான்?''

இவள்: ''அவனா!... பி.காம், ரெண்டாம் வருஷம்!''

அவள்: இந்தக் காலத்து பசங்க எங்க ஒரு வருஷத்திலேயே பாஸ் பண்றதுங்க!''

-வி. பார்த்தசாரதி




உங்கள் கேசம் அடர்த்தியின்றி சக்தியின்றி இருக்கிறதா? உங்கள் கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும் ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தியின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும் காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம் நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப் படியவைத்து அதற்குத் தேவையான எல்லா ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரைவளம் உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும் தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
EGG
Halo
SHAMPOO
HES. G. 4. TM

ஹோட்டல் குரு ரிசப்ஷன் கௌண்டரில் இருந்தோம். ரிஸப்ஷனிஸ்ட் கேர்ள் அழகான ஆங்கிலத்தில் கொஞ்சினாள். "ஸார் உங்களுக்காக ஒரு டபுள் ரூம் ஏழாவது மாடியில் ரிசர்வ் செய்யப்பட்டிருக்கிறது. ரூம் நெம்பர் 205."

எனக்கு ஆயாசமாய் வந்தது. "செவன்த் ப்ளோரா? மை குட்னஸ்!" ஒரு போலியான கவலையோடு தலையில் கை வைத்தேன். "ஃபர்ஸ்ட் ப்ளோர் செகண்ட் ப்ளோரில் ரூம் கிடைக்காதா?"

"ஸாரிஸார்...எல்லா அறைகளும் ஃபுல்."

"ம்...." – பெருமூச்சு ஒன்றை விட்டபடி லெட்ஜரில் பெயரைப் பதிவு செய்துவிட்டு லிஃப்டில் ஏறி ஏழாவது மாடியை அடைந்து 205ம் நெம்பர் அறைக்குள் அடைபட்டோம்.

பத்து மணி சுமாருக்கு ப்ரீப் கேஸை எடுத்துக்கொண்டு ஆபீஸ் போக ஆயத்தமானேன். நான் லிப்டில் ஏறி க்ரௌண்ட் ப்ளோர் பட்டனைத் தட்டினேன்.

லிப்ட் ஊஞ்சலாய் இறங்க–

முப்பதாவது விநாடி ரிசப்ஷன் கௌண்டர் அருகே நடை போட்டேன்.

ஓட்டல் வாசலை விட்டுக் கீழே இறங்க முயன்ற அதே நேரம் – ரயில்வே ஸ்டேஷனில் விஜயகீதாவோடு பேசிய அந்த அழகான வாலிபன் ஓட்டலுக்குள் நுழைந்து கொண்டிருந்தான்.


ஒரு விநாடி என் இதயம் நொண்டிக் கொள்ளத் தயங்கி நின்றேன். அடுத்த விநாடியே சரேலெனத் தெருவில் இறங்கி–ஆபீஸ் போக ஆட்டோவைத் தேடினேன்.

இரவு எட்டு மணி.

எதிர்பார்த்ததற்கு முன்பாகவே டைரக்டர்ஸ் மீட்டிங் முடிந்துவிட டின்னரை அவசர அவசரமாகக் கொறித்து விட்டு–ஆட்டோ பிடித்து ஹோட்டல் குரு 205 அறைவாசலில் வந்து ஆர்வமாய் விழுந்தேன்.

"டாக்டர்! நீங்க இப்பப் பண்ணப்போற ஆபரேஷன்லே நான் பிழைச்சு எழுந்து விடுவேனு...?"

"உங்களுக்குப் பண்ணற ஆபரேஷன்லிருந்துதானே, 'இந்த ஆபரேஷன் பண்ணினு மனுஷன் பிழைப்பானு, மாட்டானு' என்கிற விஷயத்தையே நாங்க தெரிஞ்சுக்கப் போறோம்!" - ஷங்கர் ஷர்மா



கதவை 'டொக் டொக்' என்று சப்திக்கப் போனேன்.

அறையின் உள்ளே இருந்து சிரிப்பும் குரல்களும் பீறிட்டன. "ஓ! நீங்க ரொம்ப மோசம்...! அப்பப்பா... என்ன முரட்டுப் பிடி!" ஆண் குரல் சிரித்தது. "அட! என்னமோ புதுசா தொடறமாதிரி வெட்கப்படறே? இப்படி வா!"

நான் அப்படியே ஆணி அடித்த மாதிரி நின்றேன்.

மனசுக்குள் ஒரு பழமொழி ஓடியது.

'நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் – அது எச்சில் தொட்டிக்குத்தான் ஓடும்!'

ஒரு ஐந்து நிமிஷத்துக்குப் பின்னால்–

"ஸார்...."

ஓட்டல் அறைகளைச் சுத்தம் செய்யும் க்ளீனர் பையன் நின்றிருந்தான். "என்ன ஸார்... இங்க நின்னுக்கிட்டிருக்கீங்க.....? அம்மா 25ம் நெம்பர் ரூம்ல உங்களுக்காகச் சாப்பிடாம வெயிட் பண்ணிட்டிருக்காங்க!"

நான் சட்டென்று பிரகாசமானேன்.

"25ம் நம்பர் அறையா?"

"ஆமா... ஸார்...! கார்த்தாலே நீங்க வெளியே புறப்பட்டுப் போனதும் பர்ஸ்ட் ப்ளோர்ல ஒரு ரூம் காலியாச்சு. ரிசப்ஷனிஸ்ட் அம்மாதான் நீங்க ஆசைப்பட்டீங்கன்னு சொல்லி ரூமைக் கீழே மாத்திடுச்சு..."

நான் படபடத்தேன். "அப்ப இந்த ரூம்லே இருக்கிறது யாரு?"

"பெங்களூர்லேருந்து வந்திருக்காங்க..! புருஷன் பெஞ்சாதி மட்டும்தான்..."

லிப்டுக்கு எதிரிலேயே 25ம் நெம்பர் அறை. அறை வாசலில் எனக்காக காத்துக் கொண்டு நின்றாள் என் விஜய கீதா.

"ஒரு நிமிஷம்! எனக்காகக் கடை வீதி வரைக்கும் வரமுடியுங்களா?"

நான் திகைத்தேன்.... "ஏன் என்ன வாங்கணும்?"

"ஸ்லிப்பர்..."

"ஸ்லிப்பரா?... ஏன் உன்னோட ஸ்லிப்பர் நல்லாத்தானே இருந்துச்சு?"

"காலையில பத்துமணிவரைக்கும் நல்லாத்தான் இருந்துச்சு... அதுக்குப் பின்னாடிதான் இப்படி யாயிடுச்சு..."–சொல்லிக்கொண்டே அறையின் மூலையில் கிடந்த ஸ்லிப்பர்களை எடுத்துக் காட்டினாள் விஜய கீதா.

இரண்டு ஸ்லிப்பரும் நார்நாராய்ப் பிய்ந்து தொங்கின.

நான் விஜயகீதாவைக் குழப்பமாய் ஏறிட்டேன்.

"நீங்க ஆபீஸுக்குப் போன பின்னாடி ரயில்வே ஸ்டேஷனில் என்னைப் பார்த்துப் பேசிய அந்த ராஸ்கல் இங்கே வந்திருந்தான். 'இப்ப என்கூட வா'ன்னு கையைப் பிடிக்க வந்தான். நியாயமாச் சொல்லிப் பார்த்தேன். அந்த ராஸ்கலுக்குப் புரியல்லே. திரும்பவும் என்னைத் தொட வந்தான்.... அதுக்கப்புறம்தான் ஸ்லிப்பர் இப்படியா விடுச்சு...."

"கீதா! என் விஜய கீதா!"–மனைவி விஜய கீதாவை மூச்சுத் திணற இறுக்கி அணைத்துக் கொண்டேன்.

கங்கை நதியில் ஒரு பிள்ளை



ராம் பிரசாத்

காசி புண்ய க்ஷேத்திரம். கங்கைக் கரை.

அவன் கரையில் நின்றுகொண்டு கிட்டத் தட்ட ஒரு மைல் அகலம் இருப்பது போல் தோற்றமளித்த பிரவாகத்தைப் பிரமிப் புடன் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த நீரோட்டத்திலிருந்து கண்களை எடுக்கவே அவனுக்கு மனம் இல்லை. இதுவரை அவன் எத்தனையோ நதிகளைப் பார்த்ததுண்டு. இந்த நதியைப் பார்க்கும்போது அவன் மனசை என்னவோ செய்தது.

பத்துப் பதினைந்து படிகள் இறங்கியவுடன் தண்ணீர். தண்ணீருக்கு அருகில் அகலமாக இருந்த படி ஒன்றில் அங்கங்கே துணிக் குடைகளின் கீழே பண்டாக்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களைச் சுற்றித் தம் பாவங்களைப் போக்கிக் கொள்ள வந் துள்ள பல ராஜ்யங்களைச் சேர்ந்தவர்கள். அத்தனை பேர் முகங்களிலும் ஒரு பரவசம்.

அவன் ஒவ்வொரு படியாக இறங்கினான். புரோகிதர்களின் முகங்களை ஒவ்வொன்றாகப் பார்த்தான். அவர்களில் கொஞ்சம் வய தானவராகத் தெரிந்த ஒருவரைத் தேர்ந் தெடுத்தான். அவரிடம் "திதி செய்யணும் அப்பாவுக்கு" என்றான்.

"சரி... சட்டையைக் கழற்றி வைத்து விட்டு ஸ்நானம் பண்ணுங்கோ. இந்தக் 'கட்டத்திலே' ஸ்நானம்தான் விசேஷம். திதி, சிராத்தம் எல்லாம் செய்யணும்னால் அடுத்த கட்டத்துக்குப்போகணும். பட கிலே போயிடலாம்" என்றார்.

கையிலிருந்த பையையும் சட்டையையும் அவரைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டுத் தண்ணீரில் இறங்கினான். ஒரு தடவை மூழ்கி எழுந்தான். உடலெங்கும் பரவசம் ஏற்பட்டது..

அடுத்த 'கட்டத்'துக்குப் போவதற்குப் படகு ஒன்றைக் கூப்பிட்டு நிறுத்தி வைத் திருந்தார் புரோகிதர். மீனவர்களின் கட்டுமரத்தைப் போல் சின்னப் படகு. நான் கைந்து கட்டைகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி நடுவில் குழிவாக இருந்தது. படித் துறையிலிருந்து ஒரு காலை எடுத்துப் படகி னுள் வைத்தபோது அது அப்படியும் இப் படியும், ஆடிக் குலுங்கியது. பயந்துபோனான். புரோகிதரைப் பிடித்துக் கொண்டான்.

படகு மெதுவாகப் பிரவாகத்தின் நடுவே போயிற்று. ஏகப்பட்ட படகுகள் நதியில் போய்க் கொண்டும் தண்ணீர் ஓட்டத்தை எதிர்த்து வந்து கொண்டும் இருந்தன. பெரிய ஸ்டீம் லாஞ்சுகள் கிர்.... என்ற சப்தத்துடன் எதிர்ப் பட்டன.

"திதி அப்பாவுக்கு என்று சொன்னீர்கள்?"

"ஆமாம்... அப்பாவுக்குத் தான்.."

சினிமாவில் காட்சி மாறு வது போலத் திடீரென்று நழுவிய மனம் அப்பாவிடம் போயிற்று. அந்த நினைவுகள் கங்கையாகப் பெருகியது. அப்பா.... அப்பா... இந்தக் கங்கையிலே மூழ்கினாலும் என் பாவம் போகுமா?... அப்பா....அப்பா...!

அவன் அப்பாவுக்கு ஒரே பிள்ளைதான். தம்பி தங்கை கிடையாது. சின்ன வயசில் அம்மா போய்விட்டாள். வேறு கல்யாணம் கூடப் பண்ணிக் கொள்ளாமல் அப்பா அவ னுக்குச் சமையல் செய்து போட்டுப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பினார். அப்பாவுக்கு அவன் செல்லம். கையில் எப்போதும் காசு நட மாடும். வீட்டில் சரியான சாப்பாடு இல் லாததால் அவ்வப்போது ஹோட்டல் சாப்பாடு, சினிமா... நண்பர்கள்...

அவனுக்குப் படிப்பு சரியாக வரவில்லை. பத்தாவதைத் தாண்ட முடியவில்லை.

"போகிறது போ. என்னோடு ஊரிலேயே இரு" என்று சொன்னார் அப்பா. அவருக் குப் பத்து மா நிலம் இருந்தது. நல்ல பாசன நிலம். வேறு பந்த பாசம் இல்லாததால் அவர் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கும் நிலம்.— அவன் வயல் பக்கம் எல்லாம் போய்ப் பார்ப்பது கூட இல்லை. அவன் படிப்புக்கு அந்தச்சின்ன டவுனில் என்ன வேலை கிடைக்கும்? ஜவுளிக்கடை ஒன்றில் துணி அளக்கும் வேலைதான் கிடைத்தது. சரி என்று சேர்ந்து விட்டான். அப்பாவுக்கு அவன் அங்கு வேலைக்குச் சேர்ந்தது பிடிக்க வில்லை. கோபித்துக் கொண்டார்.

அப்பா சொல்வது எதையுமே அவன் எப்போதுமே கேட்டதில்லை.

அடுத்து ஒரு காரியத்திலும் அப்பா சொன்னதைக் கேட்கவில்லை.

அவன் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்பட்டான் பெண் அந்த டவுனில் ஆரம்பப் பள்ளிக்கூடம் ஒன்றில் ஆசிரியை. துணி எடுக்க வந்தபோது அவள் பார்த்த பார்வையில் அவன் புரிந்து கொண்டான். அவளும் சரி சொன்னாள். அப்பாவிடம் சொன்னான். அவர் அந்தப் பெண்ணைப் பற்றி விசாரித்தார். அப்பா இல்லாமல் அம்மா வோடு தன்னிச்சையாக வளர்ந்த பெண். அவளைப் பற்றி நாலு பேர் நல்லபடியாகச் சொல்லவில்லை. அதனால் அவர் இந்தப் பெண் வேண்டாம்பா என்றார். "இவள் டவுன் வாசத்திலே இருந்தவள். உன்னைக் கவிழ்த்து விடுவாள். இவ நடை உடை யும் பார்வையும் எனக்குப் பிடிக்கவில்லை" என்றார். அவன் கேட்கவில்லை.

கல்யாணம் நடந்தது.

கொஞ்ச நாட்கள் அவனும் கிராமத்தில் அந்த வீட்டில் இருந்து கொண்டு டவுன் பஸ்ஸில் பள்ளிக்கூடத்துக்குப் போய்க் கொண்டிருந்தாள். நாலு மாசம் கூட ஆகியிருக்காது. ஒரு நாள் அவன் சொன்னான், டவுனில் ஜாகை வைக்கப் போவதாக. ''வீடுபார்த்து விட்டாயா?என்ன வாடகை?'' என்று அப்பா கேட்டார். ''ஐம்பது ரூபாய்'' என்றான். ''உன்னால் கொடுக்க முடியுமா? டவுனில் வீட்டு வாடகை கொடுத்துக்கொண்டு பால் கறிகாய் வாங்கிக் கொண்டு குடித்தனம் செய்வது கட்டிவருமா?'' என்று கேட்டார். ''முடியும்'' என்றான். ''சரி'' என்றார். ''பாத்திரம், இன்னும் முக்கியமான சாமான்கள் வாங்கவேண்டும். ஐந்நூறு ரூபாய் வேண்டும்'' என்றான். கொடுத்தார்.

நாலைந்து மாதங்கள் அவன் வரவில்லை.

ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை வந்தான். அவர் சமைத்துப் போடச் சாப்பிட்டான். கிளம்பும்போது சொன்னான். ''நானே சின்னதாக ஒரு ஜவுளிக் கடை வைக்கலாம் என்று பார்க்கிறேன். கணக்கு வழக்கை எல்லாம் அவள் சரியாகப் பார்த்துக் கொள்வாள்.''

தாம் நினைத்தது சரிதான். இது அவன் யோசனை இல்லை என்பதைப் புரிந்து கொண்டார்.

''அவள் பள்ளிக்கூட வேலை?''

''அதை விட்டு விட்டுக் கடையைப் பார்த்துக்கொள்வாள். கவுண்டரில் ஒரு பெண் பிள்ளை உட்கார்ந்தாலே வியாபாரம் நன்றாக ஆகுமாம். கடைக்கு இடம் எல்லாம் கடைத் தெருவில் பார்த்து விட்டேன். ஒரு அஞ்சாயிரம் ரூபாயாவது வேணும்.''

''அஞ்சாயிரமா..? அது போதுமா...?''

''முதலில் அஞ்சாயிரம் கட்டினால் பத்தாயிரத்துக்குத் துணி எடுக்கலாம்.''

''உம்...?'' என்றார் அவர்.

''கொஞ்சம் நிலத்தை விற்க வேண்டியிருக்கும். விற்கும் நிலத்தையும் இரண்டு வருஷங்களில் வாங்கிவிடலாம்...''

''நிலத்தை விற்பதை மறந்துவிடு. நான் இருக்கிறவரையிலே அது முடியாத காரியம், நான் போன பிறகு என்ன வேணுமானாலும் பண்ணிக் கொள்.''

''முடியாது. இப்பவே விற்க வேண்டும். என் பங்கைத்தான் கேட்கிறேன்.''

''உன் பங்கென்று யார் சொன்னார்கள்?''

''தாத்தா உங்களுக்கு வைத்துவிட்டுப் போனது. அதிலே எனக்கும் பங்கு உண்டு.''

''தாத்தாவிடம் நான் எப்படி இருந்தேனோ அந்த மாதிரி நீ என்னிடம் இருந்தால் சொத்திலே பாகம் இருக்கும்.''

''முடிவாக என்ன சொல்கிறீர்கள்? தர மாட்டீர்களா?''

அவர் மௌனமானார்.

அவன் சைக்கிளை எடுத்துக் கொண்டு கோபத்துடன் வெளியே நடந்தான்.

ஒரு நாள் நல்ல வெய்யிலில் வேளையில் அவன் சைக்கிளில் வந்தான். வீட்டில் அவர் இல்லை. ஆடி மாதம். உழவு நாட்கள். வயலுக்குப் போயிருந்தார். அவனும் அங்கே போனான்.



சைக்கிளைச் சாலை ஓரத்தில் கருக மரத்து நிழலில் சாத்தி வைத்து விட்டு அவர் இருக்கும் இடத்துக்கு நடந்தான்.

அப்போது தான் உழவுவேலைமுடிந்து ஆட்கள் மாடுகளை அவிழ்த்து ஓட்டிக் கொண்டுபோயிருந்தார்கள். ஊருக்கு மேற்கே ஐந்நூறு பர்லாங் தூரத்தில் ஆறு இருந்தது. அதிலிருந்து பெரிய வாய்க்கால் ஒன்று பிரிந்து வந்தது. பெரிய வாய்க்காலிருந்து அங்கங்கே சின்னச் சின்ன வாய்க்கால்களாகப் பிரியும். அப்படிப் பிரியும் இடத்தில் பெரிய வாய்க்காலின் குறுக்கே கட்டைச் சுவர் எழுப்பி நடுவில் நாலைந்து அடிக்கு மரத் தடுப்பு இருக்கும். அந்த இடத்தில்

இடுப்புக்கு மேலே கூடத்தண்ணீர் இருக்கும். வயலிலிருந்து திரும்பும் போது அவர் அந்த இடத்தில் இறங்கிக் குளித்துவிட்டு வருவார்.

வழக்கம்போல் மேல் துண்டை முதலில் நனைத்துக் கட்டைச் சுவரில் இரண்டு அடி அடித்துவிட்டு நிமிர்ந்தபோது அவன் கரையில் வந்து நிற்பதைப் பார்த்தார்.

எதிர்பாராத நேரத்தில் இடத்தில் அவனைப் பார்த்ததும் ''என்னப்பா சமாசாரம்?'' என்று கேட்டார்.

அவன் பையிலிருந்து ஒரு காகிதச் சுருளை எடுத்தான். ''இதிலே நீங்கள் கையெழுத்துப் போடணும்'' என்றான்.

கரைக்கு ஏறி வந்தார். ''என்ன பேப்பர் அது?''

''நான் வக்கீல் குமாஸ்தாவைக் கேட்டுக் கொண்டு வந்திருக்கேன். நானாகவே என் சொந்தப் பொறுப்பில் இப்ப நிலத்தை விற்கலாமாம். அதற்கு ஏற்பாடெல்லாம் பண்ணிட்டேன், நீங்கள் இந்த இரண்டரை ரூபாய் ஸ்டாம்ப் பேப்பரில் கையெழுத்து போட்டுக் கொடுத்தால் வாங்குகிறவன் தைரியமாக வாங்குவான்....''

''என்னடா இது? எங்கே வந்து நின்று கொண்டு என்ன பேசறே? வீட்டுக்கு வா. சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம்'' என்று அவர் குளிக்கத் திரும்பினார்.

அவன் அவர் கையைப் பிடித்து இழுத்தான். ''முதலில் இதிலே கையெழுத்து. அப்புறம் என்ன வேணுமானாலும் பண்ணிக் கொள்ளுங்கள்'' என்று பத்திரப் பேப்பரை அவர் கையில் கொடுத்தான்.

அவர் அதைக் கையில் வாங்கினார். இரண்டாகக் கிழித்தார். வாய்க்கால் தண்ணீரில் விட்டெறிந்தார்.

அவனுக்கு ரௌத்திராகாரமாகக் கோபம் வந்தது. ''என்ன நினைத்துக் கொண்டு அதை இப்படிக் கிழித்தீர்கள்?'' என்று கத்தினான்.

அவர் பதில் சொல்லவில்லை.

அவன் அவர் கைகள் இரண்டையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஆத்திரத்தில் முறுக்கினான். ''நான் எழுதிக் கொண்டு வந்ததைக் கிழிச்சா போடணும்? இந்தக் கைக்கு அவ்வளவு பலம் இருக்கா? சரி... உங்களை எப்படிப் பார்க்கணுமோ அப்படிப் பார்த்துக்கிறேன்!'' இறுக்கி முறுக்கிய கையைப் பட்டென்று உதறிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் மேட்டில் ஏறிச் சாலைக்கு நடந்தான்.

இறுக்கிப் பிடிபட்டிருந்த கைகள் திடீரென்று விடுபட்டவுடன் அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் உதறிய வேகத்தில் அவர் நிற்க முடியாமல் தள்ளாடினார். பிடித்துக்கொள்ளப் பிடிப்பு இல்லாததால் அப்படியே சாய்ந்தார். தலை கட்டைச் சுவரில் மோதியது. உடல் கட்டைச் சுவரிலும் கழுத்துக்கு மேல் தலை சுவருக்கு அப்பால் தண்ணீரிலுமாக விழுந்தது.

சைக்கிளில் போனவன் சத்தம் கேட்டுத் திரும்பினான். பதறிப்போய்த் திரும்பியபோது தண்ணீரோடு ரத்தமும் கலந்து ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். மண்டியிட்டு உட்கார்ந்த அவனால் உடலைத் தூக்க முடியவில்லை. கழுத்து இசகு பிசகாக மாட்டிக் கொண்டிருந்தது. ஒரு வழியாகத் தலையைத் தண்ணீரிலிருந்து வெளியே எடுத்துக் கழுத்தில் கை கொடுத்து நகர்த்தி வைத்தான்.

ஏழெட்டு வயல்களுக்கு அப்பால் வயலுக்கு அண்டை போட்டுக் கொண்டிருந்த ஆட்கள் ஓடிவந்தார்கள்.

இரண்டே பேர் இருந்த இடத்தில் சற்று நேரத்தில் இருபது பேர் கூட்டம் வந்துவிட்டது. அரை மணிக்குள் கிராமமே வாய்க்கால் கரைக்கு வந்து விட்டது.

கிராம முன்சீப் வந்தார். போலீஸ் வந்தது. உடல் ஆஸ்பத்திரிக்குப் போயிற்று. அவனைப் போலீஸ் வான் அழைத்துக் கொண்டு போயிற்று.

ஜெயிலில் இருந்த அவனிடம் வக்கீல் சொன்னார்: ''நீ கவலைப்படாதே. கேசை நான் வேறு மாதிரியாக ஜோடிக்கப் போகிறேன். 'உன் அப்பாவை நீ தள்ளிவிடவில்லை. மாடு முட்டி அவர் வாய்க்காலில் விழுந்து விட்டார்' என்று அந்த இரண்டு குடியானவர்களைச் சொல்ல வைக்கிறேன். வேண்டுமானால் அவர்கள் மாட்டைக் கூண்டில் ஏற்றி இல்லை என்று சொல்ல வைக்கட்டும். மாட்டைத் தூக்கில் போட்டுக் கொள்ளட்டும்! அதற்கெல்லாம் செலவாகும். இப்போது கிராமத்தில் உள்ள உன்னுடைய வீட்டை மூவாயிரத்துக்குக் கேட்கிறார்களாம். கையெழுத்துப் போடு. முதலில் சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த இரண்டு 'குடியானவர்கள் வாயை அடைக்க வேண்டும்.''

கீழ்க் கோர்ட்டில் கேசை நடத்துவதற்கு வீடு போயிற்று.

பாதி கேஸ் நடந்து கொண்டிருக்கும்போது மனைவி ஒரு நாள் வந்தாள். 'கேஸ் முடிந்து திரும்பி வருவதாக இருந்தாலும் அதற்கு ஏழு வருஷம், பத்து வருஷம் என்று ஆகும். என் பள்ளிக்கூடத்திலே வாத்தியார் என்னைக் காதலிக்கிறார். அவரைக் கல்யாணமாகவே பண்ணிக் கொள்வதாக இருக்கிறேன். நீ என்ன சொல்றே?' என்று கேட்டாள். கம்பிகளுக்குப் பின்னால் இருந்த

''ஒரு வாரமா உன் கூட சுத்தற பெண் உன்னோட சகோதரியா? காதலியா?''

''அவள் இன்னும் அதைச் சொல்லவில்லையே!''

-கிழ. அ. கதிர்வேல்





கோத்ரெஜ்
நரை முடி பற்றியும்
ஹேர் டைகள் பற்றியும்
ஏற்படும் கவலைகள்
அனைத்தையும் போக்குகிறது
ஹேருக்கு டை
செய்வது செயற்கை
யான தோற்றமளிக்கக்கூடும்.
ஆனால், நீங்கள் சரியான 'டை'யை
தேர்ந்தெடுத்துவிட்டால்
இயற்கையாகவே விளங்கும்.
கோத்ரெஜ் ஹேர்டை
தேர்ந்தெடுத்த பொருட்களால்
தயாரானது— நேர்த்தியாக
டை செய்கிறது. எவராலும்
வித்யாசம் காண முடியாது.
நரை முடி 'எடுப்பான'
தோற்றத்தைத்
தருகிறது!
'எடுப்பான' தோற்றம் அளிக்கக்
கூடும். ஆனால், தோற்றத்தில்
முதுமையையும் எடுத்துக்காட்டும்.
உங்கள் நண்பரையே கேட்டுப்
பாருங்கள்.
முடிக்கு டை
செய்யும் தொல்லையை
எவர் விரும்புவர்?
ஒருவரும் விரும்பமாட்டார்.
அதனால்தான், கோத்ரெஜ்
வழங்குகிறது தானாகவே பரவும்
ஒரு ஹேர் டை. இனி நீங்கள்
'முடியை பகுதிகளாகப் பிரித்து
சாயம் பூசும்' தொல்லைக்கு
உள்ளாக வேண்டாம். இந்த டை
உபயோகித்து, நுரை'வரச்செய்து.
சிறிது காத்திருந்து. கழுவி
விடுங்கள். ஆஹா...
எவ்வளவு சுலபம்.
ஹேர் டை உபயோகிப்பதினால்
முடி பாதிக்கப்படுமா?
ஆம், பழைய முறையில் செய்யப்
பட்ட சாயங்கள் பாதிக்கலாம்.
அதனால்தான், கோத்ரெஜ்
அலாதியான ஹேர் டை
தயாரித்தளிக்கின்றனர். இதில்
'ஹேர் கண்டிஷனர்' சேர்க்கப்
பட்டிருப்பதால் உங்கள் முடிக்கு
இளமை தோற்றத்தை அளிக்கிறது.
இந்தியாவிலேயே அதிக விற்பனையாகும் ஹேர் டை
Godrej Permanent hair dye
கோத்ரெஜ் பர்மனென்ட் ஹேர் டை
ஹேர் டை செய்வதிலுள்ள தொல்லையைப் போக்குகிறது;
தோற்றத்தில் இளமை பூரிக்க வைக்கிறது.
2 வண்ணங்களில்: இயற்கையான கறுப்பு, கரும் பழுப்பு. 20 மி.லி. மற்றும் 40 மி.லி.
CASGS-154-204 TAM

அவன் ஏதும் சொல்லவில்லை. கல்யாணத்துக்கு முன்னால் அப்பா அவனைப் பற்றிச் சொன்னதெல்லாம் நினைவுக்கு வந்தது.

செஷன்ஸ் கோர்ட்டிலும் சென்னை ஹை-கோர்ட்டிலும் கேஸ் நடந்து முடிந்தபோது கிட்டத்தட்ட இரண்டு வருஷம் ஆகிவிட்டது. நிலமும் அதற்குள் கை விட்டுப் போயிருந்தது. 'அவரை மாடுதான் முட்டித் தள்ளியது. நாங்கள் கண்ணால் பார்த்தோம்' என்று சாட்சிகள் சொன்னார்கள்.

விடுதலை அடைந்து வெளியே வந்ததும் அவனுக்குத் திரும்பி ஊருக்குப் போகப் பிடிக்கவில்லை.



ஹெட்மிஸ்ட்ரஸ்: ''எங்க ஸ்கூலில் அட்மிஷன் போதே மொத்தமாக எல்லாவற்றுக்குமாக சேர்த்து வாங்கிடறது. நடுவிலே பெற்றோர்களைத் தொந்தரவு பண்றதில்லை... டி ரா ம ா டிக்கட், டொனேஷன் அது இதுன்னு..''

வந்தவர்: ''ரொம்ப நல்ல சிஸ்டம்... இப்போ என் குழந்தைக்கு மொத்தமாக நான் எவ்வளவு கட்டணும்..''

ஹெட்மிஸ்ட்ரஸ்: ''ஏழாயிரம் ரூபாய் தான்.''

என்.எஸ்.வி. குருமூர்த்தி.

வேறு வேலை எதுவும் தெரியாத நிலையில் சமையல் கோஷ்டியில் எடுபிடி ஆளாகச் சேர்ந்து கொண்டு கல்யாண வேலைகளுக்குப் போய் வந்தான். கொஞ்சம் கொஞ்சமாகச் சமையல் வேலை தெரிந்து கொண்டதும் கோஷ்டியிலிருந்து பிரிந்து ஒற்றை ஆளாகப் பல வீடுகளில் சமையல்காரனாக இருந்தான்.

புதிதாக அவன் வேலைக்குச் சேர்ந்த வீட்டில் குடும்பத் தலைவரின் அப்பா திதி வந்தது. அவன் மனசை என்னவோ செய்தது. அப்பாவைக் கொலை செய்துவிட்ட பாவத்தை நினைத்து அவன் ஜெயிலில் எத்தனையோ தடவை அழுததுண்டு. தனது பாவத்தைப் போக்க மறுநாள் காலையில் புரோகிதர் ஒருவரைத் தேடிக்கொண்டு போனான். ''அப்பா செத்துப் போய் ஐந்து வருஷம் ஆகிறது. திதி செய்ய வேண்டும்'' என்றான். ''என்ன திதி?'' என்று கேட்டார். ''தெரியாது''.என்றான். ''இத்தனை வருஷமா எந்தத் திதியிலே பண்ணினே?'' .என்று கேட்டார். ''இதுவரை செய்யவே இல்லை...''

அவன் எல்லாவற்றையும் சொல்லி அழுதான்.

''இந்த மாதிரி பாவத்துக்கெல்லாம் பிராயச்சித்தம் என்ன. நீ இப்போது திதி செய்தாலும் அது செல்லுமா என்று எனக்குத் தெரியவில்லை. ஆறு ஒண்ணு. காசிக்குப் போய்க் கங்கையிலே ஸ்நானம் பண்ணினால் தொலையாத பாவம் இல்லேப்பா! அதை வேணுமானால் செய்துபார்'' என்று முடித்தார்.

காசிக்கு வந்தான். கங்கையைப் பார்த்தான். ஸ்நானம் செய்தான். படகில் ஏறி அடுத்த 'கட்டத்'துக்குப் போய்க் கொண்டிருக்கிறான், அப்பாவுக்கு திதிசெய்ய!

புரோகிதர் பேசிக் கொண்டே வந்தார். ''இந்தக் கங்கையிலே ஸ்நானம் செய்தால் போகாத பாவம் இல்லே. அப்பா அம்மாவுக்கு வாழ்நாள் முழுக்கச் சாப்பாடு போடாமல் பட்டினி போட்டவன் கூட இங்கே ஒரு தடவை ஸ்நானம் பண்ணினால் அவன் பாவங்கள் அத்தனையும் போயிடும்...''

வெகு தூரம் தள்ளிப் போய்க் கொண்டிருந்த ஒரு படகில் இருந்தவர்கள் தென் பட்டார்கள். தெரிந்தவர்கள் போலிருக்கிறதே என்று முதலில் பதிந்த நினைவு அவர்கள் யார் என்பது புரிந்ததும் அவன் உடல் எல்லாம் பரபரப்படைந்தது.

''உங்களாலேதான் நான் காசிக்கு வந்தேன். உங்களாலேதான் நான் அப்பாவுக்குப் பண்ணிய பாவத்தைக் கொஞ்சமாவது துடைத்துக் கொள்ள முடிந்தது....'' என்றெல்லாம் அவன் வேலைக்குச் சேர்ந்திருந்த வீட்டாரிடம் சொல்லப் பரபரத்தான்.

படகில் நின்றபடியே அவர்கள் இருந்த படகு கண்களிலிருந்து மறைந்து விடாமல் இருக்க அப்படியும் இப்படியுமாக நகர்ந்து இரண்டு கைகளையும் உயர்த்தி ஆட்டினான். அவன் ஆட்டிய வேகத்தில் படகு அப்படியும் இப்படியும் ஆடியது. இவனை உட்கார வைப்பதற்காகப் படகுக்காரன் எழுந்தபோது இவன் கைகளை இன்னும் வேகமாக ஆட்டி ''அதோ அங்கே!'' என இரு கைகளையும் படகுக்கு வெளியே நீட்டினான். படகு ஆடிய வேகத்தில் உடலிலிருந்த பாலன்ஸ் போய்விட்டது. மேலே உயர்ந்த கை அப்படியே சாய்ந்தது. சாய்ந்த வேகத்தில் அவன் உடலையும் சேர்த்து இழுத்தது. பிடித்துக் கொள்வதற்குப் படகின் ஓரங்களில் பிடிப்பு ஏதும் இல்லாமல் தண்ணீரைப் பிடித்துக் கொள்வதைப் போல் சாய்ந்தான். தலை முதலிலும் உடல் பிறகுமாக அவன் அப்படியே கங்கைப் பிரவாகத்தில் விழுந்தான். இருபதடி ஆழத்திற்கு ஓடும் தண்ணீரில் அவன் கீழே...கீழே....கீழே... போய்க் கொண்டிருந்தான்.....



7 வது மாநாட்டின் 7 அதிசயங்கள்

⌘ மாநாட்டு மேடை: திருமதி உமையாள் இராமநாதன்; திரு கி. ஆ. பெ. விசுவநாதம், டாக்டர் வ. சுப. மாணிக்கம், வள்ளியப்பா.

● நவம்பர் 14, 15ல் காரைக்குடியில் ஏழாவது குழந்தை இலக்கிய மாநாடு டாக்டர் அழகப்ப செட்டியார் பயிற்சிக் கல்லூரிக் கலை அரங்கில் நடைபெற்றது. எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அரங்கில் கூட்டம் நிரம்பி வழிந்தது. குழந்தை இலக்கிய நிகழ்ச்சிக்கு இவ்வளவு பெரிய கூட்டம் இதுவரை காணாத அதிசயம்!

● மாநாட்டுக்கு அழ. வள்ளியப்பா தலைமை வகித்தார். இவர் ஆறாவது முறையாகத் தலைமை வகித்தார். ஒரே எழுத்தாளர் சங்க மாநாடுகள் ஏழில் ஆறுக்குத் தலைமை வகித்தது உலக அதிசயமே!

● மாநாட்டில் 22 ஆண்டுகளாக 'கண்ணன்' பத்திரிகையின் ஆசிரியராகத் தொண்டாற்றிய 'ஆர்வி' அவர்களுக்குக் கேடயம் வழங்கிக் கௌரவித்தார்கள். ''குழந்தைகளுக்காக எழுதினால், பொருளும் புகழும் கிடைக்காது என்று குழந்தை எழுத்தாளர்கள் பெரியோர் எழுத்தாளராக மாறிய நேரத்தில் பெரியோர் எழுத்தாளராக இருந்தவர் 'ஆர்வி'. அதை விட்டுச் சிறுவர் இலக்கியத்துக்கு வந்து கால் நூற்றாண்டுக்கு மேலே தொடர்ந்து சேவை செய்கிறார்'' என்று ஆர்வியைப் பற்றிப் பாராட்டிப் பேசிய பூவண்ணன் குறிப்பிட்டார். ஆர்வியின் சாதனையும் அதிசயமே!


● மாநாட்டையொட்டி நடத்தப்பட்ட குழந்தை எழுத்தாளர் புகைப்படக் காட்சியை ஏதோ புதுத் திரைப்படம் ரிலீஸாகும் தியேட்டரில் திரளும் கூட்டம் போல் காரைக்குடியினர் ஆர்வத்தோடு வந்து பார்த்ததும், ஒவ்வொரு புகைப்படத்திலும் சிறிய எழுத்தால் எழுதப்பட்ட குறிப்புக்களைப் பொறுமையுடன் படித்ததும் நம்ப முடியாத அதிசயங்கள்!

● மாநாட்டரங்கில் புத்தக விற்பனை நிலையமும் இருந்தது. மாநாட்டுக்கு வந்தவர்கள் அங்கும் சென்று பார்வையிட்டார்கள். அது ஒன்றும் அதிசயமில்லை. ஆனால் பெரும்பாலோர் தம் குழந்தைகளுக்காக ஒன்றிரண்டு புத்தகங்களையாவது வாங்கிக் கொண்டு ஏடும் கையுமாகத் திரும்பியது இன்னுமோர் அதிசயமாகவே இருந்தது.

● மாநாட்டில் எழுத்தாளர்களும் பிரமுகர்களும் பேசுவார்கள். ஆனால் சிறுவர் சிறுமியர் 'எனக்குப் பிடித்த புத்தகம்' என்னும் தலைப்பில் சிறுவர் நூல்களைத் தாமே மேடை ஏறி விமர்சனம் செய்தது வேறு மாநாடுகளில் காணாத அதிசயம்!

● மாநாட்டில் பேசிய டாக்டர் தமிழண்ணல் 'அடுத்த மாநாட்டை மதுரையில் நடத்துங்கள். எல்லா ஏற்பாடுகளையும் நாங்கள் செய்து தருகிறோம்' என்றார். மாநாட்டில் பங்கு கொண்ட சட்ட மன்றத் தலைவர் க. இராஜாராம், ''அடுத்த மாநாட்டை எங்கள் சேலத்தில் வைத்துக் கொள்ளுங்கள் எல்லா வசதிகளையும் செய்து தருகிறோம்'' என்று அழைப்பு விடுத்தார். இப்படிக் குழந்தை எழுத்தாளர்களைப் போட்டி போட்டுக்கொண்டழைப்பது வெறும் அதிசயம் மட்டுமல்ல, பேரதிசயம் அல்லவா!

-வேதா



ஸ்ரீ ராம சுப்பா சாஸ்திரிகள்

சாஸ்திரம், சங்கீதம், சமஸ்கிருதம், ஆங்கிலம், ஆகம சாஸ்திரம், சட்ட நுணுக்கங்கள் எல்லா வற்றிலும் பாண்டித்யம் பெற்ற பிரபல ஜோஸ்யர் **ஸ்ரீ ராம சுப்பா சாஸ்திரிகள்** சென்ற 7-11-81 கதிரா மங்கலத்தில் சிவலோக பிராப்தி அடைந்தார்கள். ஸ்ரீ ராம சுப்பா சாஸ்திரிகள் திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஓரியண்டல் லைப்ரரியில் முக்கிய ஆராய்ச்சியாளராக பணி புரிந்தார். திருநெல்வேலி மகான் ஸ்ரீ அனந்த கிருஷ்ண சாஸ்திரிகளிடம் வேத சாஸ்திரம் பயின்றார். கதிராமங்கலம் ஸ்ரீ வன துர்கா பரமேஸ்வரி ஆலய அறங்காவலராக இருந்து சிறப்பாக பணியாற்றினார். அவர் ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கிறோம்.

உறவினர்களும் நண்பர்களும்

ADVT.

உ

ஆனந்த வாழ்வு தரும்

ஆழ்நிலை தியானம்

(தபால் வழிப் போதனை முறைப் பயிற்சி)

அன்றைய ஆன்றோர் ஆய்ந்தறிந்து செய்து வைத்த அரிய கலை **"ஆழ்நிலை தியானத்தை"** அப்படியே பயிற்று நலங் கொள்ள அரியதோர் வாய்ப்பு இது. அரும்பி நிற்கும் சிறுவர்கள் முதலாக அந்திய காலந்தொடும் முதிர்ந்து பழுத்தவர்கள் வரை—ஆரோக்கியம், ஐசுவரியம், அட்டியில்லா வெற்றிகள் அத்தனையும் அடைந்து திழைக்க அரிய வழி கூறும் இனிய பாடங்கள். யாகம், வேள்வி தவம் என்பன வற்றை இக்கால ரீதியில் எங்ஙனம் செய்து இணையிலா வெற்றிகளைப் பெற்றிடலாம் என்ற எளிய வழி முறைகள். நினைத்ததை செய்து முடிக்கின்ற நிலையான சக்தி பெறும் மார்க்கங்கள். பயின்றவர் அட்டியின்றி நலம் அடைவர் — வளம் பெறுவர்.

சேரும் முறை செலுத்தும் கட்டணம் அறிந்திட **50 ந.பை.** தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட கவர் இணைத்து **10-1-1982** தேதிக்குள் மனுச் செய்து கொள்க.

பிரபல ஜோதிடர்,
ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெயவீர தேவா யோகி,

ராஜயோகப் பயிற்சியாளர்,

பிளாட் நெ. 204,
கதவு எண் 5,
அண்ணா நகர்,
மதுரை - 625 020

கடவுளின் தீர்ப்பு

தரப்பு அணி: மகாத்மா, பாரதி முதல் அண்ணாவரையிலான அனைவரும் வற்புறுத்திய வண்ணம் சாதிக் கொடுமையை எதிர்த்து அரிய நீதியைப் படமாக்கியிருக்கிறோம்.

எதிர்த் தரப்பு அணி: கடவுள் பேரால் தீர்த்துக் கட்டியிருக்கிறார்கள். பிரம்மா (டைரக்டர் சி.என். ஷண்முகம்) அழகான குழந்தை ஒன்று படைக்க நினைத்திருக்கிறார். நினைப்போடு சரி. கண் இருக்க வேண்டிய இடத்தில் மூக்கும், காதுக்குப் பதில் வாயும், கைக்குக் காலுமான கதையாய்க் குழந்தை பார்க்கச் சகிக்கவில்லை. கிராமத்தில் கலப்பு மணம்தான் கதைச் சுருக்கம். ஆயிரத்தில் ஒருவன், புரட்சி புரிய வந்த விடிவெள்ளி என்று பந்தாவாய் அறிமுகமாகும் கதாநாயகனும், சிலம்பத்தில் வீராங்கனை, பக்தியில் கடவுள் அவதாரம் என்று வணங்கப்படும் கதாநாயகியும் ஊரோரத்தில் கள்ளக் காதல் புரிவதிலேயே காலம் கழித்து விடுவது கதையின் ஓட்டை. ஜாதி மாறிக் காதல் பண்ணின குற்றத்துக்காக மகளை உயிரோடு கிராமத்தின் முன் நெருப்பு வைத்துத் தந்தையே கொளுத்தும் கொடுமை எங்கும் நடக்காது. ஜாதிப் பிரச்னையை லென்ஸ் வைத்துப் பெரிது படுத்திக் காட்டுகிறார்கள்.

உணர்ச்சியில்லாமல் நடக்கும் சங்கீதா. பெண்மையாய் நளினத்துடன் நடக்கும் விஜய்பாபு (நடிப்பு?) ஆரம்ப வசனத்திலேயே கதாநாயகி சிலம்புச் சண்டை போடுவார் என்று கட்டியம் கூறிவிடுகிறார்கள்.

தரப்பு அணி: பாரதி விரும்பியபடி நாயகி புதுமைப் பெண். வீரமுடையவள். அதனால் சண்டை போடுகிறாள். நகர நாயகி கராட்டே போடுகையில் கிராமப் பெண் சிலம்பம் ஆடுவதில் என்ன தவறு? பெண் சக்தியின் வடிவம். எனவே அன்னைத் தெய்வம் என்று மக்கள் வணங்குகிறார்கள். ஐயர் குருக்கள் சேரிப் பெண்ணை மணத்தல், கோவிலில் அரிஜன அர்ச்சகர் என்று புரட்சி சொல்கிறோம். இன்னொரு புதுமை, கலர்ப் பட ரேஸில் கருப்பு வெளுப்பாய் ஓடுகிறோம்.

எதிர்த்தரப்பு அணி: அந்த மட்டில் பயங்கர அடி வாங்காமல் தப்பினீர்களே என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம். படத்தில் வரும் கருத்துக்கள் — ஸாரி புரட்சிக் கருத்துக்கள்— பத்து வருடம் முன் சொல்லி யிருந்தால் சூடாக இருந்திருக்கும். திரும்ப வந்த சோ தத்துவம் பேசுகிறார். திரும்பி வராத சுருளி காலட்சேபத்தில் மட்டும் சிரிக்க வைக்கிறார். மேஜரும் விஜயகுமாரியும் ஈ.என்.டி. ஸ்பெஷலிஸ்டிடம் தொண்டை ஜவ்வு கிழியாமல் உள்ளதா என்று டெஸ்ட் செய்துகொள்வது நலம்.

தரப்பு வாதம்: டைரக்டர் சிம்பாலிக்கா நிறையச் செய்துள்ளார். வில்லன் ஸ்ரீகாந்த் ஒரு பெண்ணைக் கற்பழிக்கிறார். உடனே ஒரு புலி மானைத் துரத்திப் பிடிக்கிறது. அவரே ரீல் ஆயிரம் அடி சுற்றிய பின் திரும்ப ரேப் செய்கிறார். இந்தத் தடவை பருந்து சின்னப் பறவையைக் கொத்திப் போகிறது. டைரக்டர் திறமை வெளிப்படுகிறது.

எதிர்த் தரப்பு அணி: ஆமாம் ஆமாம். நன்றாய் வெளிப்படுகிறது. படம் பார்க்க ஆரம்பித்ததிலிருந்து எங்கள் மனக் கண்ணிலும் படங்கள் ஓடுகின்றன. எராஸ்மிக், 7-ஓ க்ளாக், பனாமா விளம்பரப் படங்கள்.

நடுவர்: ஒரு குடும்பத்துக்காக ஒருவனும், ஒரு ஊருக்காக ஒரு குடும்பமும், ஒரு நாட்டுக்காக ஒரு ஊரும் அழிக்கப்படலாம் என்று கீதை பகர்கிறது. அதுபோல் பத்து எதிர்கால நல்ல படங்கள் தப்புப் பண்ணாமல் இருக்க ஒரு படம் கெடுக்கப்பட்டிருப்பதை முதல் தரம் மன்னிக்கலாம். இந்தப் படத்தின் பிரம்மா படைக்கும் தொழிலைக் கற்றுக் கொள்வதை விடக் கைவிடுவது நலம்.

—நளினி சாஸ்திரி



பாரதி

ரசிகமணி ரசித்த மணிகள்

மீ. ப. சோமு

இந்த ஆண்டு பாரதியாரின் நூற்றாண்டு விழா தொடங்குகிறது. இதையொட்டி நமது தேசிய மகா கவி சுப்பிரமணிய பாரதியாரைப்பற்றி ரசிகமணி எத்தனை வியப்போடும் ஆனந்தத்தோடும் பாராட்டி எழுதியிருக்கிறார் என்பதைப் படித்துப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திருநெல்வேலியில் டி.கே.சி. இருந்தபோது மாவட்ட நீதிபதியாக அப்போது அங்கே பணியாற்றி வந்த சி. வி. கிருஷ்ணசுவாமி ஐயர் அவர்கள்தான் முதன் முதலில் பாரதியாரின் 'வந்தே மாதரம்' என்ற பாடலை அச்சிட்டு நண்பர் குழாத்திடம் வெளியிட்டார் என்பது வரலாறாகும். இந்த முயற்சியில் அவருக்குப் பக்க பலமாகவும் பாராட்டுத் துணையாகவும் இருந்தவர் டி.கே.சி.! அதோடு இந்தப் பாடலைப் பாடுகிற முறையிலே 'என்போம்' என்ற சொல்லிலே அழுத்தம் கொடுத்து.

''வந்தே மாதரம் **என்போம்** — எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் **என்போம்**''

என்று பாடிக் காட்டியவர் டி.கே.சி.தான்!

''அன்னியர்களே, அதிகாரிகளே, நீங்கள் என்ன சொல்லுவது வந்தே மாதரம் என்று நாங்கள் சொல்லக் கூடாது என்று! அப்படித்தான் சொல்லுவோம். ''என்போம்''. மீண்டும் மீண்டும் சொல்லுவோம். என்போம். என்போம்!'' என்று முழக்கியவர் ரசிகமணி!

இந்தப் பாடலைப் போலவே பாரதியாரின் மற்றப் பாடல்கள் பலவற்றையும் வட்டத் தொட்டியிலே பாடி இலக்கிய அன்பர்களுக்கு விளக்கம் சொல்வார் ரசிகமணி!

டி.கே.சி. எழுதுகிறார்:

''கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் ஆங்கிலக் கவிகளை ஆர்வத்தோடு சிரத்தை எடுத்துப் படித்துப் பார்த்தவர்தான். ஆனால் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களிடம் ஆங்கிலக் கவிகளைக் கற்றுப் பரீட்சை எழுதி மார்க்கு வாங்கினவர் அல்ல! உயர்ந்த கவிதைகளைத் தாமாகவே கற்று, விஷயங்களை அறிந்து கொண்டவர் அவர்! அது காரணமாக, ஆங்கிலக் கவிஞர்கள் அனுபவித்த விஷயங்களைத் தாமும் ஒத்து அனுபவித்தவர்!''

இவ்வாறு ஒரு முன்னுரையுடன் டெனிசன் எழுதிய ஒரு கவிதையையும் பாரதியாரின் ''போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும்'' என்ற பாடலையும் ஒப்பிட்டு ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார் டி.கே.சி.:

''வருஷத்தின் கடைசி நாளான டிசம்பர் மாதம் முப்பத்தோராந்தேதி இரவு மணி பன்னிரண்டு. பழைய வருஷத்தின் இறுதியையும் புது வருஷத்தின் பிறப்பையும் குறிப்பதற்காக இங்கிலாந்திலுள்ள கிறிஸ்தவக் கோயில்களில் மணி அடிப்பதுண்டு. பற்பல கோயில்களிலுமிருந்து மணியோசை ஒரே முழக்கமாக முழங்குகிறது. பனி, குளிர், நிசப்தம் இவைகளுக்கூடே உருவிப் பாய்ந்த மாதிரி மணி முழக்கம்.

''ஐயோ மக்கள் எல்லோரும் துயருக்கே ஆளாய் இருக்கிறார்களே! விமோசனம் உண்டென்று சொல்வதற்கு இடமில்லாமல் அவர்கள் அறிவு எவ்வளவாக மங்கியிருக்கிறது! சென்று போகிற வருஷத்தோடு அவைகளும் தொலைந்து போய், ஆனந்தமும், அறிவும் புது வருஷத்தோடு தலையெடுக்கக் கூடாதா?'' என்று கவிஞர் எண்ணுகிறார்.

(1) ஓ, கண்டாமணிகளே, முழங்குங்கள்!
உங்கள் முழக்கம் வானத்தையே எட்ட வேண்டும்!

(2) பழையன கழிய முழங்குங்கள்
புதியன புகவும் முழங்குங்கள்!
இதயத்தை உறையச் செய்யும் உறை பனி ஒழிய வேண்டும்!
பழைய ஆண்டு ஒழிகிறது, ஒழியட்டும்!
பொய் போகவும் பொய்யல்லாத மெய் வரவும் முழங்குங்கள்!

டெனிசனுடைய இந்தக் கவியை பாரதியார் மூலத்தில் வாசித்தார். மூலத்தில் உள்ள சோகம் எப்படியோ பாரதியாருக்கு





பட்டோடியுடன்
''ராஜா''

''ராஜா'' என்றால் கிரிக்கெட் வட்டாரங்களிலும், பத்திரிகைத் துறையினரிடையிலும் ஒருவரைத்தான் குறிக்கும்: —பி.என். சுந்தரேசன்.

சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞராகப் பத்து ஆண்டுகள் பணிபுரிந்த பின் கிரிக்கெட்டில் உள்ள ஆர்வத்தால் முழு நேர கிரிக்கெட் விமர்சகராகவே மாறி விரிந்துப் பத்திரிகையில் நீண்ட காலம் பணியாற்றினார் சுந்தரேசன். ஓய்வு பெற்ற பின் இன்று கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டின் ஆண்டு மலர்களுக்கு ஆசிரியராக விளங்குகிறார். இந்தியாவில் ஆண்டுதோறும் விளையாடப்படும் முக்கிய கிரிக்கெட் மாட்சுகள் அனைத்தையும் பற்றிய விவரங்கள் அடங்கியது இந்த மலர்.

இளைஞராக இருந்தபோது தாமே சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரராக விளங்கியதால் அதன் நுணுக்கங்களை உணர்ந்து எழுதிவருகிறார் பி.என். எஸ்.

சென்ற வார கல்கியில் இடம்பெற்ற கட்டுரையில் நடக்கவிருக்கும் கிரிக்கெட் டெஸ்ட் தொடர்களில் என்ன எதிர்பார்க்கலாம் என்பதை விஷய ஞானமுடன் விளக்கியிருந்தார் ''ராஜா''. இனி ஒவ்வொரு டெஸ்ட் முடிந்ததும் கல்கியில் அவரது விமரிசனக் கட்டுரை இடம்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

ஆங்காரத்தை உண்டு பண்ணி விட்டது. ஆங்கார பாவம் தமிழ்ச் செய்யுளாக உருவெடுத்தது!... நாட்டின் கீழான தன்மை எல்லாம் ஒழிய வேண்டும் என்கிறார் பாரதி:

''வலிமை யற்ற தோளினாய்
போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய்
போ போ போ''

''போ, போ,. போ,'' என்று தாளத்தில் வார்த்தையை வைத்தவுடன் துரத்தும் காட்சி நம் கண்ணெதிரே வந்து விடுகிறது!''

என்பது ரசிகமணியின் விளக்கம்! இதோ விளக்கம் தொடர்கிறது:

''ஆங்கார தேவதையின் தாண்டவத்தைப் பார்த்தோம். இனி, அன்பும் அருமையும் சேர்ந்து ஆடும் தாண்டவம்:

நல்ல காலம் பிறந்து, நம்மவருக்கு அறிவு மேம்பட்டு, சத்தியத்தில் ஆர்வம் தோன்றி வீரம் ஆனந்தம், ஞானம் எல்லாம் உண்டாகி விடுகிறது. எதிர்காலத்தில் அவர்கள் கண்ணுக்கொரு விருந்தாக விளங்குகிறார்கள். கவி எப்படி வரவேற்கிறார் பாருங்கள்! முன்னம் போ போ போ என்றார் கவிஞர். இப்போது,

''ஒளிபடைத்த கண்ணினாய்
வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய்
வா வா வா''

இவ்வாறு இந்தப் பாடலையும், இதன் தாள இயலையும் மிகவும் பாராட்டி ரசிக்கிறார் ரசிகமணி. முடிவில் அவர் ஆங்கிலக் கவிதையைப் பாரதியாரின் பாடலோடு இணைபடுத்திக் காட்டுகிற பகுதி முக்கியமானதாகும். ரசிகமணியின் முடிவுரையைப் பாருங்கள்:

''ஒரே விஷயத்தைத்தான் டெனிசனும் சொன்னார், பாரதியாரும் சொன்னார். சோகந்தான், பாவம் டென்னிசனிடம். நம்பிக்கை பாவமும் கொஞ்சம் இருக்கிறது. ஆனால் பாரதியார் பாவம் முற்றிலும் வேறு; உருவம், துள்ளல், தாளம் எல்லாம் வேறு. மூலத்துக்கும் பாரதியார் பாடலுக்கும் சம்பந்தமே இல்லை என்று சொல்லும்படி அவ்வளவு வேறுபட்டது. ஏதோ டெனிசன் எழுதிய ஆங்கிலக் கவி பாரதியாரை அந்த விஷயங்கள் சம்பந்தமாகச் சிந்திக்கச் செய்தது அவ்வளவுதான். உணர்ச்சி எழுந்ததும், அதற்குத் தக்கபடி தமிழ்ச் செய்யுள் வந்து உதவியதும், பாவங்களின் புதுமையும் வேகமும் எல்லாம் தனி!

'போகின்ற பாரதம், வருகின்ற பாரதம்' என்ற இந்த இரண்டு கவிகளும் பாரதியின் சிறந்த பாடல்களைச் சேர்ந்தவை. உண்மையான சிருஷ்டிகளே. தமிழ் மகளின் தனியான நடனங்கள்தான்!''

குமரிப் பெண்ணே! குயிலாளே!

விமலா ரமணி

9

செல்வி இயந்திரம் போல் பரிசலை ஓட்டிக் கொண்டிருந்தாள். அவள் ஞானுவைப் பார்த்து ரொம்ப நாட்களாகி விட்டன! ஞானுவை எப்படிப் பார்க்க முடியும்? அவன்தான் கோவில் உண்டு, நடேச சாஸ்திரிகளின் வாசல் திண்ணை உண்டு என்று முடங்கிக் கிடக்கிறானே!

பெரிய ஐயா நெஞ்சு வலியால் இறந்து போய்விட்டார் என்பதைக் கேட்ட செல்வி துடித்துப் போனாள். அந்தப் பெரியவருக்கா? அந்த ஐயாவுக்கா? அடக் கடவுளே... இதோ ...இதோ இந்தப் பரிசலில் ஒரு மூலையில் அமர்ந்தபடி கண்களை மூடிய வண்ணம் அவர் மந்திரங்கள் சொல்லிக் கொண்டு போவார்... பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் அந்த சுகன்யாப் பொண் கூட ஏதோ நொண நொணவென்று கேள்வி கேட்டுக் கொண்டே வரும். இப்போது கூடப் பரிசலில் ஒரு ஓரமாக அவர் உட்கார்ந்திருக்கிற பிரமை செல்விக்குத் தட்டியது. அன்று பெரிய ஐயா இறந்து போனார் என்பதைக் கேட்டுத் துடித்த செல்வி ஓட்டமாக ஓடிவந்து தூரத்தில் நின்று அந்த வீட்டைக் கவனித்தாள்.

வாசலில் ஒரே கூட்டம்.

வெளியே நெருப்பு புகைந்து கொண்டிருந்தது. என்ன என்னவோ சப்தங்கள்...

நடேச சாஸ்திரியைப் பிணமாக அவர்கள் வெளியே தூக்கி வந்தபோது சுகன்யா அலறியபடி வெளியே ஓடி வந்ததையும், அவளை இரண்டு பேர் தாங்கிப் பிடித்துக்கொள்வதையும் தள்ளி இருந்தபடி பார்த்தாள் செல்வி. ஐயர் வீட்டுச் சடங்குப்படி பிணத்தைப் பாடையில் எடுத்தபோது கூடி இருந்த கூட்டமே அலறியது. தீச்சட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு ஞானு முன்னால் நடந்தான். மௌன ஊர்வலம் தொடர்ந்தது.

சுகன்யா தன் வீட்டுத் திண்ணையில் தலையை முட்டிக் கொண்டு கதறினாள்.

அவளைப் பெண்டுகள் அடக்க அடக்க அடங்காமல் அவள் மேலும் மேலும் சுவரில் மோதிக் கொண்டபோது, அந்த நாயர்தான் அவள் தலையைப் பிடித்து அவளைத் தடுத்தான்!

நாயர், நல்ல நாயர்!

இவர்களையெல்லாம் அன்று பார்த்ததோடு சரி... அப்புறம் ஒருவரையும் பார்க்க முடியவில்லை.

என்றாவது ஞானுவைக் கண்டால் பெரிய ஐயாவைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று செல்வி நினைத்தாள்.

சுகன்யாவைக் கண்டால் அப்பாவுடைய சாவு பற்றி 'எளவு' விசாரிக்க வேண்டும் என்று நினைத்தாள்.

ஆனால் யாரையுமே அவள் பார்க்கவில்லை.

ஒருவருமே அக்கரை போகவில்லையோ? அவரவர் வீட்டில் முடங்கி விட்டார்களோ? இருட்டி விட்டது. செல்வி பரிசலைக் கரையில் இருந்த பெரிய மரத்துடன் இழுத்துக் கட்டினாள். வீடு திரும்ப நடந்தாள்.

எதிரில் ஏதோ யோசித்தபடி நடந்து வந்து கொண்டிருப்பது....?

ஞானு! ஆமாம்... சின்ன ஐயாதான்! அவளுடைய சின்ன ஐயாதான்!

'சின்ன ஐயா!' என்று கத்தியபடி ஞானுவின் அருகில் ஓடினாள் செல்வி.

திடுக்கிட்டு நிமிர்ந்த ஞானு...

''செல்வி நீயா?'' என்றவன்,

''பரிசலைக் கட்டிட்டியா?'' என்றான்.

''ஏன் சின்னய்யா? அக்கரை போகணுமா? வாங்க, கொண்டு போய் விடறேன்'' என்றாள்.

செல்வி ஞானுவையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

சின்ன ஐயாவைப் பார்த்து ஒரு மாசத்துக்கு மேலாயிடுச்சு! எப்படி இளைச்சுப் போயிட்டார்! மழிக்காத முகம், கரு வட்டம் போட்ட கண்கள்...

சின்ன ஐயா தூங்கி ரொம்ப நாளாயிருக்குமோ? கேட்கலாமா?

ஞானு செல்வியைப் பார்த்தான்.

'இந்தப் பெண் பாவம்.. பகல் முழுவதும் பரிசல் ஓட்டி ஓட்டிக் களைத்து இவள் வீடு திரும்பும் சமயத்தில் எனக்காக அக்கரைக்குக் கூப்பிடறது தப்பு... அக்கரையிலே என்ன பெரிய காரியம்! ஒண்ணுமில்லே. அந்தக் கொலுஸை வாங்கின கடையிலே அதைத் திருப்பித் தரணும். அதுக்குப் பணம் தரமாட்டான். பிள்ளையாருக்குத் தேவையானதா ஏதாவது வாங்கிக்கணும். கொலுஸை கடையிலே பிள்ளையாருக்கு என்ன கிடைக்கும்? சின்னதா ஏதாவது ஒரு ஹாரம்... ஆ... அதுதான் சரி... சுகன்யா ஏமாத்திட்டா. ஆனா பிள்ளையார் ஏமாத்த மாட்டார். சுகன்யாவுக்காக வாங்கிண்டு வந்த கொலுஸை வீணாயிட்டது. சுகன்யா! தினம் தினம் நீ பிள்ளையாருக்கு மாலை தொடுக்கிறச்சே உன்னைச் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாளா நான் நினைச்சுப் பார்த்தேனே... ஆனா நீயே சூடப் பட்ட மலர்னு தெரியாமப் போச்சே! ஊர்க்காரா எல்லாம் பெரியவர் போனப்புறம் கல்யாணமாகாத சின்னஞ் சிறுசுகள் ஒரே

வீட்டில் இருக்கக் கூடாது... மனசு கெட்டு டும். சீக்கிரம் இவா கல்யாணத்தை ஏற்பாடு பண்ணனும்னுபேசிக்கிறாங்களாமே! இங்கே மனசே கெடலே உடம்பே கெட்டுப் போச்சுங்கிற உண்மையை நான் எப்படிச் சொல்லுவேன் சுகன்யா. நீ என்னைப் பார்க்கப் பயந்துண்டு உள்ளே ஓடறதும், நான் உன்னைச் சந்திக்க வெட்கப்பட்டுண்டு தலை குனிஞ்சு நடக்கறதும் இன்னும் எத்தனை நாளைக்கு?''

ஞானு அன்று நடந்த சம்பவத்தை மனத்துள் நினைத்துப் பார்த்தான்.

நடேச சாஸ்திரிகளை எரித்துவிட்டு ஞானு வீடு திரும்பியதும், கூடின கூட்டம் கலைந்திருந்த அந்தத் தனிமையான விநாடியிலே சுகன்யா விசித்து விசித்து அழுத ஓசை கேட்டது.

இவள் எதற்காக அழுகிறாள்?

''அழுதா அப்பா திரும்பி வந்துடப் போறாளா என்ன? அழாதே சுகன்யா...''

''அழுதா எதுவுமே திரும்பக் கிடைக்காது சுகன்யா'' என்றான் ஞானு மறுபடியும்.

''அதை நினைச்சுத்தான் நான் இப்போ அழறேன்.''

''காலம் கடந்த அழுகை.''

''ஞானு... எல்லாத்தையும் தெரிஞ்சு வைச்சுண்டு எப்படி உங்களால் இப்படி அமைதியா இருக்க முடியறது? நான் பாவி ஞானு... மகாப் பாவி.... வாசல் திண்ணைக்கு வந்ததுதான் வந்தேன், கதவைத் தட்டியிருக்கக் கூடாதா என்ன? புத்தி தட்டுக்கெட்டுப் போன நான், கொஞ்சம் சுய உணர்வுக்கு வந்திருப்பேனே? இப்போ எல்லாமே போச்சு... எல்லாமே போச்சு.''

''உன் மனக் கதவை நீ இறுகச் சாத்தித் தாழ் போட்டிருக்கிறப்போ நான் என்ன கூப்பிட்டாலும், எத்தனை தட்டினாலும் காது கேட்காது சுகன்யா...''

ஞானு தன் மனத்துள் ஆண்டாளை நினைத்துப் பார்த்தான்.

''எல்லே இளங்கிளியே இன்னும் உறங்குதியோ?'' என்று பாட்டுப் பாடியபடி வீடு





வீடாகச் சென்று கதவைத் தட்டி, தூக்கத்தில் இருந்த மக்களைத் தட்டி எழுப்பி நாராயணனின் திவ்விய நாமத்தைக் கேட்கச் செய்த அந்த ஆண்டாள் எங்கே?

விழிப்பிலேயே உறங்கிப்போய் நரகத்தை அடைந்த இந்த சுகன்யா எங்கே? இவளையா நான் ஆண்டாளுடன் ஒப்பிட்டேன்?

''இனிமே நான் பிள்ளையாருக்கு மாலை தொடுத்துத் தர மாட்டேன்.''

''சரி.''

''உங்களுக்கு என் கையாலே சமைச்சுச் சாதம் போட மாட்டேன்.... என்னு நான் மகாப் பாவி!''

''சரி.''

''எனக்கு என்னவோ பயமா இருக்கு. அப்பா தன்னோட கடைசி நேரத்திலே நம்ம ரெண்டு பேரோட கையையும் ஒண்ணாச் சேர்த்து வைக்க ஆசைப்பட்டாரே...இதைப் பார்த்த இந்தக் கிராமத்து மனுஷா நம்மளைச் சேர்த்து வைச்சுடுவாளோ?''

ஞானு பதில் சொல்லவில்லை. 'உன் அப்பா தன் எண்ணங்களை உன்னிடமும், என்னிடமும்தான் சொல்லலையே தவிர ஊர் முழுக்கச் சொல்லியிருக்கிறார்'என்று கூறவில்லை அவன்.

''கொஞ்சம் பொறுத்துக்கோங்கோ ஞானு! இந்தப் பத்து நாளைய காரியங்கள் ஆகட்டும். கிரேக்கியம் எல்லாம் ஆனப்புறமா இந்தத் துக்கம் மெள்ள மெள்ள ஆற ஆற, நான் விஷயத்தைப் பக்குவமா அவரண்டை சொல்லி என் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணிடறேன்... அவர் என்னைக் கைவிட மாட்டார்!''

''ஆனா இந்தக் கிராமம் கைவிட்டுடும்'' என்று சொல்ல நினைத்தவன் பேசாமல் இருந்தான்.

அதன் பின்...?

ஒரு மாதம் உருண்டது. ஞானு தான் உண்டு—தன் வேலை உண்டு, கோயில் பூஜை உண்டு, வாசல் திண்ணை உண்டு என்று நிச்சிந்தையா இருந்தான். சந்தனம் அரைக்கும்போதெல்லாம் திமர் திமரென்று கண்கள் நிறையும். உள்ளே இருந்து சாஸ்திரிகள் ''ஞானு....ஞானு...'' என்று கூப்பிடுகிற குரல் கேட்கிற உணர்வு.

ஆனால் சாஸ்திரிகளோ புகைப்படத்தில் சிரிப்பார். நினைவுப் புகைப்படலத்தில் எண்ணங்கள் சிரிக்கும். முன்பாவது குருவுக்காக வெந்நீர் போட வேண்டும். இப்போது அந்த வேலை இல்லை. அதான் சாஸ்திரிகளே இல்லையே! பொழுது புலர்வதற்குள் ஆற்றிலே குளித்துவிட்டு வந்துவிடுவான் ஞானு.

உள் பக்கம் ஓர் அறைதான் அவனுடைய தனி அறை. சாப்பாட்டு அறை, உக்கிராண அறை எல்லாமே... அந்த இருட்டு அறைக்குள் ஒரு கரி அடுப்பு... விசிறி... இத்யாதி சமையல் சாமான்கள்... பூப்பறித்து மாலை தொடுத்து... கோவிலில் பூஜை பண்ணி... நைவேத்தியம் வைத்து... எல்லாமே ஞானு... ஞானுதான்!

மாலை தொடுக்க வராது. சில சமயம் பூக்கள் சிதறும். கட்டிய முடிச்சுக்கள் திரும்பி நிற்கும். பூக்களின் காம்பு உடைந்துபோகும். அவன் கட்டிய மாலையில் பாதி இடங்களில் பூவுக்குப் பதிலாக வெறும் நார்தான் இருக்கும்.

ஆனாலும் ஞானு மாலை தொடுக்கத்தான் செய்தான்.

உதிரிப் பூக்களில் சில கசங்கியும் பிய்ந்தும்.. இவன் எண்ணங்களைப் போல் தரையில் சிதறிக் கிடக்கும்.

சுகன்யாவுக்குத் தான் வாங்கி வந்த கொலுசைப் பற்றி அவன் சொல்லவேயில்லை.

எல்லாமே காலம் கடந்து தெரிந்து கொண்ட உண்மையாகிவிட்டபோது கனவு மயக்கங்களில் போலிகளைச் சொல்லி ஏன் சங்கடப்படுத்த வேண்டும் என்று வாளா இருந்து விட்டான்.

அந்தக் கொலுசைத் திருப்பித் தரவேண்டும். அக்கரைக்குப் போய் அந்தக் கடையில் தந்துவிட்டு வேறு ஏதாவது உபயோகமுள்ளதாக வாங்கி வரவேண்டும்? இதுதான் பயனற்றதாகி விட்டதே!

இப்படிச் சில உதிரி எண்ணங்களுடன் இவன் மாலை தொடுத்துக் கொண்டிருந்த போதுதான்....

இன்றுதான் சுகன்யா இவன் எதிரில் நின்றபடி விம்மி விம்மி அழுதாள்.

நடேச சாஸ்திரிகள் இறந்து போய் ஒரு மாதத்துக்கு மேலாகி விட்டது. இன்னும் ஏன் அழுகிறாள்?

''ஞானு... நான்... நான் ஏமாந்து போயிட்டேன்.''

தெரிந்த கதையையே திரும்பச் சொல்கிறாளா?

''அவர் கிட்டே கேட்டேன்.... என்னை அவர் ஏத்துக்க மாட்டாராம்.''

கட்டிய மாலை 'பட்'டென்று அறுந்தது போலத் திடுக்கிட்டு நிமிர்ந்தான் ஞானு.


இது புதுக் கதை! நிச்சயம் புதுக் கதை!

''உங்களுக்கும் எனக்கும் இந்தக் கிராமத்துக்காரா அப்பாவோட .ஆசைப்படி கல்யாணம் பண்ணி வைக்கப் போறாளாம்! இந்தச் சமயத்திலே இதையெல்லாம் சொல்லி அசிங்கப்படுத்தக் கூடாதாம்! பெரிய மனுஷத்தனமா இதையெல்லாம் மறந்திடணுமாம்! எப்படி இருக்கு ஞானு! இந்த அக்கிரமத்துக்கு யார் கிட்டே போய் நீதி கேட்பேன்?''

சுகன்யா பெரிதாக அழ ஆரம்பித்தாள்,

சமாதானத்தின் சின்னம் வெண்புறா என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் இந்த வெண்புறாச் சின்னத்தை வடிவமைத்தவர் யார் தெரியுமா? ஓவியர் பிக்காஸோ தான்.

-திசை. முத்து



''சுகன்யாவுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டிய பொறுப்பை உங்கிட்டே ஒப்படைக்கிறேன்!''

நடேச சாஸ்திரிகளின் குரல் எங்கோ கேட்கிறது.

'மாமா... மாமா... நான் என்ன பண்ணுவேன் மாமா! சுகன்யா ஆசைப்பட்டவனுக்கே அவளோட கல்யாணத்தை முடிக்க வைச்சுடலாம்னுதான் நான் பார்த்தேன். ஆனா இப்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிரச்னை வருதே! பிள்ளையார் கோவில் பூஜைப் பொறுப்பை ஒப்படைச்சேள்.... மகிழ்ச்சியா ஏத்துண்டேன்... நடத்திண்டு வரேன்..! ஆனா சுகன்யாவோட பொறுப்பு .... அவளுக்கே தெரியாத அவளோட பொறுப்பை எங்கிட்ட ஏன் மாமா ஒப்படைச்சேள்? இப்போ நான் என்ன பண்ணுவேன்?

'நடேச சாஸ்திரிகளோட பொண் கெட்டுப் போனவன்னு நான் ஊர் முழுக்கப் பறை சாத்தட்டுமா? இல்லே, இந்தக் கெட்டதை நானே ஏத்துண்டு நன்றிக் கடன் கழிச்சுடட்டுமா? இல்லே, நதியிலே விழுந்து சாகட்டுமா?'

நதி என்றதும் ஆற்றங்கரை... அதன் பரிசல்.... அதை ஓட்டும் செல்வி எல்லாமே நினைவுக்கு வந்தன.

''ஞானு, அடிக்கடி அப்பா எங்கிட்டே சதி சுகன்யாவோட கதையைச் சொல்லுவார். நீ சதியா இருக்கணும்... சதியா இருக்கணும் பார். நீங்க கண்ணை மூடிண்டு ஜபம் பண்றச்சே எல்லாம் எனக்கு அந்தக் கதைதான் ஞாபகம் வரும். என்னை ராஜகுமாரியாகவும் உங்களை அந்த ரிஷியாகவும் கற்பனை பண்ணிப் பார்ப்பேன்! உங்க கண்களைக் குத்தினா எப்படி இருக்கும்னு நினைச்சுப் பார்ப்பேன். ஆனா...இப்போ இங்கே நிஜமாவே உங்க கண்களை நானே குத்திடுவேனோன்னு பயமா இருக்கு. கதையிலே பிராயச்சித்தமா அந்த ராஜகுமாரி கல்யாணம் பண்ணிண்டா! ஆனா இப்போ நீங்கதான் பிராயச்சித்தம் பண்ண வேண்டியிருக்கும். என்னை மன்னிச்சுடுங்க ஞானு. நம்மூர்லே பெரிய ஆறு இருக்கு. அதிலே மூழ்கிச் செத்துப்போறேன். எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்து போயிடும்!''

சுகன்யாவின் அழுகுரல் பெரிதாகக் கேட்டுக் கொண்டே இருந்தது. இல்லை... இதற்கொரு முடிவு கட்ட வேண்டும்... இவனுக்குத் தெரிந்த இரண்டொரு பெரிய மனிதர்கள் அக்கரையில் இருக்கின்றனர். அவர்கள் உதவியுடன் சுகன்யாவின் கல்யாணத்தை நல்லபடியாக முடித்து...

''சுகன்யா அசடு மாதிரி அழாதே. இதுக்கு நான் ஒரு ஏற்பாடு பண்றேன். நீ கண்ணைத் தொடச்சிண்டு பேசாம உள்ளே போ. இன்னிக்குச் சாயங்காலம் அக்கரை போய் இதுக்கொரு வழி பண்றேன்... இந்த உள்ளூர் பெரியவாகிட்ட ஞாயம் கேட்க முடியாது. நீ கொஞ்சம் தைரியமா இரு. காரியம் கைகூடி வரும்போது அசட்டுத்தனமா எதையாவது பண்ணி வைக்காதே.''

சுகன்யாவைத் தேற்றி அனுப்பிய ஞானு மாலையைத் தொடுத்து முடித்தான்.

மாலையில் நிறைய இடங்கள் காலியாக இருந்தன.

''என்ன சின்னய்யா? அக்கரை போகணுமான்னு கேட்டேனே... கேட்கலியா?''

ஒரு கணம் சுய உணர்வு பெற்ற ஞானு—

''ஆமாம் போகணும்... உன்னால வர முடியுமா?'' என்றான்.

''இதோ...'' — என்று மகிழ்ச்சியுடன் பரிசலின் கயிற்றை அவிழ்க்க ஆரம்பித்தாள் செல்வி.

பரிசல் நகர ஆரம்பித்தது. (தொடரும்)





Dr. S. R. சிவராஜ்

வாலிபர்கள் ! **மணமானவர்கள் !!**

வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பலஹீனங்களை நீக்கி,
தாம்பத்திய வாழ்வை இன்பமுடன் அனுபவித்து மகிழ,
இன்றே புகழ் பெற்ற 'ரகசிய வியாதி நிபுணர்'
ஆண்மைக் குறைவு நீக்கும் 'அரிய வைத்திய மேதை'

'கவிராஜ்' டாக்டர் S. R. சிவராஜ், R.I.M.P.

அவர்களிடம் சிறந்த முறையில் சிகிச்சை பெற, அவர் சுற்றுப்பயண முகாம்களில்-நேரில் சந்தித்து வாழ்வில் மகிழ்ச்சி காணுங்கள். நேரில் சந்திக்க முடியாதவர்கள், குறைகளை விபரமாகத் தலைமை அலுவலகத்துக்கு எழுதவும். (கடிதங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்.) மருந்துகள் விரிவான விளக்கங்களுடன் வி.பி.பி. மூலம் அனுப்பி வைக்கப்படும்.

❋ **குழந்தை பாக்கியம் (கர்ப்ப அணுக்கள்) இல்லாதவர்கள்**

❋ **கல்யாணமாகி பல ஆண்டுகளாகக் குழந்தை பாக்கியமே இல்லாதவர்கள்**

சிறந்த முறையில் சிகிச்சை பெற்று, கர்ப்ப அணுக்கள் தேவையான அளவு உற்பத்தியாகி குழந்தை பாக்கியம் பெற்று மகிழ்ச்சியடையும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். 25 வருட சுற்றுப் பயணத்தில், அவரிடம் சிகிச்சை பெற்றுப் பலன் அடைந்தவர்கள் பல்லாயிரம் பேர்கள். அவர்களைப் போல் நீங்களும் பலன் அடைய வேண்டுமல்லவா?

ஆலோசனைக் கட்டணம் ரூ. 10-00 ❋ **சிகிச்சைக் கட்டணம் தனி**

எமது கேட்லாக் வேண்டுவோர் ரூ. 1-00 ஸ்டாம்ப் அனுப்பியோ, M.O. செய்தோ பெறலாம்

எமது உயர்ந்த – விசேஷ – ஸ்பெஷல் மருந்துகள் கிடைக்கும்

உயர்ந்த ரக சிகிச்சை 1 மாதம் ★ விசேஷ சிகிச்சை 1 மாதம் ★ ஸ்பெஷல் சிகிச்சை 1 மாதம்

A வகுப்பு	B வகுப்பு	C வகுப்பு	A வகுப்பு	B வகுப்பு	C வகுப்பு	மீடியம்	ஸ்பெஷல்	I. நெம்பர்
1500-00	750-00	500-00	400-00	300-00	200-00	175-00	150-00	115-00

ஹெட்டாபீசுக்கு லெட்டர் எழுதி V.P.P. மூலமும் பெறலாம். தேவையான சிகிச்சைக்கு டிராப்ட் மூலம் (பேங்க் ஆப் இந்தியா) வாங்கி அனுப்பினால் ரிஜிஸ்டர் பார்சல் மூலம் பெறலாம்.

மாதாந்திர சுற்றுப் பயண விவரம்: ஒவ்வொரு ஆங்கில தேதிகளிலும்

பிரதம வைத்தியர் தங்குமிடங்கள்

சென்னை-600 001. பிரதி மாதம் 3-ந் தேதி ஹோட்டல் ரோயல்ஸ். போன்: 24236. 190, NSC போஸ் ரோடு, பூக்கடை எதிரில். காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை.

சென்னை-600 002, 4 முதல் 8ந் தேதி வரை. ராமச்சந்திரா லாட்ஜ். போன்: 846526 6, அத்திப்பட்டன் தெரு, அண்ணாசாலை சமீபம். காலை 7 முதல் இரவு 7 மணி வரை.

சேலம் தலைமை அலுவலகம்: 11, 16, 17, 18, 19, 20, 27, 28, 29, 30 தேதிகள்.

திருச்சி: 9, 10 தேதி. அசோக் பவன், ஜங்ஷன் ரோடு, போன்: 25783. காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

கோவை: 12, 13ந் தேதி. ஸ்ரீ லக்ஷ்மி லாட்ஜ், ராஜு வீதி, போன்: 33330.

பொள்ளாச்சி: 14ந் தேதி. மாடர்ன் லாட்ஜ், தாலுகா ஆபீஸ் எதிர் சந்து. காலை 8 மணி முதல் 12 மணி வரை.

திருப்பூர்: 14ந் தேதி. ராமகிருஷ்ணா லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் வீதி. மாலை 3 மணி முதல் 5 மணி வரை.

ஈரோடு: 15ந் தேதி. ஆனந்த் லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் வீதி. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.

மதுரை: 21, 22ந் தேதி: மணீஸ் கேப் (டவுன் ஹால் ரோடு) போன்: 22019. காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை.

தூத்துக்குடி: 23ந் தேதி: ராதா லாட்ஜ், ஜி.சி. ரோடு. காலை 9 முதல் பகல் 12 மணி வரை.

திருநெல்வேலி: 23ந் தேதி. நெல்லை லாட்ஜ் மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரை.

உதவி வைத்தியர் தங்குமிடங்கள்:

விழுப்புரம்: 3ந் தேதி. வாசவி விஹார் ஹோட்டல், எம். ஜி. ரோடு. காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.

கடலூர் என்.டி., 3ந் தேதி. ஹோட்டல் பிருந்தாவன். மாலை 3 முதல் இரவு 8 மணி வரை.

சிதம்பரம்: 4ந் தேதி. ஜெயராம் லாட்ஜ், (மேல வீதி) காலை 7 முதல் பகல் 3 மணி வரை.

கும்பகோணம்: 5ந் தேதி. தாஜ்மஹால் லாட்ஜ் பொற்றாமரைக் குளம் (போன்: 1423) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

தஞ்சாவூர்: 6ந் தேதி. அசோகா லாட்ஜ், (ராஜா கலை அரங்கம்) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

திண்டுக்கல்: 22ந் தேதி. ஆரிய பவான் லாட்ஜ் பழனி ரோடு. காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை.

விருதுநகர்: 23ந் தேதி. ஹோட்டல் அஜந்தா. காலை 7 மணி முதல் 12 மணி வரை.

இராஜபாளையம்: 23ந் தேதி. அசோகா லாட்ஜ். மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

நாகர்கோவில்: 24ந் தேதி. உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண பவன், போஸ்டாபீஸ் ஜங்ஷன் ரோடு. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.

தென்காசி: 25ந் தேதி. பார்வதி லாட்ஜ் காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.

தலைமை அலுவலகம்:

சிவராஜ் சித்த வைத்தியசாலை

(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறமுள்ள ஏரியின் முன் பக்கம்)

காந்தி ஸ்டேடியம் - சேலம்-636007

இவர்கள் என்ன சொல்கிறார்கள்!

மூளைக் காய்ச்சல் ஆந்திராவிலும் தமிழ்நாட்டில் சிற்சில பகுதிகளிலும் பரவுகிறதே இதன் காரணம் என்ன? குணப்படுத்த மருந்து உண்டா?

குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் ஜெ. விசுவநாத் கூறுகிறார்:

''இந்த வகையான மூளைக் காய்ச்சல் 'க்யூலெக்ஸ்' என்கிற கொசுவால் பரவுகிறது. காலையில் நார்மலாகக் காணப்படுகிற சிறுவன், மாலையில் தலைவலி, ஜுரம், மயக்கம் இவற்றால் பாதிக்கப்படுவான். இந்த வியாதி வந்தால் குணப்படுத்துவது கடினம். இதற்கென்றே இருக்கிற மாற்று மருந்துகள், 'வாக்ஸின்' எல்லாம் வெளி நாட்டில்தான் தயார் செய்கிறார்கள். எனவே, இத்தகைய நோய் வராமல் தடுப்பதுதான் முக்கியம். சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வது, நாய், பன்றி போன்ற பிராணிகளால் கிருமி பரவாமலிருப்பது — இது போன்ற தற்காப்பை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நோய் வந்து குணமானால் ஊட்டமான சத்துணவும் மிகுதியான எதிர்ப்புச் சக்தியும்தான் காரணமே தவிர, மருந்துகள் அல்ல. கொடுக்கிற மருந்துகளும் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவே உதவுகின்றன.''



x கோபிநாத ராவ்



x ஹரி ஈஸ்வரன்

● உமியிலிருந்து சிமெண்ட் தயாரிக்கும் புது கண்டுபிடிப்பு பற்றி உங்கள் கருத்து என்ன?

கட்டிடக் கலை நிபுணர் வி. எச். கோபிநாத ராவ்:

''அத்தகைய சிமெண்டைச் சுவர் கட்டுவதற்கு அன்றி வெளிப் பூச்சு வேலைக்கு மட்டுமே பயன்படுத்தலாம். கான்க்ரீட் வேலைக்கு உபயோகப்படுத்த முடியாது. தயாரிப்பாளர்களே இதைக் கூறியிருக்கிறார்களே? பூச்சு வேலைக்குப் பயன்படுத்தினாலும் எத்தனை உறுதி வாய்ந்தது என்பதைச் சொல்ல இயலாது. பரிசோதனை நிலையில்தான் இவ்வகைத் தயாரிப்புக்கள் உள்ளன. என்னைப் பொறுத்தமட்டில் கண்ணாம்பு வைத்துக் கட்டுவது தேவலை. அது உறுதியானது என்பதற்கு எத்தனையோ பல கட்டடங்கள் இன்றும் சான்று கூறுகின்றன.''



x டாக்டர் விசுவநாத்

● தனியார் கம்பெனிகளிலும் பிற்படுத்தப்பட்டோருக்குக் குறிப்பிட்ட சதவிகித வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று முதல் அமைச்சர் கூறியிருக்கிறாரே — இது பற்றி திரு ஹரி ஈஸ்வரன் (தொழில் அதிபர், சென்ற வருட எம்ப்ளாயர்ஸ் பெடரேஷன் தலைவர்) என்ன நினைக்கிறார்?

''கடன் கொடுக்கும் பெரிய நிதி நிறுவனங்கள் — ஐ.எஃப்.ஸி. போன்றவை—இப்போதே அத்தகைய புள்ளி விவரங்கள் கேட்கிறார்கள். ஒரு விண்ணப்ப பாரத்தை கொஞ்ச நாள் முன்புதான் பூர்த்தி செய்து அனுப்பினேன். எனவே முதல் அமைச்சரின் யோசனை முற்றும் புதியது அல்ல. ஆனால் நிர்ப்பந்தப் படுத்தினால் சிக்கல் வரக்கூடும். ஏனென்றால், தனியார் நிறுவனங்கள் லாப நோக்கில் செயல் படுகின்றன. பங்குதாரர்களின் திருப்தி முக்கியமானது. கூடுமானவரை எந்தெந்த வேலைக்கு யார் யார் பொருத்தம் என்பதை மட்டும் மனத்தில் கொண்டு நியமனத்தின் போது செயல்படுகிறோம். ஜாதியைப்பற்றிக் கேட்பது கிடையாது.''

— தமயந்தி சாருகேசி

சிங்கார மானமலைத் தேனுக்குத் தான்முடவன்
அங்காந் திருந்தகதை ஆம்ப்போமோ?
-வெள்ளைய ராஜேந்திரன் துகில்விடு தூது.

36

வசந்த மாளிகையின் மேல் மாடத்தில் வேங்கட மகாராஜா உட்கார்ந்திருந்தார். அர்ச்சுனன் வந்ததும் அவனை அன்புடன் அழைத்துத் தம் பக்கத்தில் உட்கார்த்திக் கொண்டார்.

''விஷயம் தெரியுமா உனக்கு?''. என்று கேட்டார் அவர். அவரது குரலில் இருந்த கரகரப்பை உணர்ந்ததும் ஏதோ முக்கிய மான விஷயம் என்று புரிந்து விட்டது.

மனத்தின் ஒரு பகுதி அவர் என்ன சொல் லப் போகிறார் என்பதைக் கேட்க ஆவலோடு இருந்தாலும் இன்னொரு பகுதி எதிரே இருந்த அரண்மனையின் வரிசையான மாடங் களில் மெதுவாகச் சஞ்சரித்தது. 'சுவர்ண முகி! உனக்கு என்ன நடந்தது?' என்று அந்த மனம் கேட்டுக் கொண்டே இருந்தது.

''ஸ்ரீரங்கன் நமக்கு எதிரியாகிவிட்டான்!'' என்றார் மகாராஜா.

''அப்படியா?'' என்று ஆச்சரியமுடன் கேட்ட அர்ச்சுனன் ''மகாராஜா! அவர் தான் தங்களுக்கு அத்தியந்தராக இருந்தாரே! தாயாருக்குத்தான் ஆசை! ஆனால் இவர் ராஜப் பற்றோடு தங்களோடேயே ஒன்றி இருந்தாரே! தங்கள் படையை நடத் திச் சென்று முன்பு ஒரு முறை இதே திம்ம ராஜாவைத் தோற்கடித் திருக்கிறாரே! அவர் இப்போது தங்களுக்கு எதிராக மாறிய தன் காரணம் என்ன?'' என்றான்.

லிங்கம நாயகர் ஸ்ரீரங்கனைச் சிறை செய்த விஷயத்தை மகாராஜா கூறினார். ''அது நமக்கு எதிராக அவனை மாற்றிவிட்டது. நானே லிங்கமனிடம் சொன்னேன், இது வேண்டாம் என்று! ஆனால் அவன் என் சொல்படி கேட்கவில்லை. நான் என்ன செய்ய முடியும்? அவர் தயவில்தான் நான் இருக் கிறேன்'' என்றார் மகாராஜா.

''அது ராஜதந்திரம் அல்ல'' என்றான் அர்ச்சுனன்.

''இல்லைதான்! ஆனால் கோட்டை அபாய நிலையில் இருக்கும்போது உன்னை இருப்ப வர்கள் நமக்கு விரோதிகளாக மாறிவிடக் கூடாது என்று அவரது அபிப்பிராயம்.''

அர்ச்சுனன் யோசித்தான்.

''இப்போது அவருக்கு யாராவது உதவி செய்கிறார்களா?''

''ஸ்ரீரங்கன் பீஜப்பூருக்கு உதவி கேட்டு ஆள் அனுப்பி யிருக் கிறான்.''

''சுல்தானிடமா?''

''ஆமாம்.''



''அது பெரிய துரோகம் ஆயிற்றே!'' என்றான் அர்ச்சுனன்.

சிரித்தார் மன்னர். ''நாம் அவனைச் சிறையில் போட்டது மாத்திரம் எந்தவகை?'' என்று கேட்டார்.

அர்ச்சுனனால் பதில் சொல்ல முடியவில்லை. அந்த விஷயத்தில் நியாயமும் இருந்தது. அநியாயமும் இருந்தது.

ராஜ்யம் க்ஷீணித்திருக்கும்போது யார் எதைச் செய்தாலும் அதைப் பற்றிக் கேட்பாரில்லாமல் இருந்தது. அதுமட்டுமில்லை. அவர்களுக்கு யாராவது உதவி செய்யவும் சித்தமாக இருந்தார்கள். இதுதான் அந்நாளைய ராஜ தந்திரமாக இருந்தது.

இதுவேதான் அந்த விஜயநகர ராஜ்யத்துக்குக் கடைசி அடிகளாக விழுந்து கொண்டிருந்தது.

''இன்னும்.கேள்! தஞ்சை, மதுரை நாயகர்கள் அவனுக்கு உதவி செய்யப் போகிறார்கள்!''

''என்ன?'' என்று வெருண்டான் அர்ச்சுனன்.

''ஆமாம்! நமக்கு உளவு வந்தாயிற்று'' என்றார்.

''அவர்கள் ஏன் உதவுகிறார்கள்?''

''காரணம் நீதான்!''

''நானா?''

''ஆமாம். செஞ்சிப் படைகளைக் கொண்டு வந்து வெற்றி பெற்று விட்டாயல்லவா? அதனால் நமக்கும் செஞ்சு நாயகருக்கும் அதிக பந்தம் ஏற்பட்டு விட்டதாம். அதை அவர்கள் விரும்பவில்லை! செஞ்சிக்கு இவர்கள் பரமவிரோதிகள் என்பது உனக்குத் தெரிந்திருக்குமே!''

''ஓகோ!'' என்றான் அர்ச்சுனன்.

''இவர்கள் எல்லாம் நமக்குக் கப்பம் கட்டுகிற சிற்றரசர்கள்! ஆனால் நமக்குப் பலம் இல்லாததால் நமக்கு நிகரான அதிகாரத்தோடு விளங்குகிறார்கள்'' என்று சொல்லி வேதனைச் சிரிப்புச் சிரித்தார் மன்னர்.

''சரி மகாராஜா! இப்போது தாங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள்? என்னை ஏன் இங்கே அழைத்தீர்கள்?'' என்றான் அர்ச்சுனன்.

''நமக்கு வேண்டுவது பொருள் பலம். அதற்கு ஒரு வழி கிடைத்திருக்கிறது. விஜயநகரப் பொக்கிஷத்தைப் பற்றித் தெரியுமல்லவா?''

''தெரியும். எல்லோரும் அதைத்தானே தேடி அலைகிறார்கள்!''


''அந்தப் பொக்கிஷத்தை அடையும் வழி ஒருவாறு நமக்குக் கிடைத்திருக்கிறது.''

''அப்படியா, மகாராஜா!'' என்று சொல்லும்போது அவன் நெஞ்சம் தழுதழுத்தது. அவன் முன்னால் சுவர்ணமுகி தோன்றினாள். ''எப்படிக் கிடைத்தது?''

''அதைப் பற்றிக் கேட்காதே! அதை எடுத்து வரப் போகிறாய் நீ! உனக்கு உதவியாக ஒரு சின்னப் படை அனுப்புகிறோம். ராஜப் பிரதிநிதிகளாக அந்தப்புரப் பெண்கள் சிலரும் வருவார்கள்.''

''சரி மகாராஜா! நான் எங்கே புறப்பட வேண்டும்? எப்போது புறப்பட வேண்டும்?''

''எல்லா விவரங்களும் தருகிறேன். நீ இன்றைக்கு மூன்றாம் நாள் காலையில் புறப்படுகிறாய்!'' என்றார் மகாராஜா.



''ஆகட்டும் மகாராஜா!'' என்றான் அர்ச்சுனன். .பேசிக் கொண்டிருக்கும்போதே அர்ச்சுனன் மனத்தில் சுவர்ணமுகியைப் பற்றியவும் பொக்கிஷத்தைப் பற்றியும் நினைவுகள் ஓடின.

முந்தியே ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது அரசரிடம் சொல்லாது விட்டு விட்டோம். அதற்குப் பிறகு சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. இப்போது மன்னரிடம் சுவர்ணமுகியைப்பற்றி வேறுயாரோசொல்லியிருக்க வேண்டும். ஒருவேளை ஸ்ரீரங்கன் சொல்லி யிருக்கலாம். அவன் சொன்னதால் முதல் பெருமை அவனுக்குப் போய்விட்டது.

பெருமை போனது மட்டுமல்ல! இப்போது சொன்னால் அப்போதே ஏன் சொல்லவில்லை என்று பேச்சு எழும்! அவன் வேண்டுமென்றே மறைத்தான் என்று குறை சொல்ல வழி இருக்கிறது.

இப்போது இந்தச் சமயத்தில் உண்மையைச் சொன்னால்கூடச் சங்கடங்கள் உள்ளன.

ஒருவேளை மன்னர் அந்தப் பொக்கிஷத்தைப் பற்றி அறிந்திருப்பது வேறு ஒரு வழி மூலமாக இருந்தால்? அனாவசியமாக சுவர்ணமுகியின் பெயரை இதில் இழுத்தாற்போல் ஆகிவிடும்.

முதலில் சுவர்ணமுகி இந்த அரண்மனைக்குள் எப்படி வந்தாள். அவள் தன்னைப் பற்றி எவ்வளவு தூரம் இங்கே தெரிவித்திருக்கிறாள் என்றெல்லாம் தெரியவில்லை.

தெரியாது இருக்கும்போது அவனாக இப்போது எதையும் கிளப்பி விட விருப்பமில்லை.

எனவே தனது பேச்சு முழுவதிலும் அர்ச்சுனன் எதைப் பற்றியும் சொல்லாது இருந்து விட்டான்.

இரண்டு தினங்களாக மனம் குமைந்தது. என்னாததெல்லாம் எண்ணியது. அவனைப் பார்த்த சுவர்ணமுகி ஏன் பேசாமல் போய் விட்டாள்?

அவனை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையா?

அல்லது அவளுக்குப் பேசவிருப்பமில்லையா?

அல்லது அவனையே மறந்து விட்டாளா?

ஹூம் நினைக்கும்படி அவன் என்ன செய்து விட்டான்?

திருப்பதியில் ஓடி ஓடிவந்து ஒரு தூர்ச் செய்தியை அவளிடம் கூறினான்.

அடுத்து அவளைக் காட்டில் தேடிக் கண்டு பிடித்துச் சொல்பநேரம் அவளிடம் பேசினான்.

மூன்றும் முறை வேலூர் அகழிக் கரையில் நின்று ஸ்ரீரங்கனோடு அவள் போவதை ஒரு பார்வை மட்டும் பார்த்தான்.

இந்த மூன்று சந்திப்புக்கள் மட்டும் போதுமா ஒரு அன்பான ஈடுபாட்டை அவளிடமிருந்து எதிர்பார்க்க?

ஏன் போதாது?

காதல் என்பது ஒரே பார்வையில் ஜனிக்கும் முளை.

ஒரே சந்திப்பில் மலரும் பூ.

ஒரே விநாடியில் வளரும் கற்பக விருட்சம்.

ஒரே ஒரு முறை மட்டும் கண்கள் இணைந்து விட்டால் அதை ஆயிரம் ஜன்மங்கள் கூட மறக்க முடியாது.

அவ்வளவு நீண்ட காலம் கழித்துப் பார்த்தால்கூட முதல் பரிச்சயத்தை மீண்டும் புதுப்பித்துக் கொள்ளலாம்.

முதலில் விட்ட இடத்தை மீண்டும் தொடர்ந்து கொள்ளலாம்.

அத்தகைய விநோத இயல்புகளைப் படைத்தது காதல்.

அப்படி இருக்கும்போது மூன்று இடைவிட்ட சந்திப்புக்களில் மனத்தில் அதை வளர்த்து விட்டோம்.

அந்த வளர்ச்சி ஒருதலையாய் அவன் மனத்தில் மட்டும் வளர்ந்ததாக இருக்க முடியுமா?

அவள் மனத்தில் வளர்ந்திருக்காதா?

இரண்டாம் முறையாக அந்தக் காட்டில் இரவின் நட்சத்திரப் பந்தல் கீழ் ஒரு சொப்பனக் காட்சி போலச் சந்தித்தார்களே!

அப்போது அவள் கண்களில் அந்த இழைகளை அவனால் பார்க்க முடியவில்லை?

கனிந்த, இளகிய, நெகிழ்ந்த, தழுதழுத்த சிநேக பூர்வமான இனிய இழைகளை அவன் காணவில்லை?

அவள் கண்ணைப் பார்த்தது அவளது இதயத்தைப் பார்த்தாற் போல இருந்ததே!

இரு தூல வடிவான தேகங்கள் சந்தித்த மாதிரி இல்லையே!

இரு ஆவி வடிவான உணர்வுகள் கலந்த மாதிரி அல்லவா தோன்றின!

மனத்தின் எல்லா நினைவுகளிலும் அமிர்தங்கள் வந்து கலந்தனவே!

தேகமே ஒரு புது காந்தியில் சோபித்ததே!

நினைத்தால் அங்கேயே உட்கார்ந்து ஆயிரம் கவிதைகள் எழுதிவிடலாம்.

அப்படி இதயம் அமுதகரபிகளாக இனிய உணர்வுகளைச் சுரந்ததே!


இந்த உணர்வுகளும் அனுபவங்களும், அவன் ஒருத்தனுக்கு மட்டும் நேர்வதுதானா?

அப்படி நேர்ந்தால் நேர்ந்து விட்டுப் போகட்டும்.

இந்த நினைவுகளை வைத்தே மீதி வாழ்நாளுக்கு அவன் ஒரு சுவர்க்கத்தை மனத்துள் சிருஷ்டி செய்து கொள்ள முடியும்.

மானேஜர் : மழைன்னு கூட பார்க்காம ஆபீஸ் வந்துட்டியே. உன் பொறுப்புணர்ச்சியை ரொம்ப பாராட்டறேன்.

குமாஸ்தா: வீட்டிலே தங்க முடியாத நிலைமை சார். வீடெல்லாம் மழையினால் ஒழுகுது. -எஸ். வனஜா



அந்த சிருஷ்டியிலேயே வாழ்நாளின் இதர துன்பங்களை யெல்லாம் அவனால் மறந்து விட முடியும்.

அது போதும்!

இரண்டாம் நாள் இரவு கிருஷ்ணசந்திரனும் ட்ரேக் ராஜரும் அவனைக் காண வந்தார்கள்.

வேலூர் வெற்றி கிடைத்ததி லிருந்து கிருஷ்ணசந்திரன் அர்ச்சனனோடு தங்கிவிட்டான்.

ட்ரேக் ராஜர் ஒருமுறை ஆரம்கான் போய்விட்டு மீண்டு வந்து சேர்ந்திருந்தான்.

''நண்பர்களே! இன்னும் பூசல் முடிந்த பாடில்லை. தொடரும் போல் இருக்கிறது'' என்று கூறிய அர்ச்சனன், நாட்டில் மீண்டும் தோன்றியுள்ள அபாயங்களைக் கூறினான்.

மூச்சை மறந்து கேட்டார்கள் நண்பர்கள்.

''நானே புறப்படுகிறேன்'' என்று முடித்தான் அர்ச்சனன். ''எனக்கு உதவி புரியுங்கள்! பொக்கிஷத்தை எடுத்து வர வேண்டும் என்று மகாராஜா கூறினாரே தவிர எங்கிருக்கிறது, எப்படி எடுத்து வர வேண்டும் என்பதெல்லாம் கூறவில்லை. நானும் கேட்பது முறையாகாது என்று இருந்து விட்டேன். என்னோடு சிறு படை ஒன்று வருகிறது என்று மட்டும் மன்னர் கூறியிருக்கிறார். அது வலுவான படையா என்பது தெரியாது. போகிற விஷயமோ பயங்கரமான விஷயம். பொக்கிஷம் எங்கிருக்கிறது என்பது தெரிந்தால் வடக்கேயிருந்து கல்தான்கள்கூட ஓட்டமாக ஓடி வருவார்கள். இப்படி இருக்கும்போது எனக்கு நம்பிக்கையான ஒரு சிநேக பலம் முக்கியம் என்று கருதுகிறேன். நீங்கள் இருவரும் எனக்குப் பின்னால் சிறிது தூரம் இடைவெளி விட்டு என்னோடேயே வந்து கொண்டிருங்கள். அது எனக்கு உபயோகமாக இருக்கும்.''

''நிச்சயம் வருகிறோம். ஒரு நாழி தூரம் பின்னால் வருகிறோம்'' என்றார்கள் நண்பர்கள்.

மறுநாள் வேங்கட மகாராஜா வழியனுப்ப, அர்ச்சனன் புறப்பட்டான். அவன் பின்னால் வால்போல ஒரு சிறு படை நீண்டிருந்தது. ஏராளமான வேலையாட்கள் கூடாரங்கள் இத்யாதிகளைச் சுமந்து வந்தார்கள்.

படை நடுவில் அந்தப்புரப் பல்லக்குகளும் அதன் முன்னும் பின்னும் பெண் சேவகர்களும் மல்லர்களும் வந்தார்கள்.

சீக்கிரம் அவர்கள் சந்திரகிரிக் கோட்டையைவிட்டு மெள்ளப் பள்ளத்தில் இறங்கிச் சமவெளிகளை நோக்கி நடந்தார்கள்.

கோட்டையின் மலைப்பாங்கிலிருந்து கீழே இறங்க, வழி நெளிந்து நெளிந்து சென்றது.

இந்த நெளிவுகளில் படை ஒரு பாம்பு போல் மடிந்தவாறு ஊர்ந்தது.

காலையின் இளம் வெய்யிலும், பசுமையான காற்றும் மனத்தை வருடிவிட, அர்ச்சனன் ஒருவித மிதக்கும் மனத்துடன் இறங்கிக் கொண்டிருந்தான்.

கடைசி நெளிவில் இறங்கும்போது பார்வையைத் திருப்பி மேலே பார்க்க,

அங்கே இரண்டு நெளிவுகளுக்கு மேலே அந்தப்புரப் பல்லக்குகள் வருவது தெரிந்தது. அதில் ஒரு பல்லக்கின் மீது பார்வை விழ, அதன் மூடு திரைகள் ஏற்கனவே இறக்கப்பட்டிருப்பதை அவன் உணர்ந்தான்.

அடுத்த விநாடியில் அந்தப் பல்லக்கின் முகப்பில் ஒரு சந்திர உதயம் போல் முகம் தெரியத் திடுக்கிட்டு நின்றான்.

''யார் அது?'' என்று அவன் கவனிப்பதற்குள் பெண் காவலாளிகளின் உருவங்கள் அந்த முகத்தை மறைத்தன.

அடுத்த நெளிவுவரை காத்திருக்க வேண்டி வந்தது.

இரண்டாவது முறையும் அதே போன்று நிலா வதனம் பல்லக்கில் தெரிய, உடலில் ஒரு சிலிர்ப்பு ஓடியது.

யார் அது?

அவள்தானா?

அர்ச்சனன் பிரமிக்க, வெகு பின்னால் உச்சத்து முதல் நெளிவிலிருந்து தாங்கள் பின்பற்றுகிறோம் என்பதைக் காண்பிக்க ராஜரும் கிருஷ்ண சந்திரனும் குதிரையில் இருந்தவாறே கை தூக்கிக் காண்பித்தார்கள்.

அப்போது அவனது தோளைத் தொட்டு ஒரு அதிகாரி, ''ஐயா! தாங்கள் நின்றால் எல்லோரும் நின்று விடுவார்கள். முன்னால் போகலாம்!'' என்று சொல்ல,

அவரது விருத்தியாப்பியத் தோற்றம் அவனது கோபத்தை வளர விடாமல் தடுத்தது.

மேலே சிலிர்த்துப் போக அவன் மனத்தில் ஒரு புரியாத தாபம் எழுந்து கொண்டிருந்தது.

எதையோ இழந்தோம் என்றோ, இழக்கிறோம் என்றோ ஒரு நினைவு அலைபோல் மீண்டும் மீண்டும் புரள,

சரம் பாய்ந்த கண்களுடன் அவன் குதிரையை நடத்திக் கொண்டிருந்தான்.

(தொடரும்)

விடைகள் :

1. (இ) பதினைந்தாம் நூற்றாண்டு.
2. (ஆ) நீச்சல்
3. (ஈ) ஐந்து – இவை உலகின் ஐந்து கண்டங்களைக் குறிக்கின்றன.
4. (இ) டேவிஸ் டென்னிஸ் – பெண்களுக்கான தேசிய ட்ராஃபி இது.
5. (ஆ) 1877 ஆம் ஆண்டில்.
6. (இ) 6270 பவுண்டு.
7. (இ) இங்கிலாந்தின் லார்ட்ஸ் மைதானம்.
8. (ஆ) ஹாலந்து. பதினேழாம் நூற்றாண்டு.
9. (அ) சார்லோட்டே டாட். 1887ல் இவள் வென்றபோது வயது 15 வருஷம் எட்டு மாதம்.
10. (ஈ) சீனர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே விளையாடியதுண்டு என்று தெரிகிறது. எனினும் எங்கு தோன்றியது என்பது நிச்சயமாய் தெரியவில்லை.

பத்தும் சரியானால் — அற்புதம்
6 முதல் 9 — அருமை
3 முதல் 5 — மகிழ்ச்சி
அதற்கும் கீழே — சோகம்

அமைப்பு **'யெஸ் பால்'**



அவர்கள் பார்வை அலாதிதான்!

மலர் மன்னன்

"சிறந்த படங்களைத் தேர்ந்தெடுப்பதில் பெரியவர்களின் முடிவும் குழந்தைகளின் கருத்தும் ஒத்துப்போவதில்லை." என்று இந்திய குழந்தைகள் திரைப்படச் சங்கத் தலைவர் வி. சாந்தாராம் கூறியது இந்தத் தடவையும் நிரூபணமாகி விட்டது! சோவியத் யூனியன் தயாரித்த 'பனிக் கன்னி'யை ஒன்பதிலிருந்து பதினைந்து வயது வரையிலான குழந்தைகளுக்குரிய படங்களில் சிறந்தது என ஜூரிகள் முடிவு செய்து 'தங்க யானை' விருதை அதற்கு அளித்தபோது, குழந்தைகள் மட்டுமே இடம் பெற்ற தேர்வுக் குழு சினுவின் 'இளம் ஆசிரியை'யைச் சிறந்த படமாகத் தேர்ந்தெடுத்தது! அவர்கள் பார்வையே அலாதிதான்!

'குளிர்காலம் வரும்போது அந்தக் காலத்துக்கே உரிய தேவதைகளும் வந்து சேருவார்கள். அவர்கள் போகு மிடமெல்லாம் பனியால் உறைந்து போகும். குளிர் காலத்தில் வெளியே அதிக நேரம் அலையக் கூடாது. அலைந்தால் எந்தப் பனித் தேவதையின் ஸ்பரிசமாவது பட்டு நீங்களும் பனியால் உறைந்து போய்விடுவீர்கள்' என்று ருஷ்ய கிராமாந்தரப் பாட்டிமார்கள் தங்கள் பேரப்பிள்ளைகளுக்குச் சொல்லும் நாடோடிக் கதைகளில் ஒன்றுதான் தங்க யானை விருது பெற்ற 'பனிக் கன்னி'. பனித் தேவதை யொருத்தி மனிதப் பெண்ணாக வடிவ மெடுத்து மட்பாண்டக் கலைஞன் ஒருவனிடம் மனத்தைப் பறிகொடுக்கும் கதை. இந்தப் படத்தின் இயக்குநருக்குச் சிறந்த இயக்குநருக்கான வெள்ளி யானை விருதும் கிடைத்தது.

நான்கிலிருந்து எட்டு வயது வரையிலான குழந்தைகளுக்குரிய படங்களில் தங்க யானை விருது பெற்ற படம் 'கொட்கர் கோவோ கிராமத்து வீடு' என்ற கார்ட்டூன் படம். செக்கோஸ்லாவேகியா தயாரித்த படம் இது. வீட்டைத் தலைகீழாகக் கட்டி விட்டு அதை நிமிர்த்தப்போய்ச் சாலையின் நட்ட நடுவில் வீட்டை அமைத்துக் கொண்டு அவஸ்தைப்படும் மனிதனின் கதை. சாலையில் விரையும் வண்டிகள் எல்லாம் வீட்டுக்குள்ளேயே புகுந்து புறப்படுகின்றன!

✖ குழந்தைகள் திரைப்பட விழாவைத் துவக்கி வைக்கிறார் மத்திய தகவல், ஒலிபரப்பு அமைச்சர் வசந்த் சாத்தே. வலப்புறம் தொப்பி அணிந்திருப்பவர் சாந்தாராம்.



✖ தங்க யானை விருதுபெற்ற சோவியத் திரைப்படம் பனிக் கன்னியில் ஒரு காட்சி.

வண்டிகளை ஓட்டி வருகிறவர்கள் சர்வ சுதந்திரத்துடன் அந்த வீட்டிலேயே இளைப்பாறி விட்டும் போகிறார்கள். கடைசியில் ஒரு பெரிய லாரி வந்து வீட்டையே அலாக்காகத் தூக்கிக் கொண்டு போய்விடுகிறது!

மராத்திப் படமான 'பால சிவாஜி' சத்ரபதி சிவாஜியின் இளம் பருவ நிகழ்ச்சிகள் சிலவற்றை வர்ணிப்பது. குழந்தைகளின் தேர்வுக்குழு இதை இரண்டாவது சிறந்த படமாகத் தேர்ந்தெடுத்தது. 'பால சிவாஜி'யாக நடித்த ஆனந்த் ஜோஷியைச் சிறந்த நடிகருகப் பெரியவர்களும் தேர்ந் தெடுத்தார்கள்.

சிறந்த நடிகைக்கான வெள்ளி யானை விருது பதின்மூன்று வயதுச் சிறுமி ஸ்டானிஸ்லாவாவுக்குக் கிடைத்தது. 'ஸோனாட்டா ஃபார் ஜிஞ்சர்' என்ற செக்கோஸ்லாவேகியப்



படத்தின் கதாநாயகி இந்தச் சிறுமி. திறமை இருந்தும் திட சங்கற்பம் இல்லாததால் முன்னுக்கு வரும் வாய்ப்பைக் கோட்டை விடும் சிறுமியைப் பற்றிய கதை இது. சிறந்த பியானோ இசைக் கலைஞராக மலர்வதற்கான திறமை அவளுக்கு இருக்கிறது. அதே சமயம் கால் பந்தாட்டத்திலும் அவளால் திறமையைக் காட்ட முடிகிறது. ஆனால் இரண்டு துறைகளுக்கும் முறையாக நேரம் ஒதுக்கிக் கொண்டு முன்னேறத் தவறிவிடுவதால் இரண்டிலுமே அவள் வாய்ப்பிழக்க நேரிட்டுவிடுகிறது. இருந்தாலும் அவளுக்கு நம்பிக்கை யூட்டித் தைரியமளிக்க ஒருவர் இருக்கிறார் - அவளுடைய பியானோ ஆசிரியர்!

விழாவில் திரையிடப்பட்ட மற்றப் படங்களில் குறிப்பிடத்தக்க ஒன்று:

ஸ்லாட் டேஸ் (போலந்து): இரண்டாவது உலகப் போரின்போது போலந்து நாட்டு ஊர் ஒன்றில் நிகழ்வதாகக் காட்டப்படும் கதை. இரண்டு சிறுவர்கள். ஒருவன் போலந்துக்காரன். மற்றவன் யூத இனத்தைச் சேர்ந்தவன். இவர்களுக்குச் சிநேகிதியாக ஒரு ஜெர்மன் சிறுமி. பெரியவர்கள் இனத்தின் பெயராலும் தேசத்தின் பெயராலும் ஒருவரை யொருவர் மாய்த்துக் கொள்கையில் இந்தக் குழந்தைகள் தங்கள் நட்பின் பிணைப்பை மேலும் இறுக்கமாக்கிக் கொள்கின்றன. அருமையான படம்!

குழந்தைகளை வெகுவாகக் கவரக்கூடிய கார்ட்டூன் படங்களும் பொம்மைகள் இயங்கும் படங்களும் அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து வந்திருந்தன. சிறந்த பொம்மை இயக்கப் படத்துக்கான வெள்ளி யானை விருதைப் பல்கேரியாவுடன் சமமாகப் பகிர்ந்து கொண்டது 'கிறிஸ்துமஸ் பரிசு' என்ற அமெரிக்கப் படம். பொம்மைகளை இயக்கியவர்களுக்காக வழங்கப்பட்டது இந்த விருது.


விழாவில் இடம் பெற்ற படங்களில் மற்றொரு குறிப்பிடத் தக்க படம் 'யுனிவர்ஸ்' என்ற அமெரிக்கத் துண்டுப் படம். விண்வெளி விஞ்ஞானக் கதை குழந்தைகளுக்கும் புரியும்படியாக, சுவாரஸ்யமாக விளக்கும் படம் இது.

இத்தவிழாவின்போது எழுந்த ஒருசிந்தனை: குழந்தைகளுக்கென்று தனியாக ஒரு திரையரங்கை இந்தியாவிலேயே முதலில் நிறுவிய பெருமை தமிழ் நாட்டையே சாரும். பழைய சட்ட மன்றம் பாலர் அரங்கமாக மாற்றி அமைக்கப்பட்டது. ஆனால் இந்தப் பாலர் அரங்கம் இப்போது கலைவாணர் அரங்கமாக விளங்கிக் கொண்டிருக்கிறது! கலைவாணர் பெயரைச் சூட்டப் புதிதாக உருவாகும் வேறு எத்தனையோ பல கட்டிடங்கள் இல்லையா?

※'பால் சிவாஜி - சிறந்த நடிகருக்கான வெள்ளி யானை விருது பெற்ற ஆனந்த் ஜோஷி - இளம் சிவாஜியாக.

※ ஸ்லாட் டேஸ் (போலந்து)





அநீதி உருவாக்கும் ஆவேசம்!

“துரியோதனின் வசை மொழியைக் கேட்டு விதுரன் குழப்பமெய்தவில்லை'' என்கிறார் பாரதியார். அவன் அமைதியாகப் பதிலளிக்கிறான்:

சென்றது மிருந்தாலு
  மினியென்னேடா?
செய்கை நெறி யறியாத
  சிறியாய், நின்னைப்
பொன்றாத வழிசெய்ய
  முயன்று பார்த்தேன்;
பொல்லாத விதி என்னைப்
  புறங் கண்டா னால்...

இதற்கு மேல் விதுரனும் கடு சொல் சொல்கிறான். தன்னை வேசி மகன் என்று மறை பொருளாகச் சொன்ன துரியோதனனுக்கு அதே பாஷையில் திருப்பிக் கொடுக்கிறான் பாரதி படைத்த விதுரன்.

ஆணவக்காரர் ஆட்சியிலே அமைச்சராகத் தகுதி யுடையவர்களுக்கு வேண்டுங் குணங்களை விதுரன் பட்டியல் போட்டுக் காட்டுகிறான்.

வேசை மாதர், சிறுமைக்குத் தலை வணங்கும் அடிமைகள், புலங் கெட்ட புலவர்கள், நீசர்கள், மூடவர்கள், பித்தர்கள் — இவர்களே, மதிகெட்ட மன்னன் ஆட்சியிலே மந்திரிகளாக இருக்கத் தகுந்தவர்களாம்.

பாரதி அன்னியராட்சியிலே வாழ்ந்தவர். அந்த ஆட்சியிலே அமைச்சர் பதவி வகித்த நம்மவர்களை நினைத்துத்தான் எட்டயபுரம் மகாகவி இதனைக் கூறியிருக்க வேண்டும். ஏனெனில் இந்த வருணனை வியாசரிடத்திலில்லை: வில்லியிடமும் இல்லையே!

இப்படி உரைத்த விதுரன் மறு கணமே அரசவையை விட்டு வெளியேறியிருக்க வேண்டும். துரியோதனனும் விடை கொடுத்து விட்டானே. இந்த இடத்திலே,

'பதி வுறுவோம் புவியிலெனக்
  கலி மகிழ்ந்தான்.
பாரதப் போர் வருமென்று
  தேவர் ஆர்த்தார்!''

என்கிறார் பாரதியார்.

பாஞ்சாலி துரியோதனனுடைய அரசவையில் வாதாடுங் கட்டத்திலே. 'பாரதம்' என்னும் பெயரைப் பாரதிதான் பயன்படுத்தியிருக்கிறார். வியாசரிலோ வில்லியிலோ இச்சொல் இல்லை. காரணம், தன் காலத்துப் பாரதத்தை நினைவில் வைத்தே பாரதி பாஞ்சாலி சபதத்தைப் படைத்தது தான்.

சூதாட்டம் தொடர்கிறது. தனது நாட்டையே பந்தயம் வைத்துத் தருமன் ஆடுகிறான். காயை உருட்டி ஒரு கணத்தில் நாட்டை வென்றுவிட்டான் மாயச் சகுனி. இந்த நிகழ்ச்சியைக் கூறுமிடத்து, தன்னை மறந்து, தனது உணர்ச்சியைப் பாரதியார் வெளிப்படுத்துகிறார்.

''கோயிற் பூசைசெய்வோர் — சிலையைக்
  கொண்டு விற்றல் போலும்,
வாயில் காத்து நிற்போன் — வீட்டை
  வைத்திழத்தல் போலும்
ஆயிரங்களான — நீதி
  யவை உணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான் — சிச்சீ!
  சிறியர் செய்கை செய்தான்.
நாட்டு மாந்தரெல்லாம் — தம்போல்
  நரர்களென்று கருதார்;
ஆட்டு மந்தையாமென் — றுலகை
  அரசரெண்ணி விட்டார்
காட்டு முண்மை நூல்கள் — பலதாங்
  காட்டினார்க ளேனும்
நாட்டு ராஜநீதி — மனிதர்
  நன்கு செய்ய வில்லை.
ஓரஞ் செய்திடாமே — தருமத்
  துறுதி கொன்றிடாமே;
சோரஞ் செய்திடாமே — பிறரைத்
  துயரில் வீழ்த்திடாமே,
ஊரை யாளும் முறைமை — உலகில்
  ஓர்புறத்துமில்லை.
சாரமற்ற வார்த்தை! — மேலே
  சரிதை சொல்லு கின்றோம்.''

''வாயில் காத்து நிற்போன் வீட்டை வைத்திழத்தல் போலும் — கோயில் பூசை செய்வோன் சிலையைக் கொண்டு விற்றல் போலும்'' என்று பாரதி சொன்ன உவமைகள் அவர்தம் சொந்தக் கற்பனைகளே. வேறு எந்தக் கவிஞரிடமிருந்தும் இரவல் பெற்றவையல்ல.

வியாசரும் வில்லியாரும் தருமனை ''அறத்தின் வடிவம்'' என்கின்றனர். ''பொறுமையின் பொக்கிஷம்'' என்றும் போற்றுகின்றனர். பாரதியாருக்கும் இது உடன்பாடுதான் என்றாலும், தேசத்தைச் சூதாட்டத்தில் தோற்குமிடத்தே தருமனை மன்னிக்க அவரால் முடியவில்லை. அதனால் ''சிச்சீ! சிறியர் செய்கை செய்தான்'' என்கிறார். குடிமக்களை ஆட்டு மந்தை என்று தருமன் கருதிவிட்டான் என்று அவன்மீது குற்றம் சாட்டுகின்றார். அநீதி உருவாக்கும் ஆவேசம் இது!

ம.பொ.சி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: P.S. Mani, Layout Artist: Kalpana, Editor: K. Rajendran



மு. மு. நாகலிங்க நாடார் சன்ஸ்

உரிமையாளர்கள் : ஸ்ரீ நாகலிங்க விலாஸ் ஆயில் மில்ஸ, கொல்லம்—கேரளா

போன் : ஆபீஸ் : 2244, 4484, மில்ஸ் : 2266, 4611

Trade Enquiries Solicited from wholesale dealers only

REGISTERED No. IM 4392
Registered as a Newspaper in Sri Lanka